# தேசிய விழுமியங்கள்

## ஐந்தாம் பருவம்

## மனிதவள மாண்புத்துறை


## NGM COLLEGE

Re - Accredited with 'A' Grde by NAAC & ISO 9001 : 2015 Certified
Affiliated to Bharathiar University, Coimbatore
POLLACHI - 642 001, Tamil Nadu
**✆ : 04259 - 234868, 234870**
E- mail : ngm@ngmc.org
Website : www.ngmc.org

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 2010 |
| இரண்டாம் பதிப்பு | : | 2011 |
| மூன்றாம் பதிப்பு | : | 2014 |
| நான்காம் பதிப்பு | : | 2015 |
| ஐந்தாம் பதிப்பு | : | 2019 |

அச்சிட்டோர் :
**ருக்மணி ஆப்செட் பிரஸ்**
E-32, சிட்கோ தொழிற்பேட்டை,
கோயமுத்தூர் - 641 021.
போன் : 0422-2672789

# அணிந்துரை

ஒவ்வொரு இளைஞர்களும் தங்களை முதலில் உயர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு தங்கள் உயர்வுக்குக் காரணமாக இருந்த சமுதாயத்தை உயர்த்த வேண்டும்.

இந்த உன்னத நோக்கத்தையும், அந்த நோக்கத்தை அடையத் தேவையான தகுதியையும் வைராக்கியத்தையும் தருவதே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும்.

இன்றைய கல்வி புறமேம்பாட்டோடு நின்றுவிடுகிறது. இது அகத்தை அறிந்து கொள்ளவோ, அதை மேம்படுத்தவோ எந்தவொரு முயற்சியும் செய்வதில்லை.

இந்தக் குறையைப் போக்கும் வண்ணம் 1987 ஆம் ஆண்டில் **''அறவியலும் பண்பாடும்''** என்ற ஒரு பாடத்திட்டத்தை நாம் என்.ஜி. எம். கல்லூரியில் துவக்கி, அதை இன்று வரையில் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றோம். அண்மையில் அதைச் சற்று மேம்படுத்தி **''மனிதவள மாண்பு கல்வி ''** என்ற வகையில் மிகுந்த முனைப்போடு செயல்படுத்தி வருகின்றோம்.

நம் இளைஞர்கள் வித்தியாசமாகச் சிந்தித்துத் துணிச்சலோடு செயல்பட்டுச் செயற்கரிய காரியங்களைச் செய்து சரித்திரத்தில் இடம்பெற வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். அரிதான மனிதப்பிறப்பை அலட்சியம் செய்யாமல், ' கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வாழாமல் உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்து இந்த மனிதப் பிறப்பை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

வந்தேன், இருந்தேன்,போனேன் என்று இல்லாமல் சாதனையாளனாக உயர முற்படவேண்டும்.

புறத்தாக்கங்கள் எப்படி இருப்பினும் அகத்திலே ஒரு பக்குவத்தைச் செய்து கொண்டால் இந்தப் போட்டிகள் நிறைந்த பொருளாதாரச் சூழ்நிலையில் நாம் நிச்சயம் வென்றுவர முடியும் என்கின்ற துணிச்சலையும், தன்னம்பிக்கையையும் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்படி நோக்கங்களைக் கீழ்க்காணும் ஆறு விழுமியங்கள் ஆறு பருவங்களில் வழங்கப்படுகின்றன. அவை

1. தனிமனித விழுமியங்கள்
2. குடும்ப விழுமியங்கள்
3. பணிசார்ந்த விழுமியங்கள்

4. சமுதாய விழுமியங்கள்

5. தேசிய விழுமியங்கள்

6. உலகளாவிய விழுமியங்கள் என்பனவாகும்.

இந்தப் பாடத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதற்கென்று தனியாக ஒரு துறையை ஏற்படுத்தியுள்ளோம். தகுதிபடைத்த ஆசிரியர்கள், பாடப்புத்தகங்கள் , கட்டமைப்பு வசதிகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் தேர்வுமுறைகள் என்று ஏற்படுத்தியுள்ளோம்.

இக்கல்லூரியில் வேதாத்திரி மகரிஷியின் உடற்பயிற்சி, காயகல்பப் பயிற்சி, தியானப்பயிற்சி மற்றும் பல்வேறு குணநலமேம்பாட்டுப் பயிற்சிகள் அடங்கிய, ‘மனவளக்கலை யோகா’வானது இளநிலைப்படிப்பு மாணவர்களுக்கு ஒரு பண்பாட்டுக்கல்வியாக வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்துக் கல்லூரிகளிலும் இப்பாடத்திட்டத்தைச் செயல்படுத்தி நம் இளைஞர்களிடம் உள்ள அளவற்ற அறிவை முழுமையாக வெளிபடுத்தி, பாரதத்தை ஒரு வல்லரசாக உயர்த்தவதே நமது நோக்கமாகும்.

**டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**
தலைவர், என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | செம்மாந்த குடியுரிமை | .... | 7 |
| 2. | வளர்ந்துவரும் இந்தியா | ..... | 13 |
| 3. | வெளிநாட்டவர் பார்வையில் இந்தியா | ..... | 19 |
| 4. | இந்திய கலாச்சாரத்தின் மேன்மை | ..... | 28 |
| 5. | இந்தியாவும் அமைதியும் | ..... | 34 |
| 6. | இந்தியா உலகிற்கு வழங்கும் செய்தி | ..... | 42 |
| 7. | தொண்டும் தியாகமும் | ..... | 52 |
| 8. | வேற்றுமையில் ஒற்றுமை | ..... | 57 |
| 9. | இந்தியாவும் ஆன்மீகமும் | ..... | 65 |
| 10(A). | தவம் | ..... | 72 |
| (B). | யோகாசனங்கள் | ..... | 72 |

# 1. செம்மாந்த குடியுரிமை

**Dr. R. முத்துக்குமரன்**
வரலாற்றுத் துறைத் தலைவர்
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

**முன்னுரை :**

"They alone live who live for others
the rest are more dead than alive" - Swami Vivekananda

இந்திய அரசியலமைப்பின் முகப்புரையின்படி இந்தியா இறையாண்மையுடைய, சமதர்ம அடிப்படையிலான, சமயச்சார்பற்ற, மக்களாட்சியைச் சேர்ந்த ஒரு குடியரசு நாடாகும். ஜனநாயகப்பாரம்பரியம் கொண்ட நம்நாடு அதன் பாரம்பரிய கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கு பல்வேறு சவால்களைச் சந்தித்த போதிலும் அவற்றுள் மூன்று முக்கியமான சவால்களை இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவை, **1. அரசியல்வாதிகளிடம் பொறுப்பின்மை 2.பொதுமக்களிடம் தங்களுடைய உரிமைகள் கடமைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை 3. தாங்கள் ஆற்றுகின்ற பணியின் மகத்துவம் அறிந்திராத அதிகாரிகளின் அலட்சியம் இவை மூன்றும் மிக முக்கியமானவையாகும்.**

இந்திய மக்கள் செம்மாந்த குடியுரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்திய அரசியலமைப்பு சில அடிப்படை உரிமைகளையும் அடிப்படை கடமைகளையும் வரையறுத்துள்ளது. "**அடிப்படை உரிமைகளையும், அடிப்படைக் கடமைகளையும் சரியாகப் பயன்படுத்தி தனக்கும் தான் சார்ந்திருக்கின்ற சமுதாயத்திற்கும், தேசத்திற்கும் பயன்படும்படி வாழ்வதே செம்மாந்த குடியுரிமையாகும்**".

**அடிப்படை உரிமைகள் :**

- **சமத்துவ உரிமை :**
  சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் அரசியல், பொருளாதார சமூக நீதியுடன் கூடிய சமத்துவ உரிமைகள்.
- **சுதந்திர உரிமை**
  தனிமனிதப் பேச்சுரிமை, கருத்து வெளிப்படுத்தும் சுதந்திர உரிமைகள்
- **சமய சுதந்திர உரிமை**
  அனைவரும் தங்கள் நம்பிக்கைக்கு ஏற்றவாறு வழிபடும் சமய சுதந்திரம்.

- **அரசியல் அமைப்புப் பரிகார உரிமை**

  குடிமக்கள் அனைவரும் சட்ட முறைப்படி பரிகாரம் பெற அரசியல் அமைப்பு வழிவகை செய்யவும் உரிமை.

- **சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பு உரிமை**

  14 வயதுக்குக் குறைவான சிறுவர், சிறுமியரை வேலைக்கு அமர்த்தி சமூக நீதிக்கு எதிராகச் செயல்படுவர்களுக்கு எதிராக சட்டத்தின் மூலம் தீர்வு காணும் உரிமை.

- **பண்பாடு மற்றும் கல்வி உரிமை**

  அனைவரும் தங்கள் பண்பாடு சார்ந்த கல்விபெறும் உரிமை

- **சொத்து உரிமை**

  சட்டத்தின் அனுமதிக்கு உட்பட்டு, அனைவரும் சொத்து வைத்துக்கொள்ளும் உரிமை.

### அடிப்படைக் கடமைகள்

- அரசியலமைப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு, தேசியக்கொடி மற்றும் தேசியகீதத்தினை மதித்தல்.
- தேச சுதந்திரத்திற்குப் பாடுபட்ட சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் கொள்கை வழி நிற்றல்.
- தேசத்தின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையைப் பேணுதல்.
- தேசத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது விழிப்புடன் இருத்தல்.
- சமய நல்லிணக்கத்தைப் போற்றிப் பேணுவதன் மூலம் பாரம்பரியமிக்க கலாச்சாரப் பெருமைகளைப் பாதுகாத்தல்.
- சுற்றுப்புறச் சூழலிற்கும், காட்டு விலங்குகளுக்கும் தீங்கு நேராது பாதுகாத்தல்
- மனித நேயத்துடன் கூடிய அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்தல்
- பொதுச்சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்துத் தேசத்தை மேன்மையடையச் செய்தல்.

இத்தகைய அடிப்படைக் கடமைகளைப்பற்றி அறிந்தவர்கள் அந்தக் கடமைகளை முறையாகச் செய்வதன் மூலமே செம்மாந்த குடியுரிமைக்கு வழி வகுக்கும்.

### செம்மாந்த குடியுரிமையின் அவசியம் :

எட்டாக்கனியாக இருந்த உயர்கல்வி இன்று அனைவருக்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய நிலைக்கு வந்துள்ளது. உலக வரலாற்றில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு புரட்சிகள் ஆதிக்கம் புரிந்துள்ளதை நாம் அறிவோம். அந்த வரிசையில் தற்பொழுது நிகழ்ந்து வரும் அறிவுப் புரட்சியின் மூலம் ஏற்பட்டுள்ள அறிவுசார் உலகத்தில் (Knowledge Era) வாழ்கின்ற நம்மிடையே பொருள் ஈட்டுவதில் ஏற்படுகின்ற ஆர்வம் தேச

நலத்திலும், சமுதாய நலத்திலும் குறைந்து வருகிறது. இவற்றிற்கு தீர்வு காண தேசிய கட்டமைப்புத் திட்டங்களில் மாணவர்களையும், இளைஞர்களையும் பயன்படுத்தி பள்ளி, கல்லூரிகளில் தேசிய மாணவர்படை (NCC), தேசிய சமூகப்பணி (NSS) என்பதற்குச் சரியான செயல்வடிவம் கொடுக்கப்பட வேண்டும். தனக்காக வாழ்வது மட்டுமே வாழ்க்கை யில்லையென்றும், சமுதாயத்துக்காக வாழ்வதே வாழ்க்கையென்றும் போதிக்கப்பட வேண்டும்.

நமது வாழ்க்கை அரசிடம் இல்லை. படித்து வாங்கிய பட்டங்களில் இல்லை. வாழ்க்கை நமது தோள்களில் இருக்கிறது. துணிவில் இருக்கிறது. முயற்சியிலும், உழைப்பிலும் இருக்கிறதென்று நம்புங்கள். நம்பிக்கையை மூலதனமாக்கி நமது கடமையையும், உரிமைகளையும் சரியான நிலையில் பயன்படுத்துதல் வேண்டும்.

''நான் நிற்பதற்கு மட்டும் ஓர் இடத்தைத் தாருங்கள். இந்தப் பூமிப் பந்தையே நெம்புகோலால் புரட்டிக் காட்டுகிறேன்...'' என்றான் அறிவியல் மேதை ஆர்க்கிமிடிஸ். கொழுந்து விட்டெரியும் அந்த நம்பிக்கையே இப்போது இளைஞர்களுக்கு வேண்டும். இந்தியாவில் ஆங்கில ஆட்சியை நிறுவக் காரணமான ராபர்ட் கிளைவுக்கு அப்போது 25 வயது தான். நியூட்டன் புவிஈர்ப்புச் சக்தியை உலகுக்கு நிரூபித்தபோது 24 வயது தான். மார்க்கோனி 27 வயதில்தான் வானொலியைக் கண்டுபிடித்தார். 29 வயதில்தான் 'பெல்' என்பவர் தொலைபேசியைக் கண்டுபிடித்து உலகை வியக்க வைத்தார். பாரதியார் 39 வயதிற்குள் மகாகவியானார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 29 வயதிற்குள் புகழ் பெற்று மறைந்தார். இவ்வாறு சிகரத்தைத் தொட்டவர்கள் சிந்தனையைத் தூண்டவில்லையா? ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கிவிட்டால் அதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்றார் அறிஞர் வால்டேர். அத்தகைய சமூக, தேச நலனைக் கொண்ட சிந்தனையின் மூலம் உருவாவது தான் செம்மாந்த குடியுரிமை.

## செம்மாந்த குடியுரிமையில் சிறந்தவர்கள் :

சமுதாயநலம் தேசநலம் சார்ந்து செயல்பட்ட சிலதலைவர்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, தான் தங்கியிருந்த அரசு இல்லத்தில் அரசு பணிகளைப் பார்க்கும்போது பயன்படுத்திய மின்சாரப் பயன்பாட்டிற்கென்று அரசு செலவிலும், தன் சொந்தப் பணிகளுக்குப் பயன்படுத்திய மின்சாரப்பயன்பாட்டிற்கென்று தன் சொந்த செலவிலும் பணம் செலுத்தி வந்த முறையைப் பார்க்கின்றோம்.

அறிஞர் அண்ணாதுரை அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கோடைக்காலத்தில் தன் குடும்பத்தாருடன் கொடைக்கானலுக்குச் சுற்றுலா சென்றபோது தான் மட்டும் அரசு காரில் சென்று அரசு சுற்றுலா இல்லத்தில் தங்கிக் கொண்டார். தன் குடும்பத்தினருக்கான செலவைத் தன் சொந்தப் பணத்தில் செய்துள்ளார், முன்னாள் குடியரசுத் தலைவர் பாரதரத்னா

அப்துல்கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்த பொழுது தன் உறவினர்கள் குடியரசுத் தலைவர் மாளிகையில் விருந்தினர்களாகத் தங்கியிருந்தபொழுது அவர்களுக்கான செலவுகளைத் தன் சொந்தப் பணத்திலிருந்து கொடுத்துள்ளார் என்பதை அறிகிறோம்.

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்திற்கு அருகில் உள்ள ஓடந்துறை என்ற ஊராட்சி மன்றத்தின் தலைவர் திரு. சண்முகம் அவர்கள் தனது சீரிய பணியின் மூலம் தன்னிறைவு பெற்ற கிராமத்தை உருவாக்கியதோடு மட்டுமல்லாது தன் ஊராட்சிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் தேவையான மின்சாரத்தை காற்றாலை மூலம் உற்பத்தி செய்து எஞ்சிய மின்சாரத்தை அரசுக்கு விற்கின்ற நிலைக்குத் தனது பணியைச் சிறப்பாக செய்து வருகிறார். இத்தகைய சமுதாய நலம் சார்ந்த தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுகின்ற இவர்கள் செம்மாந்த குடியுரிமைக்கு உதாரணமாகத் திகழ்பவர்கள் ஆவார்கள்.

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (குறள் 953)

என்பது குறள்.

உண்மையாக உயர்ந்த குடியில் பிறந்தவருக்கு மனமகிழ்வும், ஈகையும் இனிய சொல்லும், பிறரை இகழாமையும் ஆகிய நான்கும் நற்பண்புகளாகும்.

## ஜவஹர்லால் நேருவின் இந்திய முன்னோக்குப் பார்வை:

ஆசியஜோதி என்றழைக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியாவின் முதல் பிரதம மந்திரி ஆவார். அவர் இந்தியாவின் பெரும் அரசியல் மேதையாகவும், சிந்தனையாளராகவும் திகழ்ந்தவர். அவர் ஓர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்து ஏழு ஆண்டுகளாக இங்கிலாந்தில் பயின்று பட்டம் பெற்றவர். அவர் சிந்தனைகளில் மேற்கத்தியவராக இருந்தார். பின்னர் அவர் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் இந்திய சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார். மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டார். இது அவரது சிந்தனைகளின் மாற்றத்திற்கு வழிவகுத்தது. அவருடைய மேற்கத்திய சிந்தனைகள் இந்திய யதார்த்தங்களுடன் கலந்திருந்தன. எனவே தனிமனித சுதந்திரம், தேசியசுதந்திரம், தேசபக்தி, தேசியவாதம், சமத்துவம், ஜனநாயகம், சர்வதேசமயமாக்கல், மதச்சார்பின்மை, மனிதகுல நலன் பற்றிய அவரது கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

## தனிமனித சுதந்திரம்:

அவர் மேற்கத்திய தாராளவாத பாரம்பரிய அடிப்படையில் தனிநபருக்கு சுதந்திரம் அவசியம் வேண்டும் என எண்ணினார். ஸ்ரீஅரவிந்தரைப் போலவே, தனிப்பட்ட சுதந்திரம் தடையானால் மனித வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவரும் நம்பினார். அவர் மேற்கத்திய மற்றும் இந்திய பார்வையை ஒருங்கிணைத்தார். ஜவஹர்லால்

நேரு தேசிய சுதந்திரத்தின் ஒரு பெரிய போராளியாகத் திகழ்ந்தார். சுதந்திரப் போராட்டத்தை மகாத்மா காந்தியுடன் இணைந்து வழிநடத்தியவர். பல முறை சிறையில் அடைக்கப்பட்டார். தேசியவாதத்தைப் பொறுத்தவரையில் அவருடைய கருத்துகள், அவரது ஒத்துழைப்பு, தேசபக்தி மற்றும் நாட்டின் கடந்தகால மரபுவழித் தாக்கத்தின் விளைவுகளாகும். கடந்த காலத்தை குருட்டுத்தனமாக வழிபடுவது எவ்வளவு தவறோ அவ்வளவு தவறுதான் அதனை முற்றிலும் வெறுத்து ஒதுக்குவது ஆகும். ஏனெனில் இவ்விரண்டின் இணைப்பால் தான் நல்ல எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்று நேரு நம்பினார்.

**நவபாரச்சிற்பி :**

நேரு சுதந்திர இந்தியாவின் முக்கிய தலைவராக இருந்தார். நேருதான் நவீன இந்தியாவை வடிவமைத்தவர் என்று சொன்னால் மிகையாகாது. அரசியல் மற்றும் தத்துவத் துறையில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் காந்திஜி அவரை தன் அரசியல் வாரிசாக அறிவித்தார். நேரு இந்தியாவின் சிறப்பு இயல்புகளான சகிப்புத்தன்மை, மதிநுட்பம் மற்றும் அன்பு ஆகியவற்றை பறைசாற்றும் பிரதிநிதியாக திகழ்ந்தார். நேரு தன்னை எப்பொழுதும் சர்வதேச அரசியல் மற்றும் பிரச்சினைகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதினால் இந்தியாவின் அரசியலை சர்வதேச கண்ணோட்டத்தில் பார்த்தார்.

## நேருவின் அரசியல் மற்றும் தேசிய சாதனைகள்:

- ஒரு வலுவான இந்திய அரசியலமைப்பை உருவாக்க அம்பேத்காருடன் உறுதுணையாக இருந்தார்.
- சுதேச அரசுகளை இணைத்து ஐக்கிய இந்தியாவை உருவாக்க பட்டேலுடன் சேர்ந்து தோள் கொடுத்தார்.
- இந்தியா பிரிக்கப்பட்ட பிறகு அகதிகள் குடியேற்றத்திற்கு முக்கிய பங்கு வகித்தார்.
- இந்திய தேர்தல் ஆணையம் அமையப் பாடுபட்டார்.
- உறுதியான வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கினார்.
- சிந்து நதி நீர் ஒப்பந்தம் உருவாகக் காரணமாக இருந்தார்.
- உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் பெரும் பங்காற்றினார்.
- பக்ராநங்கல் அணை திட்டம் உருவாக காரணமாக இருந்தார்.
- பிலாய் உருக்கு ஆலையை உருவாக்கினார்.
- பாபா அணு ஆராய்ச்சி மையம் ஏற்படுத்தினார்.

- ✤ பொகாரோ ஸ்டீல் லிமிடெட் ஏற்படக் காரணமாக இருந்தார்.
- ✤ பஞ்சசீலக் கொள்கையை (ஐந்தாண்டு திட்டம்) உருவாக்கினார்.
- ✤ 1955 ஆம் ஆண்டு நேருவிற்கு அவருடைய சாதனைக்காக இந்தியாவின் மிக உயரிய குடிமகனுக்காகக் கொடுக்கப்படும் "பாரத் ரத்னா" விருது அப்போதய குடியரசுத்தலைவர் திரு. ராஜேந்திர பிரசாத் அவர்களால் வழங்கப்பட்டது.

## இந்தியாவின் தற்போதய நிலை :

தற்கால விஞ்ஞான முன்னேற்றங்களையும், சர்வதேச சிந்தனைகளையும் மீறி இனவெறியும் பிரிவினை மனப்பான்மையும் முன்பு எப்போதையும் விட இப்போது தான் அதிகமாக இருக்கிறது. இவ்வளவு வளர்ச்சியும் முன்னேற்றமும் இருந்தும் கூட ஏதோ ஒரு குறைபாடு இருக்கிறது. அதனால்தான் நாடுகளிடையே ஒற்றுமை இல்லாமல் இருக்கிறது. மனிதனின் ஆர்வத்தில் பணம் மட்டுமே நிலைத்திருக்கின்றது மனித ஒருங்கிணைப்பு அற்றுப் போய்விட்டது. கடந்த கால ஞானத்தின் மீது பணிவு கலந்த மதிப்பினைப் பேணுவதன் மூலமும், கடந்த கால ஞானம் என்பதே மனித இனம் முழுவதும் காலங்காலமாய் சேமித்துவைத்த அனுபவம் தான் என்பதை உணரும் போதும், மக்களிடையே ஒரு மேம்பட்ட ஒருகிணைப்பை உருவாக்கலாம். அது அதிகமான மத ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டு விஞ்ஞானத்தின் பால் தன் கவனத்தை இந்தியா திருப்ப வேண்டும் என்று நேரு வலியுறுத்தியுள்ளார். நேரு என்னும் நவபாரத சிற்பியின் தொலைநோக்குத் திட்டங்களுக்குப் புத்துயிர் கொடுப்பதன் மூலம் புதிய இந்தியாவை உருவாக்க வேண்டியது காலத்தேவையாகும்.

## முடிவுரை :

நம் தேசத்தின் சுதந்திரப் போராட்டத் தியாகிகளும் சமுதாய மறுமலர்ச்சி நாயகர்களும் தாங்கள் வாழ்ந்த காலத்தின் நிலையை உணர்ந்து, தங்களது கடமைகளைச் சரியாக செய்ததன் மூலம் தங்கள் உரிமைகளைப் பேணிக் காத்து, செம்மாந்த குடியுரிமை பெற்றவர்களாக வாழ்ந்து மிகப் பெரிய ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். அந்த அடித்தளத்தைப் பலப்படுத்தும் வகையில் இளைஞர்கள் தங்கள் ஜனநாயகக் கடமைகளைச் சரியாகச் செய்வதன் மூலம் ஜனநாயக உரிமைகளை நிலை நாட்டி, செம்மாந்த குடியுரிமைக்கு உதாரணமாக செயல்பட வேண்டும்.

❑❑❑❑❑

# உ. வளர்ந்துவரும் இந்தியா

**M.** சேட்டு
CEO, Syndicate Exports Pvt. Ltd
Coimbatore.

பேராசிரியர் **P. நாகராஜன்**
துணைத்தேர்வு கட்டுப்பாட்டாளர்
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

இன்று வளர்ந்துவரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. நம்முடைய பாரம்பரியமும் கலாச்சாரமும் 5000 ஆண்டுகளுக்கு மேலாக நிலவி வருகின்றன. மற்ற நாடுகள் எல்லாம் அறியாமை என்ற இருளில் மூழ்கியிருந்த காலத்தில் ஆன்மீகத்தில், பொருளாதாரத்தில், கல்வியில், செல்வத்தில், சமுதாய நிலையில் நாம் உயர்ந்து இருந்தோம் என்பதை வரலாற்றுச் சான்றுகள் மூலமாக நாம் அறிகின்றோம். எத்தனையோ துறைகளில் நம் இந்தியநாடு மற்ற நாடுகளுக்கு முன்னோடியாக திகழ்ந்துள்ளது என்பதை உலக சரித்திரம் நமக்குக் காட்டுகின்றது.

உலகத்திலேயே முதன் முதலாக நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் தட்சஷீலாவில் கி.மு 700 ஆம் ஆண்டு இருந்தது. அதில் உலகத்திலிருந்து பல்வேறு பகுதியிலுள்ள மாணவர்கள் 60 பாடங்களைக் கற்றதாக வரலாறு கூறுகின்றது. நாலந்தா பல்கலைக்கழகம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இது கல்வித் துறையில் நிகழ்த்தப்பட்ட அரிய சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. உலகத்தில் முதன்முதலாக கணிதத்தைக் (Arthmetic) கண்டுபிடித்தது இந்தியா. நான்கு வேதங்களில் ஒன்றான யஜீர் வேதத்தில் அரித்மேட்டிக் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஜியாமெட்ரீ (Geometry) என்கிற வார்த்தை சமஸ்கிருதத்தில் உள்ளது. அதன் பொருள் பூமியை அளப்பது என்பதாகும். உலகத்தில் முதன்முதலாக ஜியாமெட்ரீயைக் கண்டுபிடித்தது இந்தியா.

கி.பி. 17 ஆம் நூற்றாண்டுவரை இந்தியா உலகத்திலேயே மிகப் பெரும் பணக்கார நாடாக இருந்தது. ஏனென்றால், அப்பொழுது தான் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நுழைந்த கால கட்டம். மொகலாயர் ஔரங்கசீப் காலத்தில் இந்தியாவின் ஒட்டு மொத்த வருட வருமானம் 45 கோடி ரூபாயாகும். இது பிரான்சை ஆண்ட லூயி 14 ஆம் மன்னனின் ஆட்சியில் அந்த நாட்டின் வருமானத்தைவிட 10 மடங்குகள் அதிகமாகும்.

1835 ஆம் ஆண்டு பிப்ரவரி 2ம் தேதி ஆங்கிலேயர்களின் பாராளுமன்றத்தில், லார்ட் மெக்காலே பேசிய சொற்பொழிவிலிருந்து இந்தியா எவ்வாறு தன்நிறைவு பெற்ற, செல்வமிக்க நாடாக திகழ்ந்தது என்பதை நாம் அறியலாம். ‘‘நான் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம்

சென்றுள்ளேன். நான் ஒரு திருடனையோ, ஒரு பிச்சைக்காரனையோ கண்டதில்லை. அந்த அளவிற்கு இந்த நாடு மிகவும் செல்வமிக்க நாடாகவும், உயர்ந்த நீதிகளையும், ஒழுக்கத்தையும் கொண்ட நாடாகவும், மக்கள் அனைவரும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கியதையும் நான் கண்டேன். இப்படி இருக்கும் இந்த நாட்டை வெல்வது அவ்வளவு எளிதல்ல என்று நான் கருதுகின்றேன். நாம் இந்திய நாட்டின் ஆன்மீகப் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் உடைத்தெறிய வேண்டும். ஏனென்றால் இந்திய நாட்டின் முதுகெலும்பாக இவை திகழ்கின்றன. இதை வெற்றிகரமாகச் செய்ய இந்தியாவிலேவுள்ள பாரம்பரிய கல்வி முறையையும், கலாச்சாரத்தையும் மாற்றியமைக்க வேண்டும். இந்தியர்கள் அனைவரையும் ஆங்கிலக் கல்வியும், வெளிநாட்டவர்களின் கலாசாரமும் உயர்ந்தது என்று எண்ண வைத்து நாம் மாற்ற வேண்டும். அவர்களுடைய சுய மரியாதையையும் தன்னம்பிக்கையும் மாற்றினால், அவர்களை நாம் மிக சுலபமாக ஆண்டுவிடலாம். என்றைக்குமே இந்தியா பிரிட்டிஷார் ஆட்சியில் இருக்கும்.''

## உலகப் பொருளாதாரத்தில் இந்தியா :

தற்பொழுது இந்தியா உலகத்தில் பொருளாதாரத்தில் மிகப்பெரிய நாடாகத் திகழ்கின்றது. உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாக உள்ளது. பால், அரிசி, காய்கறி மற்றும் பழங்களின் உற்பத்தியில் தற்பொழுது இந்தியா பெறும் பங்கு வகிக்கிறது. மனித வளமையைப் பொறுத்த மட்டில் இந்தியா உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் பல பல்கலைக்கழகங்களும், சிறந்த ஆராய்ச்சி கல்விக் கூடங்களும், உயர் கல்வி நிறுவனங்களும் உள்ளன. ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் எண்ணற்ற பொறியியல் வல்லுனர்களும், மருத்துவர்களும் உருவாகின்றார்கள். மேலும் பட்டப்படிப்பு பயின்றவர்கள் ஒவ்வொரு வருடமும் இந்திய பல்கலைக்கழகங்களிலிருந்து வருகின்றார்கள். ஆங்கிலம் பேசும் இந்திய மக்கள் தொகை, இங்கிலாந்திலுள்ள ஜனத் தொகையை விட இந்தியாவில் அதிகம் உள்ளார்கள். உலகத்திலேயே கோதுமை மற்றும் முட்டை உற்பத்தியில் இந்தியா முன்னணி வகிக்கிறது. பூமிக்கடியிலுள்ள தாதுக்கள் வளத்தில் இந்தியா சிறப்பிடம் வகிக்கிறது. இந்திய நாட்டிலுள்ள தபால் துறை உலகிலேயே மிகப்பெரியது.

உலகிலேயே மிகப்பெரிய ரயில்வே அமைப்பு இந்தியாவில் தான் உள்ளது. 1 லட்சம் கிலோமீட்டர் தூரத்திற்கு மேல் இந்திய ரயில்வேப் பாதையுள்ளது. ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கான மக்கள் ரயில் வண்டியில் பயணம் செய்கின்றார்கள். உலகிலேயே மிகவும் குறைவான கட்டணங்களைக் கொண்டுள்ளது இந்திய ரயில்வேத் துறைதான். உலக நாடுகளில் செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவும் ஒரு நாடாக இந்தியா விளங்குகின்றது. INSAT அமைப்பு உலகிலுள்ள செயற்கைக் கோள் தகவல் பரிமாறும் அமைப்பில் மிகப் பெரியதாகத் திகழ்கின்றது.

## உலகளவில் இந்திய இளைஞர்களின் பங்கு :

உலகில் பழம்பெரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குவதையும், அதே நேரத்தில் இளைஞர்களை அதிகம் கொண்ட நாடு இந்தியா என்பதையும் நாம் அறிகின்றோம். இன்றைய தொழில் புரட்சியில் இந்தியர்கள் உலகம் முழுவதும் அனைத்து நாடுகளிலும் தொழில் புரிந்து கொண்டுள்ளார்கள். தகவல் தொழில் நுட்பத் துறையில் IT, ITES, BPO, EPO போன்ற துறைகளில் உலக அளவில் இந்தியர்களுக்கு மிகுந்த வரவேற்புஉள்ளது. அமெரிக்காவிலுள்ள NASA TPYA, IBM, MICRO SOFT, INTEL ஆகிய நிறுவனங்களில் இந்தியர்கள் பெரும் அளவில் பணிபுரிகின்றனர்.

இந்தியர்கள் வெளிநாடு சென்று தங்கள் திறமையைச் செயல்படுத்தி வருகின்ற இந்தக் கால கட்டத்தில், வெளிநாட்டவர்கள் பலர் இந்தியாவிற்கு வருகை புரிந்து பல்வேறு துறைகளில் சேர்ந்து பணி புரிந்து கொண்டுள்ளார்கள் என்ற உண்மையை நாம் அறிகின்றோம். 1991 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பொருளாதாரச் சுதந்திரம் (Economic Liberalization) இந்தியாவின் பொருளாதாரத்தை உயர்த்திச் சென்று கொண்டுள்ளது. தகவல் பரிமாற்றத்தில் ஒரு பெரிய வளர்ச்சியைக் காண்கிறோம். இந்தியாவிலின்று ஒவ்வொருவரிடமும் மொபைல் தொலைபேசியைக் காணலாம்.

வளர்ந்து வரும் இந்தியா ஒரு தீர்க்கமான நம்பிக்கையுடன் முன்னேறிக் கொண்டுள்ளது. இந்தியாவிலுள்ள MBA பட்டதாரிகள் IIM நிறுவனங்களில் படித்துவிட்டு வருடத்திற்கு 1 கோடிக்கு மேல் சம்பாதிப்பதுடன் பல பெரிய தொழில்களையும் தொடங்கியுள்ளார்கள். இந்தியா மற்ற நாடுகளுக்கு **''சந்தர்ப்பங்களை உருவாக்கும் ஒரு நாடு''** என்ற நிலையைப் பெற்றுள்ளது. இந்தியர்கள் உலகளவில் சிறந்த நிபுணர்களாக இருப்பதற்கு முக்கியக் காரணம் அவர்கள் மிகஅருமையாக ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற திறமையாகும். கலாசார அடிப்படையில் எந்த நாட்டுடனும் இந்தியர்கள் வளைந்து கொடுத்து வாழும் பண்பாளர்கள். வெளிநாட்டவர்களின் நம்பிக்கைக்கு உகந்தவர்கள் இந்தியர்கள். இந்தியர்கள் கணிதத்தில் வல்லுனர்களாக உள்ளனர், திறமையுள்ள இந்தியர்கள் கிடைப்பதால் இன்று உலகத்தில் இந்தியர்களுக்கு நிறைய வரவேற்பு உள்ளது. உலகத்தில் உள்ள கோடீஸ்வரர்களில் ஒருவரான பில்கேட்ஸ் ''தென் இந்திய இளைஞர்கள் மிகவும் சுறுசுறுப்பான, எல்லோராலும் விரும்பப்படும் மக்களாகத் திகழ்கின்றார்கள்'' என்று குறிப்பிடுகின்றார்.

## இந்தியா வல்லரசாவதில் எதிர்நோக்கும் சவால்கள் :

தற்பொழுது பொருளாதாரத்தில் "வல்லரசு" (Super Power) நாடாக வருவதில் அமெரிக்கா முதல் இடத்திலும் ஜப்பான் இரண்டாம் இடத்திலும், ஜெர்மனி மூன்றாமிடத்திலும், சீனா நான்காம் இடத்திலும், இந்தியா ஐந்தாம் இடத்திலும் உள்ளன என்று "Time" பத்திரிகை 2007 ஆகஸ்ட் 13 ஆம் தேதி ஒரு செய்தியில் வெளியிட்டுள்ளது. அதே பத்திரிக்கை, 2050

ஆம் ஆண்டு சீனா முதல் இடத்திலும், அமெரிக்கா இரண்டாம் இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும், ஜப்பான் நான்காம் இடத்திலும், ஜெர்மனி ஐந்தாம் இடத்திற்கும் வரும் என்று கூறுகின்றது. மருத்துவத்துறையில் இந்தியா சாதனை படைத்துக் கொண்டுள்ளது. தற்பொழுது அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இருதய அறுவைச் சிகிச்சைக்கு ஆகும் செலவைவிட அதே அறுவை சிகிச்சைக்கு இந்தியாவில் மிகவும் குறைவாக செலவாகிறது. இந்திய மருத்துவர்கள் உலகளவில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

இந்தியா பல்வேறு துறைகளில் முன்னேறிக் கொண்டு சென்றாலும், ஒரு சில விஷயங்களில் மிகவும் பின் தங்கி உள்ளது. இந்தியர்களாகிய நாம் இதைச் சரி செய்து விட்டால் இந்தியா உலகத்தில் மிகப்பெரிய வல்லரசு நாடாக மாறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. நம் நாட்டின் எல்லைகளில் பயங்கரவாதம் என்கின்ற அச்சுறுத்தல் இருந்து கொண்டேயுள்ளது. குறிப்பாகச் சொல்லப் போனால் காஷ்மீர் பிரச்சனை. இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம் சீரழிகின்றது. என்றைக்கு இந்த காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கின்றதோ அன்றுதான் இந்தியா பயங்கரவாதத்திலிருந்து விடுபடுகின்ற நாடாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்தியாவை பொறுத்தமட்டில் கட்டுமானங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. இந்த விஷயத்தில் சீனா நம் நாட்டை விட முன்னேறிச் சென்று கொண்டுள்ளது. சீனாவில் இருக்கும் உழைப்பாளிகள் தங்கள் வேலைகளில் தங்களையே அர்பணித்துக் கொண்டுள்ளார்கள். அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களை கடந்து யாராவது சென்றால் அவர்கள் தலை நிமிர்ந்து வேடிக்கை பார்ப்பதில்லை. பொருளாதாரத்தில் அமெரிக்க நாட்டையே பயமுறுத்துகின்ற அளவிற்கு ஒரு பெரிய விஷ்வரூபம் எடுத்துக் கொண்டுள்ளதற்குக் காரணம் சீனாவிலுள்ள உழைப்பாளிகளின் அர்ப்பணிக்கும் குணமேயாகும். 1980 ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் சீனாவிற்கும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான ஆண்டு வருமானம் இருந்தது. ஆனால் இன்றைக்கு அது இந்தியாவை விட இரண்டு மடங்கு பல்கிப் பெருகியுள்ளது. தொழில் நுட்பத்தில் இந்தியா முன்னேறிக் கொண்டுள்ளது. உற்பத்திப் பெருக்கத்தில் தற்பொழுது சீனா முன்னேறுகின்றது. இந்தியா அடுத்துவரும் ஆண்டுகளில் கட்டுமான பணிகளுக்காக அதிகமாக முதலீடு செய்தால்தான் முன்னேறமுடியும்.

எண்ணற்ற பாதைகளில் இந்தியா முன்னேறிக் கொண்டு சென்றாலும், இந்தியா ஏழ்மையின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டுள்ளது. இந்தியாவில் சுகாதார சேவை என்பது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதிலும் குறிப்பாக இந்தியக் குழந்தைகளின் சுகாதார நிலைமை பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளது. மூன்று வயதுக்குக் கீழேயுள்ள குழந்தைகளில் சரியான ஊட்டச்சத்தில்லாமல் அவதிப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் பாலியல் நோய் (HIV) மற்றும் சர்க்கரை நோயால் அவதிப்படும் இந்தியர்கள் அதிகரித்து வருகின்றார்கள்.

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் இந்தியா ஏராளமான பணத்தை அடிப்படைக் கல்விக்காகச் செலவிட வேண்டும். அனைத்து இந்தியர்களுக்கும் ஆரம்பக்கல்வியையும், தொழில் சார்ந்த கல்வியையும் நாம் கொடுக்க வேண்டும்.

இந்தியாவிற்கு தொழில் நுட்பம் சார்ந்த மனித சக்தி (Skilled Man Power) ஐவுளித்துறை உற்பத்திக்கும், கட்டுமானப் பணிகளுக்கும், தோல் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கும், தகவல்தொழில் நுட்ப துறைக்கும், நிதி சம்பந்தமான தொழிலுக்கும், மற்ற துறைகளுக்கும், அதிக அளவில் தொழிலாளிகள் தேவைப்படும். I Mac analysis (C II) என்ற அமைப்பு எதிர்காலத்தில் இந்தியாவுக்கு 150 லட்சம் மனித சக்தி தேவையாக உள்ளது என்று கூறுகின்றது.

நம்முடைய நாட்டிற்கும் பணக்கார நாடுகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன? இந்தியாவும் எகிப்தும் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக பழம்பெரும் நாடுகளாகத் திகழ்கின்றன. ஆனால் அவைகளில் ஏழ்மை உள்ளது. அதே நேரத்தில் கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகள் 150 வருடங்கள் பழமையானது. இந்த நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேறிய நாடாகவும், பணக்கார நாடுகளாகவும் திகழ்கின்றன. ஒரு நாடு முன்னேறுவதற்கு இயற்கையில் கிடைக்கும் வளங்கள் ஒரு காரணம் என்று சொல்ல முடியாது. ஜப்பானில் இயற்கை வளங்கள் கிடையாது. 80% மலைகள், விவசாயம், ஆடுமாடுகள் வளர்ப்பில் வசதியில்லாமலும், மூலப்பொருள்கள் கிடைக்காத நிலையிலும் இன்றைக்கும் ஜப்பான் உலகத்தில் பொருளாதார வளர்ச்சியில் இரண்டாம் இடத்தைப்பிடித்துள்ளது. மற்றொரு நாடு ஸ்விட்சர்லாந்து. இந்த நாட்டில் கோகோ மரங்கள் கிடையாது. ஆனால் உலகத்தில் மிகச்சிறந்த சாக்லெட் தரும் நாடாக திகழ்கின்றது. பிறகு எதில், எந்த வித்தியாசம் ஒரு நாட்டிற்கு உயர்வும், மற்றொரு நாட்டிற்குத் தாழ்வும் கொடுக்கின்றது என்று பார்த்தால் அந்த நாட்டில் வசிக்கும் மக்களின் மனப்பான்மை ஆகும் (attitude). அதாவது அவர்களின் நேர்மையான உழைப்பு, நம் இந்தியர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த உழைக்கும் நோக்கம் இருந்தால் இந்தியா வல்லரசாக வளரும்.

இந்தியா ஒரு வல்லரசு நாடாக வளர ஒவ்வொரு இந்தியனும் செய்ய வேண்டிய கடமைகள் என்ன? அறிவாளிகள் அரசாட்சியில் பங்கு பெறவில்லையென்றால் அவர்கள் அயோக்கியர்கள் நடத்தும் ஆட்சியில் கஷ்டப்படுவார்கள். இது அறிவாளிகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனையாகும் என்று பிளாட்டோ என்ற அறிஞர் கூறுகின்றார். ஒவ்வொருவரும் தன் வேலையுண்டு, தன் வாழ்க்கை உண்டு என்று இல்லாமல் நம்நாடு முன்னேறப் பாடுபட வேண்டும். இந்திய இளைஞர்கள் ஒரு பெரிய இந்திய சமுதாயத்தையும்

இந்திய தேசத்தையும் உருவாக்க வேண்டும். இதன் மூலம் உலகப்பார்வையில் இந்தியா வல்லரசாக உருவாவது திண்ணம்.

**நிறைவுரை :**

மகாத்மா காந்தி, புத்தர், இயேசு கிறிஸ்து, நபிகள் நாயகம், அன்னை தெரஸா போன்ற ஆன்றோர்களின் வாழ்க்கையைப் படித்து அவர்கள் கூறும் கொள்கைகளின் படி நடக்க வேண்டும். "பிறருக்காக வாழ்பவர்கள் உயிருடன் இருப்பவர்களாகக் கருதப்படுவார்கள். மற்றவர்கள் அனைவரும் இறந்தவர்களாகவே எண்ணப்படுவார்கள்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறினார். "நம் இளைஞர்களுக்காக நாம் எதிர்காலத்தை உருவாக்க முடியாது. ஆனால் கண்டிப்பாக நம்முடைய இளைஞர்களை எதிர்காலத்திற்காக உருவாக்கலாம்" என்று அறிஞர் பிராங்கிலின் ரூஸ்வெல்ட் கூறுகின்றார். வளரும் இந்தியா புதுமையைப் படைக்கும். ஆனால் அந்தப் புதுமையில் இந்தியாவின் பாரம்பரியம், கலாச்சாரம் கண்டிப்பாக இருக்கும். அவர்கள் ஒரு அமைதியான, நீதியுள்ள, தன் நிறைவுபெற்ற பொருளாதாரமுள்ள இந்தியாவை மாற்றியமைக்கும் ஆற்றலுடையவர்களாக உள்ளார்கள். இந்திய இளைஞர்கள் கண்டிப்பாக ஒரு வல்லரசான அமைதி இந்தியாவை உருவாக்குவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

❑❑❑❑❑

# 3. வெளிநாட்டவர் பார்வையில் இந்தியா

**Dr. P. ராஜ்குமார்**
முன்னாள் முதல்வர்
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி

"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரதநாடு'' என்றும்
''பாரதநாடு பழம்பெரும் நாடு; நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்'' என்றும்

பாரத நாட்டின் பழமையையும், பெருமையையும், சுட்டிக்காட்டி நம்மைப் பெருமைக்கொள்ளச் சொன்னவர் பாரதி. வாழையடி, வாழையாக வந்த புனித மகான்களும், மகரிஷிகளும், சித்தர்களும், முக்தர்களும் மக்கள் தலைவர்களும் தங்கள் திவ்ய பாதங்களை பதித்த புண்ணியத்திரு நாடு இந்தியா. உலகத்தின் ஆன்மீகத்தின் பிறப்பிடமாகவும், மனித நேயத்தின் இருப்பிடமாகவும், தூய பழக்க வழக்கங்களின் உறைவிடமாகவும் இருக்கும் நாடு நம் தாய்த்திருநாடு.

எந்தக் காலகட்டத்திலும் செல்வ வளங்களை எல்லாம் தனதாக்கிக் கொண்டு அதிகாரங்கள் எல்லாம் இங்கே குவிய வேண்டும் என்று நினைக்காத நாடு இந்தியத் திருநாடு. செல்வத்திற்காக எந்த ஒரு நாட்டின் மீதும் படையெடுத்து அடிமைப்படுத்தாத நாடு இந்த பாரதத்திருநாடு. செல்வ வளங்களைப் பெருக்குவதைக் காட்டிலும் மனவளத்தை பெருக்குவதில் ஆர்வம் காட்டியவர்கள் வாழ்ந்த நாடு நம்நாடு. இந்தியாவின் கலாச்சார மேன்மையும், செல்வ வளமையும், தத்துவச் செறிவும், ஆன்மீக நெறியும் அயல் நாட்டாரைப் பாரதம் நோக்கிப் பார்க்க வைத்திருக்கின்றன.

கிரேக்க பயணி மெஸ்தனிஸ், சீனப் பயணிகள் பாஹியான் யுவான்சுவாங்,இட்சிங், இத்தாலி பயணி மார்க்போலோ மற்றும் அலெக்சாண்டர், வாஸ்கோடகாமா ஆகியோர் நமது பெருமையை, அக, புற வளமையை மேன்மையைத் தெரிந்தோ, தெரியாமலோ உலகிற்கு சுட்டிக்காட்ட வந்தவர்கள்.

''ஏகம்சத்'' என்ற வேதம் காட்டும் கொள்கையும், "தத்துவமசி" என்ற நீ கடவுளாக இருக்கிறாய் என்ற உயர்ந்த செய்தியையும், "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என்ற மகாபாரதச் செய்தியையும், "ஒருவனுக்கு ஒருத்தி", என்ற ராமாயணக் கோட்பாட்டையும், "அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்" என்ற சிலம்புச் செய்தியையும் உலகுக்கு கொடுத்த தத்துவநாடு இந்தியா.

கடந்த 2000 வருடங்களாக உலக அமைதிக் கோட்பாட்டிலும், மனித வாழ்க்கையை வளமைப்படுத்தியதிலும் முன்னிலையில் இருந்து வரும் நாடு நம் நாடு. இப்படிப்பட்ட அருமையும், பெருமையும் வாய்ந்த இந்திய திருநாட்டைப்பற்றியும், இங்கு வாழ்ந்த மகான்களைப் பற்றியும், இந்தியப் பெரியார்களைக் குறித்தும், அதன் தத்துவங்கள் குறித்தும் அவர்கள் விட்டுச் சென்றுள்ள செய்திகள் உலக அரங்கில் அனைவராலும் பெருமையுடன் நினைத்துப் பார்க்கும் செய்தியாகும்.

## 1. நேர்மையின் பிறப்பிடம் இந்தியா

- யுவான் சுவாங், கர்னல் ஸ்வீமன்

''இந்தியர்கள் நேர்மையின் பிறப்பிடம். சிறிது கூட பணத்தாசை அற்றவர்கள். பொய்யும், புனைசுருட்டும் தெரியாதவர்கள். எவரையும் ஏமாற்றாமல் வாணிபத்தை நேர்மையாகச் செய்யக் கூடியவர்கள். சொன்ன வாக்குத் தவறாத பண்பானவர்கள் இந்தியர்கள்'' என யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.

கர்னல் ஸ்லீமன் கூற்று

''இந்தியக் கிராமங்களில் பொய் என்பதையே காண முடியவில்லை. உயிரையும் உடமையையும் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. ஒரு பொய் மட்டும் சொல் என்று சொல்லச் சொன்னால், பொய்யே சொல்லமாட்டேன் என அறநெறியில் நின்ற 100 பேரை அடையாளம் காட்ட முடியும். அரிச்சந்திரன் வரலாறு கதை அல்ல. அது நிஜமாக இந்தியாவில் நிகழ்ந்திருக்க வேண்டும்.''

## 2. உலக அறிவுக்களஞ்சியத்தின் தாய், இந்தியா - வால்ட்டேர், ஹெரிடோடஸ்

பல்வேறு வகையான அறிவுத் திறன்கள்யாவும் இந்தியாவிலிருந்து மற்ற நாடுகளுக்கு சென்றிருக்க வேண்டும் எனப் பிரெஞ்சு அறிஞர் வால்ட்டேர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''கங்கை நதி தீரத்தில் இருந்துதான் எல்லாம் இங்கு வந்திருக்கின்றன என நான் உறுதியாக நம்புகிறேன். வானியல், சோதிடம், தத்துவம் முதலியனயாவிற்கும் பிறப்பிடம் இந்தியா தான்.

வரலாற்றின் தந்தை எனப் போற்றப்படும் ஹெரடோடஸ் என்பவர் "உலக மக்கள் அனைவரின் ஒட்டுமொத்த வெளிப்பாடுதான் இந்தியர்கள்" என இந்தியர்களின் ஒட்டுமொத்த ஆற்றலையும் குறிப்பிடுகிறார்.

## 3. செல்வங்களின் பிறப்பிடம் இந்தியா - மேக்ஸ் முல்லர்,

அனைத்து வகையான செல்வங்களுக்கும் பிறப்பிடம் இந்தியா என்பதை ஜெர்மானிய அறிஞர் மேக்ஸ் முல்லர் இப்படிக் குறிப்பிடுகிறார்.

‘‘இயற்கைத் தேவி எந்த நாட்டிற்கு எல்லாவிதமான செல்வங்களையும், சக்திகளையும் சௌந்தர்யங்களையும் கொடுத்திருக்கிறாள் என்று இந்தப் பரந்த உலகில் தேடிப்பார்ப்பவர்களுக்கு நான் இந்தியாவைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய வாழ்க்கை இன்னும் முழுமையடைய வேண்டுமென்றால் அதற்கும் இந்தியாவைத்தான் என் கண்கள் நோக்கும். எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தர்மநெறிக்கு நான் இந்தியாவையே அடையாளம் காட்டுவேன்.

## 4. உலகில் மறக்க முடியாத நாடு இந்தியா - கெய்த் பெல்லோ,

கெய்த் பெல்லோ என்ற மேனாட்டு அறிஞர் நேஷனல் ஜியாகிரோபி சங்கத்தின் உபதலைவராக இருந்தார். அவர் இந்தியாவை தன்னால் மறக்க முடியாது எனக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

‘‘உலகைச் சுற்றிப்பார்க்கும் பொழுது சில இடங்களை நம்மால் மறக்க முடியாது. இந்தியா எனக்கு அப்படித்தான். முதன் முறையாக இந்தியாவைப் பார்த்தபோது நான் பிரமித்துப் போனேன். வளமான பூமி, தனித்துவம் பெற்ற சிற்பங்கள், புலன்களுக்கு மேன்மையூட்டும் தூய்மை, உயர்ந்த வாசனைப் பொருட்கள், ரம்மியமான இயற்கைக் காட்சிகள் நிறைந்த உயர்ந்த நாடாக இந்தியாவைப் பார்க்கிறேன். உலக நாடுகள் அனைத்தையும் நான் கறுப்பு வெள்ளை நிறத்தில் பார்த்தபொழுது இந்தியாவின் தரிசனம் எனக்கு வண்ணப்படமாக இருந்தததை கண்டு பிரமித்து போனேன்.’’

## 5. வேற்றுமையில் ஒற்றுமை கண்ட இந்தியா - டோட்வெல்

துணைக்கண்டம் என்று சொல்லும் அளவிற்கு பல்வேறு இயற்கை சூழ்நிலைகள், மதங்கள், இனங்கள், மொழிகள், கலாச்சாரங்கள், நம்பிக்கைகள், பண்பாடுகள் கொண்ட இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதாக டோட்வெல் என்ற அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

‘‘இந்தியா என்றும் பெருந்தன்மையான நாடு. இங்கு ஆர்யர் வந்தனர்- ஈரானியர் வந்தனர்- சீனர் வந்தனர்- துருக்கியர் வந்தனர்- ஆங்கிலேயர் வந்தனர்- போர்த்துக்கீசியர் வந்தனர்- பிரெஞ்சு நாட்டினர் வந்தனர் - யூதர்கள் வந்தனர். அவர்கள் இந்தியாவுடன் இரண்டறக் கலந்து போனார்கள். இந்தியா பிறரை ஏற்றுக் கொள்ளும் குணத்தில் கடலை ஒத்துள்ளது’’

## 6. உலகத்தின் பூஜை அறை இந்தியா

- மேக்ஸ் முல்லர், பாஹியான்,

உலகப் பெரு மதங்களில் நான்கு இந்தியாவில் பிறந்திருக்கின்றன. சமணம் காட்டும் மூன்று ரத்தினங்களும், இந்து மதம் கூறும் நான்கு புருஷார்த்தங்களும், சீக்கியம் கூறும் ஏழு மூல மந்திரங்கள், புத்தம் உரைக்கும் எட்டு மார்க்கங்களும் என்றைக்கும் வாழ வழிகாட்டுபவை. ஆகவே தான் மேக்ஸ் முல்லர் ''உலகத்தின் பூஜை அறை இந்தியா எனக் கூறுவேன்'' என்று இந்தியாவின் ஆன்மீக வளத்தை குறிப்பிடுவார்.

பாஹியானும் எதற்காக இந்தியா வந்தேன் என்பதை இப்படிக் கூறுகிறார்.

''நான் இந்தியாவில் முத்துக்குளிப்பதை பார்க்க வரவில்லை - அதிலும், பவளமும் அதிக அளவில் கிடைப்பதை பார்க்க வரவில்லை - மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும் பார்க்க வரவில்லை - புத்தர் பிறந்த புனித மண்ணை முத்தமிட வந்தேன்.''

## 7. உலக தத்துவங்களின் பிறப்பிடம் இந்தியா - அர்னால்டு டாயின்பீ,

ஆன்மிகம் ஆனாலும், அறிவியல் ஆனாலும், கலைகளானாலும், இலக்கியம் ஆனாலும், இந்தியா அந்தத் துறையின் தத்துவங்களில் ஓர் உயர்ந்த இடத்தை பெற்றிருந்தது. அதனால்தான் ஆர்னால்டு டாய்ன்பி இந்தியத்தத்துவத்தைப் பற்றி கூறும்பொழுது சொல்லுவார்.''மனிதனை மனிதனாக்கும் ஆன்மீகத் தத்துவங்கள் இந்தியாவின் ஆன்மாவில் அடக்கப்பட்டுள்ளது. தன்னையே அழித்துக் கொள்ளும் அழிவிலிருந்து மனித இனம் மீள வேண்டுமென்றால் இந்திய உதாரணங்களைத் தவிர வேறு எதுவும் அதற்கு உதவிட முடியாது''

## 8. மத நல்லிணக்கத்தின், உலக அமைதியின் ஆணிவேர் இந்தியா

- ஹீ ஷீப், ஆந்தரே மால்ரோ

ஹீ ஷீப் என்ற அமெரிக்காவுக்கான சீன தூதர் குறிப்பிடுகிறார்.

''கடந்த 20 நூற்றாண்டுகளில் இந்தியா எந்த ஒரு போர் வீரனையும் தன் எல்லை கடந்து அயல் நாட்டிற்கு அனுப்பியது இல்லை. இவ்விஷயத்தில் இந்தியா சீனாவைவிட மிக உயர்ந்த இடத்தில் இருப்பதை நான் காண்கிறேன்.''

மதம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு என்பதை பிரெஞ்ச் நாட்டறிஞர் ஆந்தரே மால்ரோ இவ்வாறு கூறுகிறார்.

''இந்த நூற்றாண்டின் பிரச்சினையே சமயத் தொடர்பான பிரச்சினை தான். இந்து சமயத்தின் சிந்தனைகளே சமயத் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க பெருமளவில் உதவும்.''

## இந்திய வேத, இதிகாச புராண, இலக்கியங்களின் மேன்மை

**வேதங்களின் பெருமை** - மேக்ஸ் முல்லர்,

இந்தியாவில் தோன்றிய வேத, இதிகாச புராண, இலக்கியங்களின் தாக்கம் உலகம் முழுவதும் வியாபித்திருந்தது. ஆகவே தான் மேக்ஸ் முல்லர் வேதங்களைப் பற்றி கூறும்போது, 'வேதங்கள் இந்தியாவின் விதியை பற்றியும், அங்குள்ள கோடிக்கணக்கான ஆன்மாக்களின் வளர்ச்சி பற்றியும் அழகாக கூறுகின்றன. அவர்களின் மதத்தின் அடிப்படையே வேதங்கள் தாம் ''நான் ஒரு கிறித்துவ வேதாந்தி'' என்று குறிப்பிடுகிறார்.

**உபநிஷதங்களின் உண்மை** - ரென்ஸ்ச் வரிஸ்

மான்செஸ்டர் நகரில் உயிர் ஆராய்ச்சி நிலையம் என்ற அமைப்பு உள்ளது. அதன் பேராசிரியர் தன் ஆய்வுக் கூடத்தில் ஒரு உபநிஷத மகா மந்திரத்தை எழுதி வைத்துள்ளார். அது தத்வமஸி'' (நீ கடவுளாக இருக்கிறாய்) அதைப்பற்றி கூறும்போது மெய்ஞானத்தின் முழு வெளிப்பாடாக இந்த சுலோகம் உள்ளது. ஆகவே இதை எழுதிவைத்துள்ளேன் என்கிறார் ரென்ஸ்ச் வரிஸ் என்ற அந்த பேராசிரியர்.

'சத்யமேவ ஜயதே' 'அஹம் பிராம்மாஸ்மி' 'அயனாம்சம் பிரம்மம்' 'பிரக்ஞானம் பிரம்மம்' 'தத்துவமஸி' 'தர்மதோ ரக்ஷித' போன்ற உபநிஷதப் பேருண்மைகளைக் கண்டு போற்றாத மேனாட்டார் யார்?

**இராமாயணத்தின் அருமை**

நம் பாராளுமன்றத்தின் தூதுக்குழுவினர் ஒருமுறை இந்தோனிஷியா சென்றனர். அங்கு ஒரு இஸ்லாமியப் பெரியவர் இராமாயணம் படித்துக் கொண்டிருந்தார். ஆச்சரியத்துடன் அவரிடம் தாங்கள் இராமாயணம் படிப்பது ஏன் என்று கேட்டனர். அந்த முஸ்லீம் பெரியவர் சொன்னார் ''இராமாயணம் இந்துக் காப்பியமாக இருக்கலாம். ஆனால் நான் இதை ஒரு மனித இனக் காப்பியமாகப் பார்க்கிறேன்'' என்றார். பாரதநாட்டின் கலாச்சாரம் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு இலக்கியங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை மேனாட்டார் அங்கீகரிக்கின்றனர்.

**கீதையின் மேன்மை** - லார்ட் வாரன் ஹேஸ்டிங்க்ஸ்,

''கடமையைச் செய் அதன் பலனில் பற்றுவைக்காதே'' என நிஷ்காமியமாக எதையும் செய்யச் சொல்லும் பகவத் கீதை 1285 ல் சார்லஸ் வில்கின் என்பவரால் அதன் கருத்து வளமைக்காக ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டது. அதைப்படித்த லார்ட் வாரன் ஹேஸ்டிங்க்ஸ் ''இங்கிலாந்து ஒரு காலத்தில் இந்திய தேசத்தை இழந்துவிடலாம். ஆனால்

இந்திய மண்ணில் உதித்த பகவத் கீதையின் கோட்பாடுகளை இங்கிலாந்து நடைமுறைக்கு கொண்டு வருமானால் அது என்றென்றும் மேன்மையுற்று விளங்கும்'' என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொள்ள காந்தியடிகள் லண்டன் சென்றபோது அங்குள்ள மாபெரும் நூலகத்திற்கு சென்றார். அந்த நூலகரிடம் தங்கள் நூலகத்தில் அதிகமாக படிக்கப்படும் புத்தகம் எது என்று கேட்டபோது, நூலகர் சொன்னார் பகவத்கீதை என்று. கீதைக்கு 75 மொழிகளில், 1500 மொழிப்பெயர்ப்புகள் உள்ளது. இது பெருமையல்லவா!..

**திருக்குறளின் வளமை** - ஏரியல், ஆல்பர்ட் சுவைட்சர்,

மனிதன் மனிதனுக்குச் சொன்ன நூல் திருக்குறள். அது காட்டும் வாழ்க்கை நோக்கம், அறம், பொருள், இன்பம்.

பிரெஞ்ச் அறிஞர் ஏரியல் என்பவர் திருக்குறளை ''மனித இனத்தின் இலக்கியப் பெட்டகம் இந்நூல். இது சாதி, மத, இன நம்பிக்கைகள் என்று வேற்றுமை பாராட்டாமல் மனிதகுலம் முழுவதற்கும் பொதுமையாக கூறியிருப்பதாகும்.''

ஜெர்மானிய அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர், ''உலக இலக்கியத்தில் திருக்குறளைப் போல எந்த நூலிலும் உயர்ந்த மெய்யறிவு போற்றப்படவில்லை. உலக மனிதர்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கும் திருக்குறளை அறிந்தது நான் செய்த பாக்கியம்'' என்கிறார்.

## இந்தியப் பெரியார்களின் சிறப்புகள்

இந்திய பூமி புண்ணிய பூமி. இங்கு வாழ்ந்த சமுதாயம் தொன்மையான, உண்மையான சமுதாயம். அது கண்டறிந்த வாழ்க்கை இரகசியங்கள் ஏராளம், ஏராளம். வாழையடி வாழையென இங்கு வந்திருந்த மகான்களும், மகரிஷிகளும், மாமனிதர்களும், உத்தமர்களும், பெரியவர்களும் என்றும் சாகாத மகத்துவம் படைத்தவர்கள். அவர்களது வாழ்வும், வாக்கும் இந்த பிரபஞ்சத்திற்கே வழிகாட்ட வல்லவை. அவர்களின் ஆன்மீக அறிவியல், வாழ்வியல், சமுதாயக் கோட்பாடுகளை மேனாட்டறிஞர்கள் வெகுவாக பாராட்டியிருக்கின்றனர்.

### 1. ஆன்மிக ஒளிவிளக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

- ஆர்னால்டு டாயன்பீ,

பாரதப் பண்பாட்டின் வழிவழியாக வந்த மகான்களில் வங்காளத்தில் பிறந்த ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும் ஒருவர். கதாதரன் என்றும், சம்புசந்திரன் என்றும், குருதேவர் என்றும் போற்றப்படுகின்ற ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஆன்மிக ஒளி இந்தியாவைத்

தாண்டி பிறநாடுகளின் மீது படர்ந்த போது அவர்கள் இவருக்குச் சூட்டிய புகழாரங்கள் நம் நாட்டிற்குப் பெருமையைத் தேடி தந்துள்ளன.

ஆர்னால்டு டாயின்பீ ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்.

''உலகிலேயே சிறந்த பேச்சாளர் இவர்தான். ஏனெனில் மிகக் கடுமையான தத்துவங்களை எளிமையாக போதித்தவர். உலகின் மிகச் சிறந்த சிந்தனாவாதியும் இவர்தான். ஏனெனில் தத்துவத்தை விஞ்ஞான ரீதியில் உரைத்தவர். அவரைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் நமக்கு ஞானம் வேண்டும். இந்தியாவிலோ பிறநாடுகளிலோ இவரைப் போன்று வாழ்ந்து காட்டிய மனிதர் எவருமிலர்''.

**2. ஆன்மீகச் சிங்கம் விவேகானந்தர்** - வின்சென்ட் சுமித், வில்லியம் ஹேஸ்டி

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் தலைமைச் சீடராக விளங்கிய விவேகானந்தர் அவரது பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். பகுத்தறிவுப் பகலவனாக பார்போற்றும் ஆன்மீகச்சிங்கமாக, காலம் போற்றும் கர்ம வீரராக விளங்கிய விவேகானந்தர் ஆரம்பித்த இராமகிருஷ்ண இயக்கத்தின் தாக்கம் தான் இந்திய விடுதலைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததாக வின்சென்ட் சுமித் என்பவர் குறிப்பிடுகிறார்.

வில்லியம் ஹேஸ்டி என்ற வெளிநாட்டுப் பேராசிரியர் விவேகானந்தர் உள்ளிட்ட மாணவர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது அதில் Ecstasy என்ற வார்த்தை வந்தது. அதற்கு ஆசிரியர், இதை நேரில் பார்க்க வேண்டுமெனில் தட்சுணெசுவரத்தில் இருக்கும் காளி கோவிலில் உள்ள இராமகிருஷ்ணரிடம் போனால் தெரிந்து கொள்ளலாம் எனக் கூறினார். யாரும் போகவில்லை. விவேகானந்தர் மட்டும் போனார். ஆன்மீகவாதியாக உயர்ந்தார்.

**3. உலகை வாழ்விக்க வந்த காந்தி மகான்**

- ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், மார்ட்டின் லூதர்கிங், சர் வின்ஸ்டன்சர்ச்சில், மவுண்ட் பேட்டன் பிரபு

எல்லையற்ற தியாகங்களை செய்தவருக்கு எல்லையற்ற புகழ் கிடைக்கும் என்பதற்கு காந்தியடிகள் ஓர் எடுத்துக்காட்டு. ஓர் குடும்பம், ஓர் கடவுள், ஓர் உலகம் என்ற இலக்கை நோக்கி நம்மை பயணிக்க வைத்த காந்தியடிகளை போற்றிப் புகழாத வெளிநாட்டவர் யார்? ஐரோப்பாவின் மிருக பலத்தை, இந்தியாவின் ஆன்மீக பலத்தால் தனி ஒரு ஆளாக நின்று வெற்றி கண்டவர் அவர்.

“சதையோடும், ரத்தத்தோடும் இப்படி ஒரு மனிதர் (காந்தியடிகள்) நடந்தார் என்பதை எதிர்வரும் தலைமுறையினர் நம்ப மாட்டார்கள்” என அணு விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் குறிப்பிடுகிறார்.

“எல்லோரையும் போன்றே நானும் காந்தியைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவரைப்பற்றி முழுமையாக அறிந்ததில்லை. அவரைப்பற்றி அறிந்தபொழுது என்னை அறியாமலேயே அவருடைய அஹிம்சை முறையால் கவரப்பட்டேன். சத்தியாகிரகம் என்ற வார்த்தையின் அர்த்தம் என் மனதில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது” என காந்தியடிகளின் அஹிம்சை மற்றும் சத்தியாக்கிரகப்பற்றைப் போற்றுகிறார் அமெரிக்காவின் மார்ட்டின் லூதர்கிங்.

“அரை ஆடை மனிதர் பிரிட்டிஷ் மன்னருக்கு நிகராகப் போற்றப்படுவதைப் பார்த்து நான் பிரமித்துப் போகிறேன்” என காந்தியின் புகழைக் கண்டு பிரமித்தார். இங்கிலாந்தின் பிரதமர் சர் வின்ஸ்டன் சர்ச்சில்.

தென்ஆப்பிரிக்கப் பிரதமர் ஸ்மட்ஸ் ஒரு வழக்கில் காந்தியைத் தண்டிக்கக் காரணமாக இருந்து விடுகிறார். சிறையிலிருந்து வெளிவந்த காந்தி தன்னைத் தண்டித்த அவரின் மாளிகைக்கு சென்று உங்களுக்கு ஓர் அன்புப் பரிசு கொண்டு வந்திருக்கிறேன் என அவரே தைத்த ஒரு ஜோடி காலணியைக் கொடுக்கிறார். அப்போது ஸ்மட்ஸ் குறிப்பிடுகிறார். ‘‘பகைவனை நேசித்து ஒரு கன்னத்தில் அடித்தால் இன்னொரு கன்னத்தை காட்டுபவரை உலகத்தில் தேடிக் கொண்டிருந்தேன், காந்தியிடம் அதைக் கண்டேன்.’’

‘‘புத்தர், இயேசு போன்று வரலாற்றில் முன்னோடியாக திகழ்ந்தவர் காந்தியடிகள் என மவுண்ட் பேட்டன் பிரபு புகழ்ந்திருக்கிறார்.

### 4. உலக மகாகவி தாகூர் - முசொலினி

கீதாஞ்சலியின் மேன்மையை உணர்ந்த ஸ்வீடன் பல்கலக்கழக மாணவர்கள் கோச்சு வண்டியில் பூட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்து விட்டுத் தாகூரை அதில் அமரவைத்து தாங்களே இழுத்துப் போனார்கள் என்ற செய்தி தாகூரின் பெருமை சேர்ப்பதாக இருக்கிறது.

1926 ஆம் ஆண்டு தாகூர் இத்தாலி சென்றபோது, அதன் சர்வாதிகாரி முசொலினி தாகூரிடம் கூறினார். “உங்கள் கவிதைகளைப் படித்தேன் அற்புதம்” என்று பாராட்டினார். கவிதைக்கு, இரும்பு இதயம் கூட இளகும் என்பதைத் தாகூரின் கவிதைகள் காட்டுகின்றன.

### 5. தத்துவமேதை டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன் - பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்

ஆசியராக பணிபுரிந்து, குடியரசுத் தலைவராக உயர்ந்த தத்துவமேதை டாக்டர். ராதாகிருஷ்ணனைப் பற்றி மேனாட்டர் குறிப்பிடும் புகழுரைகள் இந்தியாவிற்குப்

பெருமைகளைச் சேர்ப்பதாக உள்ளது. கிழக்கையும், மேற்கையும் இணைத்துத் தத்துவப்பாலம் அமைத்த இந்த காவி கட்டாத ராஜரிஷியை பாராட்டியவர்கள் ஏராளம். ஏராளம்.

"இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றில் டாக்டர் ராதாகிருஷ்ணனின் பெயர் புகழ்பட விளங்குகிறது. மனித முயற்சியால் ஆகாதது எதுவுமே இல்லை என்பதை விளக்கிய பெருமைக்கு உரியவர் அவர்" - பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்.

**6. ஆசிய ஜோதி நேரு** - பிரெய்ல்ஸ் போர்டு, கமால் நாசர்,

ஆசிய ஜோதி, ரோஜாவின் ராஜா, மனிதமேரு நேரு, உலக அமைதிக்கு ஆற்றிய பணிகள் அவருக்கு உலகப்புகழ் பெற்றுத்தந்தன.

''அரசியலுக்கு நேரு வந்ததால் அத்துறைக்கு ஏகப்பட்ட லாபம், ஆனால் இலக்கியத்துறைக்கு ஏகப்பட்ட நஷ்டம்'' என்று அவரது இலக்கிய ஆற்றலைப் போற்றுகிறார் பிரெய்ல்ஸ் போர்டு என்பவர்

''நேரு இந்தியாவின் வழிகாட்டி மட்டுமல்ல மனித குலத்திற்கே அவர் ஓர் வழிகாட்டி. அவர் பெரிய சிந்தனைவாதி, மகத்தான தலைவர்'' - எகிப்து அதிபர் கமால் நாசர்.

## நிறைவாக ....

இந்தியாவின் விரிந்து பரந்த நிலப்பரப்பும், நீண்ட நெடிய கடந்த காலமும், தத்துவச் செறிவும், அன்மீக விரிவும், பல்வேறு அயல்நாட்டுத் தாக்குதல்களைத் தாக்குப்பிடித்து இன்று வரை தன் தனித்தன்மையை இழக்காது இருக்கிறது என்றால் அதற்கு காரணம் நமது கணக்கிலடங்காப் பெருமைகள் ஆகும். வாழ்வின் உயர்ந்த லட்சியங்கள் யாவும் மனிதனுக்கு அடையாளம் காட்டப்பட்ட நாடாக என்றும் இருந்து வந்துள்ளது நம் இந்தியத் திருநாடு. தெய்வபக்தியும், தேசபக்தியும் தன் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்து வரும் நாடு நம் தீபகற்ப நாடு. உலக வாழ்க்கையை விட அன்மீக வாழ்க்கையைப் பெரிதாக மதித்த நாடு நம்நாடு. இதன் அருமை பெருமைகளை நம்மவர் பாராட்டியதைவிட மேனாட்டார் பாராட்டியுள்ளது ஏராளம்.

❑ ❑ ❑ ❑ ❑

# 4. இந்தியக் கலாச்சாரத்தின் மேன்மை

முனைவர். **அமுதன்**
மதிப்பியல் பேராசிரியர்
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

இந்த உலகத்தில் மனித இனம் தோன்றி பன்னெடு நாட்களுக்குப் பின்னால்தான் மொழி உருவெடுத்தது. கைகளை அசைத்துக் கருத்தை உணர்த்தும் இடர்ப்பாட்டை மனித சாதியிடமிருந்து ஓட்டி, நாவையசைத்து மொழியைப் பிறப்பித்து, உலகமக்களுக்கு நல்வழி காட்டிய நன்னாடு நம்நாடு.

இதற்குக் காரணம் இந்நாட்டின் தொன்மை. தொன்மைக் காலத்தில் நிகழ்ந்தவை அத்தனையையும் இப்பொழுது நிகழ்பவை போல் கண்முன் நிறுத்திக் காட்டிவிட வல்ல உலகத் தொல்லியலாளர்கள், வரலாற்று வல்லுனர்கள் பாரதநாடு என்று பிறந்தது? என்ற கேள்விக்கு மட்டும் இன்றுவரை விடை சொல்ல அறியாமல் அவர்கள் தோற்றுவிடுகின்றனர். இதனைப் பாரதி பெருமகனார் இவ்வாறு சொல்கின்றார்;

" தொன்றுநிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய் !"

### ஆர்ய ஸம்பத்து:

உலகத்தில் எத்தனை வளங்கள் உண்டோ, அத்தனையையும் கொண்ட நாடு இது என்பார் பாரதியார்.

" செல்வம் எத்தனையுண்டு புவிமீதே - அவை
யாவும் படைத்த திருநாடு"

என்று அவர் பாடி மகிழ்ந்தார்.

செல்வம் மூன்று வகைப்படும். ஒன்று அறிவுச் செல்வம், இரண்டாவது ஒழுக்கச் செல்வம், மூன்றாவது பொருட்செல்வம். இம்மூன்று செல்வங்களும் குவிந்துள்ள நாடு நம் இந்தியப் பெருநாடு என்கிறார் பாரதியார்:

"நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது ஸங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள்,

நமது மண்டபங்கள், நமது குடிசைகள் - இவையனைத்துக்கும் பொதுப் பெயராவது "ஆரிய ஸம்பத்து"

"தஞ்சாவூர்க் கோயில், திருமலை நாயக்கர் மஹால், தியாகராஜர் கீர்த்தனைகள், எல்லோராவிலுள்ள குகைக்கோவில், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், சரபசாஸ்திரியின் புல்லாங்குழல் - இவை அனைத்துக்கும் பொதுப்பெயர் "ஆரிய ஸம்பத்து" (ஆரிய - சிறந்த , ஸம்பத்து - செல்வம்) எனவே ஆர்யஸம்பத்தாவது ஹிந்துஸ்தானத்தின் நாகரிகம். இந்த ஸம்பத்தைப் பாதுகாக்கும் வரையில் இந்த (பாரத) ஜாதிக்கும் உயிருண்டு. இந்த ஸம்பத்திலே துருப்பிடிக்க இடங்கொடுத்தால் இந்த ஜாதியைச் செல் அரித்து விடும்.

ஜெர்மானியப் பேரறிஞர் மாக்ஸ் முல்லர், நம் நாட்டை விக்டோரியா மகாராணி ஆளப்போவதையறிந்து இந்திய நாட்டின் பெருமையை, மகாராணிக்கு உணர்த்தி கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் வரைந்துள்ள கருத்துக்கள் நம் நாட்டைப் பற்றிய பெருமிதத்தை நமக்கு நெஞ்சில் பதிக்க வல்லவை.

"இயற்கைத் தேவி, எந்த நாட்டிற்குத் தன் எல்லாவிதமான செல்வங்களையும் சக்தியையும் அழகையும், வளத்தையும் மனமுவந்து அளித்திருக்கிறாள் என்று இப்பரந்த உலகம் முழுவதும் தேடிப்பார்த்த நான் அதற்கு இந்த இந்திய தேசத்தையே காட்ட வேண்டியிருக்கிறது !"

## இதிகாசங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்:

''நம் முன்னோர் வரலாற்றையும், கலை ஞானத்தையும், அறியும் போது, நமக்குள் எழுச்சியும் ஊக்கமும் பெரு மகிழ்வும், பெருமிதமும் ஒருசேர உண்டாகின்றன.

''வால்மீகி வாழ்ந்த நாடு இது ; வியாசர் வளர்ந்த காடு அது ; புத்தர் இருந்த மரத்தடி இது; மணிமேகலை சிறைப்பட்ட இடம் இது ; என்று அறிஞர்கள் உணர்த்தும்போது, நம் உள்ளம் கவர்ச்சியும் கிளர்ச்சியும் அடைகின்றனவா ? இல்லையா ?''

மனிதனாகப் பிறந்ததன் பயன்களுள் ஒன்று, இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் வாசித்து மகிழ்வது என்பார்கள் பெரியோர்கள்.

"தோண்ட தோண்ட விலை மதிப்பற்ற மாணிக்கங்களையும், கோமேதக் குவியல்களையும் கொடுத்துக் கொண்டேயிருக்கும் நவரத்தினச் சுரங்கங்கள் இராமாயணமும் பாரதமும்" என்றார் தேசப்பிதா காந்தியடிகள்.

வாழ்க்கை தரும் சோதனைகள், இடர்ப்பாடுகள், எப்படி அவற்றை எதிர்கொள்வது? வெல்வது? என்பதைக் கடவுள் மனித உருவெடுத்து வந்து, மனிதர்களுக்குப் புகட்டிய பாடவகுப்புகளின் தொகுப்பே இராமாயணம், பாரதம் எனும் இதிகாசங்கள் ஆயின.

நம் பாரத நாட்டு நாகரிகம் செல்வவளம் மிக்க நகரங்களிலிருந்து உருவானதில்லை; குடிசைகளிலிருந்து உருவானது. புலன்களை வென்ற மாமுனிவர்களின் குடிசைகளிலிருந்து உருவானது. உலகு வியக்கும் இந்திய நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் தந்த இதிகாசங்களின் தந்தைகளாகிய வால்மீகியும், வியாசரும் குடிசைகளில் வாழ்ந்தவர்கள்.

பாரதத்தின் ஆசிரியர் வியாசர் ஒரு செம்படவப் பெண்ணின் மகனாகப் பிறந்து, வனத்தின் காடுகளுக்கிடையே வளர்ந்த வியாசர் "வியாச பகவான்" ஆகிறார்.

அவரே வேதங்களை தொகுத்தவர் ; அவரே "பிரம்ம சூத்திரம்" வடித்தவர்; அவரே குருகுலத்தின் பேராசான்; வழிகாட்டி அவரே மனித குலத்தின் முதல் சரித்திர ஆசிரியர்.

அவரே, பாரத நாட்டில் முன்பு செழித்தோங்கியிருந்த ''வனப் பல்கலைக் கழகங்களின் முதல் நிறுவனர்.'' (The Founder of the First Forest University).

## அன்பே கடவுள்:

புத்தரைப் போன்ற ஓர் உத்தமர் வேறு நாட்டிலும் பிறக்க இயலாது.

கன்பூஷியஸ் என்னும் சீனஞானி, தன் மாணவர்களுக்கு உரைக்கும் உபதேச முடிவில் "நான் உரைத்த இந்த உபதேசங்களை நீங்கள் தவறாது கடைபிடித்தால், அடுத்த பிறப்பில், புத்தர் பெருமான் பிறந்த பாரத தேசத்தில் பிறக்கும் புண்ணியம் பெறுவீர்கள்!" என்று முடிப்பாராம்!

உலகம் முழுவதும் தனி மனிதனுக்கு எடுத்த சிலைகளில் அதிக எண்ணிக்கை கொண்டது புத்த பெருமானின் சிலைகளாம்.

"அன்பே சிவம்" ; "உலகத்துயர் யாவையும் அன்பினால் போகும் என்றே - இங்கு முன்பு மொழிந்து உலகாண்டதோர் புத்தரின் மொழி எங்கள் அன்னை மொழி". புத்தர் துறந்தது அவர் நாட்டை ! ஆனால் அவர் ஆண்டது உலகை! நாடுதுறந்து உலகையாண்ட ஒரே ஒரு மாமன்னர்.

## கணிதத்துறையில் இந்தியாவின் பங்களிப்பு:

பாஸ்கராசாரியார் (1114-1200) எனும் கணிதமேதை உலகின் தலைசிறந்த கணித மேதைகளுள் ஒருவர். சித்தாந்த சிரோமணி என்னும் அவர் நூல் கணிதம், பீச கணிதம், கோலத்யாயம், கிரக கணிதம் எனும் நான்கு பகுதிகளைக் கொண்டது. முதல் இருபகுதிகளும் வாழ்வியல் கணிதத்தையும் பின் இரு பகுதிகளும் வானியல் கணிதத்தையும் கொண்டவை.

அவர் வானியல் புலமையை மதித்தே நம் முதல் செயற்கைக் கோளுக்கு, ''பாஸ்கரா'' எனப் பெயரிடப்பட்டது!

ஐன்ஸ்டைன் ஒரு முறை நம் முன்னாள் சனாதிபதி எஸ். ராதாகிருஷ்ணனிடம் "what is your contributon to mathematics"? என்று கேட்டார்.

நம் ராதாகிருஷ்ணன் சொன்ன விடை "Nothing" !

''(0) பூச்சியம் என்ற கணித அற்புதத்தைக் கண்டுபிடித்தவர்கள் நாங்கள்! என்று சிலேடை நயம்பட எடுத்துரைத்தார் நம் மேனாள் குடியரத் தலைவர். தசம முறை எனும் கணித அற்புதம் நம்முன்னோர்கள் கண்டுபிடித்து உலகுக்குத் தந்தவை.

## வாழ்வியல் சூத்திரம்:

மகஸ்தனிஸ் என்னும் உலகப் பயணி, தன் நூலில் கூறியுள்ளார். இந்திய நாட்டின் தென்பகுதியில் உள்ள காஞ்சிக்குச் சென்றிருந்தேன். எனக்கு வியப்போ வியப்பு! அங்கிருக்கிற வீடுகள் இரவில் பூட்டப் படாமல் கிடந்தன; சன்னல்களுக்கு குறுக்குக் கம்பிகளே இல்லை. ஏனென்றால் அங்கு திருடர் பயமே இல்லை.

அங்குள்ள மக்கள் ஊர்ப்பொது இடங்களில் அமைந்திருக்கும் பொது மன்றங்களுக்குச் சென்று இரவில் நெடுநேரம் பாரதக்கதை கேட்க போய் விடுகின்றனர். அக்கதையில் வரும் பாத்திரங்கள் ஆகிய தருமன், வீமன், அருச்சுனன் முதலிய கதை மாந்தர்களைப் போலவே, தங்கள் மக்களை வளர்த்தெடுக்க சபதம் எடுக்கின்றனர்; வளர்க்கின்றனர்.

இதிகாசங்கள், இலக்கியங்கள் முதலியவை வாழ்க்கையில் பொழுதுபோக்குக்காக எழுதப்படவில்லை. இங்கு, நூல்களில் வரும் கதைமாந்தர்கள், புத்தகங்களில் குடியிருப்பவர்கள் அல்லர் ; மக்கள் வாழ்வில் குடியேறிவிட்டவர்கள் ''கற்க அதற்கு தக நிற்க'' என்பது நம்மவர் வாழ்வியற் சூத்திரம்.

## அறம் வளர்த்த அசோகர்:

உலகில் தோன்றிய அரசர்கள், சக்கரவர்த்திகள் அத்தனை பேரிலும் தலைசிறந்த பேரரசர் அசோகச் சக்கரவர்த்தி என்று புகழ் பெற்ற சரித்திரப் பேராசிரியர் H.G. வெல்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் அறத்தைப் போதித்தார் புத்தர் பெருமான். அவ்வறங்களைச் செயற் படுத்தினார் அசோகர். இன்றைய உலகு, தான் நலம் பெற எவையெவை தேவையென்று கருதுகின்றதோ அத்தகைய அனைத்தையும் செயற்படுத்தினார் அசோகர் பெருமான்.

அவர் ஆட்சியில் கற்கள் எல்லாம் அறம் போதித்து நிற்கின்றன. வேள்விகள், உயிர்க் கொலைகள் நாட்டை விட்டு ஓடின. மக்களைக் கொன்று குவித்துப் புகழ் தேடிக் கொள்ளும் அரசர்களின் போர் வெறி ஒழிந்தது. மதவெறி மாய்ந்தது. மனித நேயம் மலர்ந்தது. வழிகள்

எல்லாம் மரங்கள் பூப்பூத்து அணிவகுத்தன; ஏன்? மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் மருத்துவச்சாலை கட்டிய முதல் மன்னன் அசோக சக்கரவர்த்தி.

உலகில் அவரைப் போன்று இன்னொரு மன்னன் தோன்ற இன்னும் எத்தனை காலம் ஆகுமோ என்று நல்லோர் ஏங்கித் தவிக்க வைத்திருக்கிற ஒப்புயர்வற்ற பெரு வேந்தன் அசோக சக்கரவர்த்தி.

## வியத்தகு தொழில் நுட்பம்:

விக்டோரியா மகாராணி முடிசூடிய பின், இங்கிலாந்து மன்னருடைய முடிசூட்டு விழாவின் தர்பார் தில்லியில் நடந்தது. அதில், ராணியாருக்கு ஒரு டாக்கா மஸ்லின் பட்டுச் சேலை பரிசளிக்கப்பட்டது. அது ஒரு மோதிரத்தின் ஒரு புறம் நுழைத்து, மறுபுறம் உருவ வல்லதாயிருந்தது. 'டாக்கா மஸ்லின்' என்ற மிக மெல்லிய பட்டுத் துணி, வங்க மாநிலத்தில் உள்ள டாக்கா நகரில் புகழ் பெற்றிருந்தது.

இது எப்படி நெய்யப்பட்டது? என வினவினார் அரசர்.

''கைப் பெருவிரல் நகங்களை வளர்த்து அவற்றில் துளையிட்டு, பட்டின் இழைகளை நகத் துளையிற்கோத்து நெருக்கிச் செய்யப்படுவது'' என்றான் அத்தொழிலாளி.

அவனை அனுப்பிவிட்டு, ''இப்படி நெய்பவர்களைத் தொழில் செய்யவிட்டால் நம் லங்காஷயர்த் துணி எப்படி விற்கும்? அதனால், டாக்காவில் இந்த மஸ்லின் துணி நெய்யும் தொழிலாளர்களையெல்லாம் கணக்கெடுத்து அவர்கள் பெருவிரல்களையெல்லாம் வெட்டி விடுக என்று மன்னர் ஆணையிட்டார் என்று தாதாபாய் என்னும் சரித்திரப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார் என்று திரு. வி.க. குறிப்பிடுகிறார்.

இரும்பை உருக்கி வார்க்கும் தேன் இரும்பு செய்யும் உருக்குக்கலை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்நாட்டில் இருந்தது. அலெக்சாந்தருக்கு 30 கிலோ வாள் செய்யும் சேலத்து இரும்பை புருடோத்தமன் என்னும் அரசன் பரிசாக நல்கினான் என்கிறது ஒரு வரலாற்றுக் குறிப்பு.

இவ்வாறு எத்தொழிலைச் செய்தாலும், எச்செயலைப் புரிந்தாலும் அவற்றில் உலகின் முன்னதாகவும், முதன்மையாகவும் விளங்கியது இந்திய நாடு என்று நம் நாட்டார் அல்லர், பிற நாட்டார் புகழ்ந்துள்ளனர். வியந்துள்ளனர்.

## சிந்தனையில் தெளிந்தோர்:

அறிவியலில், அரசியலில், எவற்றையெடுத்தாலும் இந்த நாடு முன்னனியில் இருந்ததொரு பொற்காலம் உண்டு என்று வரலாறுகள் நினைவூட்டுகின்றன.; சரித்திரக் குறிப்புகள் சான்றாகின்றன.

தலையைக் கொடையாகக் கொடுத்து ‘‘வெட்டுக’’ வென்று வாள் தந்து நின்றவனும், புறாவுக்காகத் தராசு ஏறி நின்றவனும், கதவைப் பிழையாகத் தட்டியதற்காக தட்டிய கையையே வெட்டி வீழ்த்தியவனும், பசுவொன்றின் கண்ணீருக்காகத் தன் ஒரே அருமை மகனை தேர்க்காலில் கொன்றவனும், சிலம்பில் அரசை வென்ற சேயிழையையும் உலக சரித்திரம் முழுவதும் தேடினும் கிடையாது. தமக்குத் துணையின்றி அவர்கள் தனி ஒருவராகவே நிற்கிறார்கள் !

செல்வம் மிகவுடையவன் மேலை நாட்டில் வணங்கத் தக்கவன். செல்வம் எதுவவுமில்லாத பரதேசி இங்கு வணங்கத்தக்கவன். ஒரு மனிதன், செல்வம் எவ்வளவு அதிகமாக வைத்துக் கொண்டால் மகிழ்வாக வாழ முடியும் என்பதற்கு மேலைநாடுகள் தீர்வு காணமுயன்று கொண்டிருக்கின்றன.

ஒரு மனிதன், செல்வம் எவ்வளவு குறைவாக வைத்துக் கொண்டால் மகிழ்வாக வாழ முடியும் என்பதற்கு இந்திய நாடு தீர்வு கண்டுள்ளது.

புத்தரும் பட்டினத்தாரும் செல்வங்களைக் துறந்த பின்புதான் பேரின்பம் கண்டனர். ‘‘செல்வம் என்பது சிந்தனையின் தெளிவு’’ என்பது அவர்கள் கண்டுபிடித்து உலகுக்கு தந்த சூத்திரம். நினைத்துப் பார்க்க இயலாத தொல் பெருங்காலத்திலேயே விஞ்ஞானிகளை மெய்ஞானிகளை உலகுக்குக் கொடுத்த நாடு இந்தியத் திருநாடு. பல்லாயிரம் ஆண்டுகளாக கிரகணங்கள் நேருவதைத் துல்லியமாகக் கண்டுபிடித்துச் சொன்ன வானநூற் புலமை கொண்ட நாடு இத்திருநாடு. எத்தனை துறைகள் உலகில் உண்டோ அத்தனையிலும் முட்டிப் பார்த்து முகடுகளைத் தொட்ட நாடு இத்திருநாடு.

**நிறைவுரை:**

விவேகாநந்தப் பெருமானின் பெருமைமிக்க வரிகள்.

‘‘நம் தாய்த்திரு நாட்டிற்கு உலகம் பட்டிருக்கும் கடன் அளவற்றது. இந்தியர்கள் எல்லோரும் உன்னுடைய ரத்தம்; உன் சகோதரர் என்பதை மறவாதே ! நான் இந்தியன் ; ஒவ்வோர் இந்தியனும் என் சகோதரன் என்று கர்வத்துடன் சொல் !

இந்தியன் எனது சகோதரன் ; இந்தியன் எனது வாழ்க்கை ; இந்தியாவின் தேவ தேவியர் எனது தெய்வங்கள் ; இந்தியச் சமுதாயம் என் குழந்தைப் பருவத்தின் தொட்டில். என் வாலிபத்தின் இன்பத் தோட்டம் ; என் முதுமையின் வாரணாசி (காசி)! ’’

‘‘இந்திய நாடிது என்னுடை நாடு ! என்று தினந்தினம் நீயிதைப் பாடு !’’ - நாமக்கல் கவிஞர்.

❑❑❑❑❑

# 5. இந்தியாவும், அமைதியும்

**Dr. N. ராஜ்குமார்**
முன்னாள் முதல்வர்
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

மனித குலத்தின் வரலாறு ஒரு நீண்ட நெடிய வரலாறு. மனிதகுலம் நாகரிகத்தின் உச்ச நிலையை எட்டியுள்ள அதே சமயத்தில் அது அழிவின் எல்லைக்கும் வந்துவிட்டது என்றும் கூறலாம். உயிரினங்களிலே மிக உயர்ந்த உயிரினம் மனித இனம் என்று சொல்லப்படுகிறது. இது உண்மைதானா? என்ற ஒரு சந்தேகம் இன்றைய காலக்கட்டத்தில் எழுகின்றது.

மனிதனின் அகத்திலும், புறத்திலும், எங்கு பார்த்தாலும் போரும் பூசலும் தான். மனிதன் தன் பொறி புலன்களோடு அகத்தே போர்புரிந்து கொண்டிருக்கிறான். மறுபுறம் சக மனிதர்களோடு அண்டை நாடுகளோடு போர்புரிந்து கொண்டிருக்கிறான். அவனது உள்ளத்துச் சண்டை ஓயவில்லை. அதனால் உலகத்து சண்டைகள் ஓயவே இல்லை. மனிதனின் புறப்பரிணாமம் வளர்ந்த அளவுக்கு அகப் பரிணாமம் வளரவில்லை. இதுவே அமைதியின்மைக்குக் காரணம்.

**மனிதனின் குணங்கள்:**

பகவத் கீதையின் பாஷையில் சொன்னால் மூன்று வகையான மனிதர்கள் இந்த உலகில் உள்ளார்கள். தான் செய்யும் காரியம் நல்லதா கெட்டதா என்று ஆராய்ந்து பார்த்து ஆன்மீக அளவு, அன்பு, சேவை, பொதுநலம் போன்ற குணங்களைக் கொண்ட மனிதர்கள் - முதல் வகையான மனிதர்கள் இவர்களை சத்வகுணம்உடையவர்கள் என்று அடையாளம் காணப்படுகின்றனர்.

அகங்காரம், ஆடம்பரம், ஆர்ப்பாட்டம், போட்டி, பொறாமை, கொண்ட மனிதர்கள் ரஜோ குணமுடையவர்கள். பிற உயிரைத் துன்புறுத்தித் தான் இன்பம் காணும் குணமிதுவாகும்.

சோம்பல், தூக்கம், அலட்சியம், கவனமின்மை, மோகம், காமம் போன்றவற்றைக் கொண்ட மனிதர்கள் தமோ குணமுடைய மனிதர்கள் ஆவார்கள்.

இம்மூன்று பிரிவினர்களில் ரஜோ, தமோ குணமுடைய மனிதர்களால் போர் உண்டாகிறது. சத்துவ குணமுடையவர்களால் போர் தடுக்கப்படுகிறது. ஹிட்லர், முசோலினி, போன்றோர் ரஜோ குணமுடையோர்கள். ரஸல், மகாத்மா காந்தி, ஆசிய ஜோதி நேரு, மார்ஷல் டிட்டோ போன்றோர் சத்துவ குணமுடையவர்களாயிருந்தனர்.

## போருக்கான காரணிகள்:

மனிதன் இன்று அனைத்து துறைகளிலும் சாதனை புரிந்து வருகின்றான். வானிலே நீந்துகிறான். கடலிலே ஆட்சி செய்கிறான். காலத்தையும் தூரத்தையும் வென்று விட்டான். ஊசி உற்பத்தி முதல் Super Computer வரை பல சாதனைகள் படைத்தாகிவிட்டது. பொருள் வளம் பொங்கி வழிகிறது. இருந்தாலும் ஏதோ ஒரு குறைபாடு, பாதுகாப்பற்ற உணர்வு, நிரப்பப்படாத வெற்றிடம் இருக்கிறது.

எங்கோ இருக்கும் விண்மீன்களைப் பற்றி ஆராய்கிறான். அவைகளுக்கிடையே உள்ள உறவுமுறைகளை ஆராய்கிறான். ஆனால் தன் அருகில் இருக்கும் மற்றொரு மனிதனுடன் இணக்கமான வாழும் கலையைப் பற்றி மட்டும் அவன் கற்றுக் கொள்ளவில்லை. அவனிடம் சமாதானமும் இல்லை.

அலைந்துக் கொண்டிருக்கும் போர் மேகங்கள் கோடை மழையாக கொஞ்ச நேரம் கொட்டிவிட்டுப் போகுமோ அல்லது அடைமழையாகத் தொடருமோ என்பது தெரியாது. 'எங்கெங்கு நோக்கினும் சக்தியடா' என்று பாடிய பாரதியைப் போல நமக்கும் ஒன்று சொல்லத் தோன்றுகிறது. ‘எங்கெங்கு நோக்கினும் சண்டையடா’ என்று

மனிதகுலத்தின் வாழ்வு எவ்வாறு இருக்கும் என்ற கேள்விக்கு மேனாட்டு அறிஞர் T.S. எலியட் பதில் கூறும்போது “நாமெல்லாம் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு யுத்தம் என்ற தீயில் அழிந்து போவதுதான் நமது எதிர்காலமாக இருக்கும்” என்றார். இதை உண்மையாக்கும் வகையில் உலகில் எங்காவது ஒரு பகுதியில் போர் நடந்து கொண்டு தான் இருக்கிறது. மனித குலத்தின் மாண்பை காக்க நமக்குத் தேவை உலக அமைதி.

“Mankind should put an end to wars otherwise wars will put an end to mankind” என்றார் அமெரிக்க முன்னால் அதிபர் ஜான் கென்னடி.

உலகில் அமைதி குறைந்து போனதற்குக் காரணம் நாடுகளுக்கிடையே காணப்படும் ஒருவித ஆதிக்க மனப்பான்மையும், சுரண்டல் தன்மையுமே ஆகும். ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியல் சுதந்திரம் இருக்கிறதே தவிர, பொருளாதாரச் சுதந்திரம் இல்லை. ஏராளமான வளங்களைக் கொண்ட தென் ஆப்பிரிக்க நாடுகளும், தென் அமெரிக்க நாடுகளும் வளர்ச்சி அடையாததற்குக் காரணம் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் ஏகாதிபத்திய மனப்பான்மையே ஆகும்.

தங்கள் நாட்டில் ஜனநாயகம் வேண்டும் என நினைக்கும் இவை மற்ற நாடுகளில் ஒரு கட்சி ஆட்சியே இருக்க வேண்டும் என மறைமுகமாகச் செயல்படுகின்றன. நாடுகளுக்கிடையே இவை பகைமையை மூட்டிவிடுகின்றன. அப்பொழுது தான் அவர்களின் போர் ஆயுத வியாபாரம் அமோகமாக இருக்கும். இதன் மூலம் உலக அமைதி குறைந்துவிடுகின்றது.

உலக அமைதி குறையப் பல காரணங்கள் உண்டு. அது **பொருளாதாரக் காரணத்திற்காக** இருக்கலாம். ஈராக் - குவைத் போர் அதற்காக ஏற்பட்டது தான்.

**அரசியல் காரணங்களுக்காகப்** போர் ஏற்படலாம். - 70 களில் ஏற்பட்ட கம்போடியா போர் இதற்கு ஓர் உதாரணம்.

**மதம் சம்பந்தமாக** போர் ஏற்படலாம் - இதற்கு உதாரணம் இஸ்ரேல் - பாலஸ்தீன் போர் மற்றும் சிலுவைப் போர்கள் எனப்படும் ஐரோப்பிய நாடுகளில் நடந்த 100 ஆண்டு காலப்போர்கள்.

**விஞ்ஞான காரணங்களுக்காகவும்** போர் மூளும். அணுசக்தியை ஆக்கச் சக்திக்கு பயன்படுத்துவதாக கூறிக் கொண்டு அதை அழிவுச் சக்திக்கு பயன்படுத்துகிறோம்.

**அறிவு சம்பந்தப்பட்ட** காரணத்திற்காகவும் அமைதி குலைகிறது. படித்தவர்களும் படிக்காதவர்களை ஏமாற்றி உயர்ந்து வரும் நிலையை நாளும் பார்க்கிறோம்.

இன்று தேசத்திற்கு தேசம் சந்தேகம், குறுகிய மனப்பான்மை, கொள்கை வேறுபாடு, அதை நீக்கி உலக அமைதி ஏற்பட என்ன செய்ய வேண்டும் என நாமெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

## தனிமனித அமைதியே உலக அமைதி:

உலக அமைதியை இழந்து தவிக்கும் மனித குலத்திற்கு மாற்றாக எது இருக்க முடியும் என்றால் அது ஆன்மீகமே என்பதே நமது அருட்தந்தையின் கொள்கை முழக்கம். ஆகவே தான் அவரின் மந்திர வாசகம் ''வாழ்க வையகம்'' ''வாழ்க வளமுடன்'' என்பது தனிமனித, உலக அமைதி இரண்டையும் குறிக்கும். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல அவருடைய உபதேசங்கள் அனைத்திற்கும் எடுத்துக்காட்டாக இருப்பது இந்த வாழ்க வையகம் வாழ்க வளமுடன் என்ற அமைதிக் கோட்பாடேயாகும்.

Part deteramine the whole என்பார்கள். அது போல தனி மனித அமைதி என்பது ஒரு பாகம். உலக அமைதி என்பது ஒரு முழுமை. ஒவ்வொரு தனிமனிதனின் மனத்திலும் அமைதி வந்து விட்டால் உலக அமைதி தானே வந்து விடும்.

இன்றைய சூழ்நிலையில் மனிதர்களுக்கிடையே ஒரு வித பதற்றம்,அச்ச உணர்வு, ஆரவாரப்போக்கு, பொருளாசை, அடக்கு முறை முதலிய குறைகள் காணப்படுகின்றன. இவற்றை அகத்தாய்வு செய்து குறைகளைப் போக்கி மன நிறைவுடன் வாழ்ந்தால் தனி மனித அமைதி தானே கிடைக்கும்.

பகவத்கீதை சுட்டிக்காட்டும் மூன்று வகையான மனிதர்களில் முதல் வகை மனிதரான

சத்புருஷர்களின் அருங்குணங்களான அன்பு, அறிவு, அடக்கம், சேவை ஆகியவை தனிமனிதனிடம் வளர்ந்தால் மனிதன் அமைதியடைய முடியும்.

The greatest journey is the journey inward என்ற வாக்கியத்திற்கேற்ப நாமெல்லாம் உள்நோக்கிப் பயணித்து நாம் யார் நம் கடமை என்ன? நமது நோக்கம் என்ன? என நம்மை நாமே அகத்தாய்வு செய்தால் அமைதி கிடைக்கும்.

மனிதன் அறிவை வளர்த்துக் கொள்வதோடு அன்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். பொருள் தேடுவதோடு கூடவே முழுமையான வாழ்வையும் தேடிக் கொள்ள வேண்டும். உலகம் முழுவதும் ஓர் உடல், நான் அதன் உறுப்பு, என்ற நினைவு வந்துவிட்டால் தனிமனித அமைதி தானே கிடைக்கும். அதன் மூலம் உலக அமைதி கிடைக்கும்.

## ஞானிகள் காட்டும் உலகஅமைதி:

நமது பாரம்பரியச் செல்வங்களான ஆன்மீக இலக்கியங்கள், தத்துவங்கள் மன அமைதிக்கு வழிகாட்டுகின்றன. மனித வாழ்வின் இலக்கு இறைவனுடன் கலப்பது. அதற்கு வழிகாட்டவே சங்கரர் காட்டும் அத்வைதம், ராமானுஜர் போதித்த விஷிட்டாத் துவைதம், மத்வர் காட்டிய துவைதம். இவையனைத்தும் மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனை அடையும் பாதையை நமக்குக் காட்டுகின்றன. இவை அனைத்தும் ஒரு இலக்கை அடைய உதவும் வெவ்வேறு வழிகள். இந்த வழிகளின் தத்துவங்கள் சமஸ்கிருதத்தில் இருந்து வந்தன. அவை இன்றைக்கு எளிமையாக்கப்பட்டு எளியவர்களுக்கும் சென்றடையும் வண்ணம் எளிமையாக எடுத்துக்கூறிப் பணியாற்றியவர் நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள். தனிமனித அமைதிக்கு அவர் கூறும் வழிகளான எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தால், சினம் தவிர்தல், கவலை ஒழித்தல் என்பவை நம்மால் கடைபிடிக்க கூடியவை.

உலக நாடுகளின் ஆன்மீகக்குரு என்று போற்றப்படும் இந்தியாவின் ஆன்மீக நெறி உலக அமைதிக்கு வழி காட்ட முடியும் என்பதை நாம் எடுத்துக்காட்டுகளுடன் பார்க்கிறோம்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, சாந்தி ஹி என்று நமது உபநிஷதங்கள் தனிமனித அமைதிக்கும் அதன் மூலம் உலக அமைதிக்கும் வழிகாட்டுகின்றன.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்', என்ற திருமூலரின் வாக்கை உலக நாடுகள் உணர்ந்து விட்டால் வேற்றுமைகள் மறைந்து ஒற்றுமை உருவாகும். அதன் மூலம் உலக அமைதி பிறக்கும்.

'யாதும் ஊரே, யாவரும் கேளீர்' ! என்ற செய்தியை உலக நாடுகள் அறியும் போது, அங்கே போர்கள் உருவாக வாய்ப்பில்லை.

'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம்', என்ற பாரதியின் வாக்கு மெய்ப்படும்போது தனிமனித அமைதி பிறக்கும். அது உலக அமைதிக்கு வழி வகுக்கும்.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற கோட்பாட்டை உணர்ந்து விட்டால், உலகப் போர்கள் நடைபெற வாய்ப்பில்லை.

ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் சுதந்திரமும், நட்பும் கொண்டு பழகிவந்தால், உலக அமைதி பிறக்கும்.

நாடுகள் சகிப்புத் தன்மையுடனும் (Tolerance) மதிப்புத் தன்மையுடனும் (Reverence) நடந்து கொண்டால் உலக அமைதிக்கு ஆபத்து இருக்காது. அனைத்து மதங்களும் போரை வெறுத்தாலும், மதங்களின் பெயரால் ஆங்காங்கே போர்கள் அன்று தொட்டு இன்று வரை நடைபெற்று வருகின்றன.

அமைதியைக் கெடுக்கும் போரை நம்முடைய உலக மதங்கள் ஒத்துக் கொள்ளவில்லை.

வாளை, எடுப்பவன் வாளால் மடிவான் என்கிறது "கிறித்துவ மதம்"
போரை தூண்டுபவன் மனிதனே அல்ல என்கிறது "புத்தம்"
மண்ணுலக வாழ்வின் குறிக்கோள் அமைதியேயாகும். போர் அல்ல என்கிறது "இந்து மதம்"
போர் முழுமையாகத் தண்டிக்கத் தக்கது என்கிறது "சமணம்"
போர்கள் அனைத்தும் வன்மத்தைத் தருபவை என்கிறது "தாவோ மதம்"
ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் மீது திணிக்கும் படுபாதகமான செயலே போர் என்கிறது "பார்சி மதம்"

உலக அமைதிக்கு என்ன வழி என்பதை நமது முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். போரில்லாமல் இருப்பது மட்டும் மன அமைதிக்கு வழி வகுக்காது. நட்புறவும் இன, மத, தேச பேதமின்றி வாழ்வதும் உலக அமைதிக்கு வழி வகுக்கும்.

## உலக அமைதிக்கான அமைப்புகள்:

உலக அமைதிக்கு இந்தியாவின் பங்களிப்பு அதிகமாகவே இருந்து வந்திருக்கிறது. காந்தியடிகளின் அகிம்சைக் கோட்பாடு நேரு கொண்டு வந்த "கூட்டுச்சேராக் கொள்கை" "பஞ்சசீலக் கொள்கை", தாகூர் கண்ட "விஸ்வபாரதி" பல்கலைக்கழகம், ராஜீவ் காலத்தில் அவர் முயற்சியில் வந்த "SARRC" என்ற அமைப்பு, வேதாத்திரி மகரிஷியின் உலக சமாதானத்திற்கான அவருடைய 14 அம்ச திட்டங்கள் போன்றவை உலக அமைதிக்கான நமது முயற்சிகள் ஆகும்.

சர்வதேச அமைதி மாநாடுகள், சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், ஒலிம்பிக் விளையாட்டு, நோபல் பரிசு, UNO, World Bank, IMF, UNICEF, UNISCO, ஆகிய அமைப்புகள் உலக அமைதிக்காக ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களேயாகும். அவற்றின் பங்கு பணிகள் பலப்பட வேண்டும். நாடுகளுக்கிடையே கலாச்சார பரிவர்த்தனை இருக்க வேண்டும். விஞ்ஞானம் ஆக்கப்பணிகளுக்காகவே பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டு அமைதி நிலவுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். உள்நாட்டு அமைதியே சர்வதேச அமைதிக்கு அடிப்படையாகும்.

## உலக அமைதி திட்டங்கள்:

உலகில் அமைதியை உருவாக்க ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் (UNO) நிறுவனத்தை வலுப்படுத்தி அதன் மூலமாக உலக அமைதியைப் பற்றிய முடிவு எடுத்துச் செயல்படுத்த வேண்டும்.

உலக நாடுகளின் எல்லைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஐ.நா. சபை ஏற்றுக் கொள்ளும் வரையில் உலகில் போரை நிரந்தரமாக நிறுத்த வேறு வழியே இல்லை. போர் மூலம் மக்களைக்கொன்று குவிக்கும் கொலைக் கருவிகளை உற்பத்தி செய்து விற்றுவரும் ஐந்து நாடுகளுக்கு இரத்து அதிகாரம் (Veto Power) இருப்பதால் தீர்மானம் அங்கு நிறைவேற்ற முடியாது. ஆகையால் அந்த இரத்து அதிகாரத்தை நீக்க முதலில் வழிகாண வேண்டும்.

வேதாத்திரி மகரிஷியவர்கள் 9.1.1975ல் UNO-Deputy Secreatary General Mr. C.V. Narasimman அவர்கள் தலைமையில் அமர்ஷீல்ட அரங்கத்தில் உலக அமைதி குறித்து பேசினார். அத்துடன் ஐ.நா - சபை அமைப்பில் உள்ள குறைகளை போக்கி, அதனை ஜனநாயக முறையில், உலகப் பொது அமைதி காக்கும் நிறுவனமாக்க வேண்டுமெனக் கருத்து தெரிவித்திருந்தார்.

உலக அமைதிக்கு உரிய திட்டங்களை வேதாத்திரிமகரிஷி அவர்கள் வகுத்து அமெரிக்க நாட்டில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தின் ஒரு பகுதியான யக்காவேலி என்ற ஆசிரம அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அனைவராலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.

❋ உலகில் பிறந்து வாழும் எல்லா மக்களுக்கும் சம உரிமையும், சமப்பிரதிநிதித்துவமும் அளிக்கத்தக்க முறையில் எல்லா நாடுகளையும் இணைத்த, எல்லா நாட்டு ஆட்சிக்கும் மேலாதிக்கம் உடைய, ‘ஓருலகப் பேரரசு’ ஜனநாயக முறையில் அமைக்கப்பட வேண்டும். செயல் புரியவும் வேண்டும்.

❊ ஒரு கோடி மக்களுக்கு ஒரு பிரதிநிதி விகிதம். அந்தந்த நாட்டு அரசாங்கத்தின் மூலம், தேர்தல் மூலமோ, நியமன மூலமோ, தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டு 'உலகப் பொது ஜனநாயக சட்டமன்றம்' ஒன்றை அமைக்க வேண்டும். அது மனித உரிமையினையும், சுதந்திரத்தையும் காக்க ஏற்ற சட்டங்களை அவ்வப்போது இயற்றிப் பணிபுரியும்.

❊ இந்த சட்டமன்றம் உலகப் பேரறிஞர்களையும், நிபுணர்களையும் தேவையான எண்ணிக்கையில் கூட்டி ஒரு 'ஆட்சி மன்றம்' அமைக்கும். உலகப் பேரரசாகச் சட்ட மன்றத்தின் மேற்பார்வைக்கு உட்பட்டு, அதன் சட்ட திட்டங்களை அமுல் நடத்தும். இந்த ஆட்சி மன்றத்தைக் கண்காணிக்கவோ, திருத்தவோ, மாற்றவோ, புதுப்பிக்கவோ, கலைக்கவோ உலக ஜனநாயகச் சட்டமன்றத்திற்கே உரிமை உண்டு.

❊ எல்லோருடைய பிறப்புரிமையும் சுதந்திரமும் ஒரு தனிமனிதனாலோ, ஒரு குழுவினராலோ, ஒரு நாட்டு ஆட்சியாலோ பறிக்கப்படாமலும், தடுக்கப்பட்டாலும் இந்த உலகப் பேரரசு பாதுகாக்கப் பொறுப்பேற்று கொள்ளும்.

❊ உணவு, உடை, வீடு, கல்வி, தொழில், திருமணம், ஆராய்ச்சி வாய்ப்பு இவற்றை ஒவ்வொரு அரசாங்கமும் அதன் கீழ் இருக்கும் குடிமக்கள் பெற வசதியைச் செய்யும்.

❊ ஆண்களுக்குப் போலவே பெண்களுக்கும் எல்லாத்துறைகளிலும் சம உரிமை அளிக்கப்படும். மேலும் இயற்கையாகப் பெண்களுக்கென அமைந்த உடலமைப்புக்கு ஒத்த அவசியமான வசதிகளும் அளிக்கப்படும்.

❊ மக்கள் சமுதாயத்தில் ஒரு கோடி மக்களைக் கொண்ட குழுவினரோ ஒரு பிரதேச வாசிகளோ அல்லது ஒரு நாட்டவரோ விரும்பினால், அவர்களது விருப்பம் போலவே தனியாக ஆட்சி எல்லை வகுத்துக் கொண்டு, சட்டமன்றம் அமைத்துக் கொண்டு, உலக ஆட்சிக்கும் அந்நாட்டுச் சமத்துவ ஆட்சிக்கும் உட்பட்டு, மனித உரிமைச் சாசனத்தை மதித்து வாழ உரிமையுண்டு.

❊ உலக மக்கள் எல்லோருக்கும் உலகனைத்தும் சொந்தம். எந்த நாட்டிலும் எந்த இடத்திலும் எவரொருவர் குடியேறவோ, பயணம் செய்யவோ சம உரிமை உண்டு. மக்கள் உடல்நலம். இனிய வாழ்வு இவற்றிற்காக உலக அரசாங்கம் தான் இந்தத் துறையில் அவசியமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

❊ உலகில் எந்த அரசாங்கமும் தனது கடமைகளை நிறைவேற்றத் தவறினாலும், தகுதியற்றிருந்தாலும் அந்தப் பிரதேசத்தை உலக ஆட்சி கைப்பற்றி மக்களைத் தகுதி உடையவர்களாக்கி, பின்னர் ஆட்சியை அந்நாட்டு மக்களிடம் ஒப்புவிக்கும்.

❊ போர் சட்டவிரோதமாக்கப்படும். போர் அணிகள், போர்க்கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்கள், உலகில் எங்கிருந்தாலும் அவை உலக ஆட்சி நிர்வாகத்தின் கீழ் வந்து விடும். இவற்றை ஆக்கத் துறைக்காகவும்,பின் தங்கிய நாடுகளையும், மக்களையும் முன்னேற்றுவதற்காகவும், அகில உலகத்தரசு திட்டமிட்டுப் பயன்படுத்தும்.

❊ உலக ஆட்சியின் கீழ் அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு 'தொண்டு நிலையம்' அமைக்கப்படும். அது அவ்வப்போது மனித இன வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றவும், ஒரு பொது சமுதாய சீர்திருத்த இணைப்பு நிலையமாக பணி ஆற்றும். ஆன்மிகம், பொருளாதாரம், சுகாதாரம், விஞ்ஞானம், அரசியல் என்ற ஐந்து வகைகளையும் இணைத்து அறிஞர்களும், நிபுணர்களும் கூடிய ஆராய்ச்சிக் குழுவினரால் மக்கள் வாழ்வை அவ்வப்போது சீர்திருத்த ஏற்ற பல வழிகளை வகுத்துக் காட்டும்.

**நிறைவுரை :**

இறையுணர்வும், அறநெறியும், வாழ்க்கை வழியாகக் கொண்ட 'பிரம்ம ஞானம்' உலகில் பரவினால், ஆண்டுகள் பல ஆனாலும், அதன் மூலம் உலகில் நிச்சயம் அமைதி ஏற்படும் என்ற திடமான எண்ணம் காரணமாக 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் தேதி உலக அமைதியையே குறிக்கோளாகக் கொண்ட உலக சமுதாய சேவா சங்கத்தினை வேதாத்திரி மகிரிஷி அவர்கள் அரசு பதிவுடன் தொடங்கினார். அந்த நாள் உலக அமைதி வேள்வி நாளாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

❑❑❑❑❑

# 6. இந்தியா உலகிற்கு வழங்கும் செய்தி

**N. பன்னீர் செல்வம்**
துணைப் பேராசிரியர் -
மனித வளமாண்புத் துறை
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

'அறிவு' என்பது உலகில் வேறெந்த நாட்டையும் தன் இருப்பிடமாகக் கொள்ளுமுன் குடிபுகுந்த தாயகம் நமது புராதன பாரதம். கடல் பொங்கிப் புரண்டோடுகின்ற பேராறுகளும், அடுக்கடுக்காய் உயர்ந்தெழுந்த சிகரங்கள் மீது பனிமுடி தரித்து, ஏதோ வானுலக ரகசியங்களை எட்டிப்பார்க்க விழைவது போல் விண்ணை முட்டி நிற்கின்ற நிலையான இயமயமலைத் தொடர்களும், அதன் ஆன்மீக மாட்சிமையைப் புறத்தில் காட்டுவது போல் உள்ளது. இதுவரை வாழ்ந்தவர்களுள் மகத்தான ரிஷிகளின் திருப்பாதங்கள் இதோ இந்த பாரத மண்ணில்தான் நடைபோட்டன.

மனிதனின் இயல்பு பற்றியும், அகவுலகம் பற்றியும் புறஉலகிற்கு எடுத்துக்காட்ட இங்குதான் முதலில் ஆராய்ச்சிகள் தொடங்கின. ஆன்மாவின் அமரத்துவம், அனைத்தையும் ஆட்சி புரிகின்ற கடவுள், இயற்கையிலும் மனிதனிலும் ஊடுருவி நிற்கின்ற இறைவன் - போன்ற கோட்பாடுகள் இங்குதான் முதலில் எழுந்தன.

இத்தகு மேன்மைகளை, பெருமைகளை உணர்ந்த பாரதியார் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் பெருமிதத்தை வெளிப்படுத்தும் விதமாக

மாரத வீரர் மலிந்த நன் னாடு
மாமுனிவோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவமிஃதையெமக்கிலை யீடே

என்கிறார் பாரதியார்.

## யாதும் ஊரே யாவரும் கேளீர்

கணியன் பூங்குன்றனார் கூறிய இந்தச் சொற்றொடர் சமதர்ம சமுதாயக் கனவை இந்த உலகிற்குக் காட்டியது. இந்தியாவில் எத்தனையோ வேற்றுமைகள்! இன, மத, ஜாதி மற்றும் கலாச்சார வேற்றுமைகள் இருந்தாலும் நமக்குள் அடிப்படையாக இருக்கின்ற ஒற்றுமை அல்லது ஒருமைப்பாடு உலக நாடுகளிடையே நம்மை உயர்ந்து நிற்கச் செய்கிறது.

இந்தியா, நாகரிகம், கலாச்சாரம், பாரம்பரியம் தத்தவக் கோட்பாடுகள் இவற்றால் தனித்துவம் பெற்று உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## ஒன்றே குலம் ஒருவனே தேவன்

எனும் திருமூலரின் கூற்றுப்படி இந்தியாவின் ஒற்றுமை உணர்வும் சக்தியும் இந்த நாட்டின் அடிப்படை உணர்வான பொறுமை, சகிப்புத் தன்மை மற்றும் நாகரிகம் ஆகியவையும் உலக மக்களை வியந்து பார்க்க வைத்திருக்கிறது. ஆதிசங்கரர் போதித்த அத்வைதத்தைப் புரிந்து கொண்டு உலகம் முழுவதிலும் உள்ள அனைத்து உயிர்களிலும் ஒரே இறைவனின் பிரதிபலிப்பு தான் ஜீவ ரூபமாய் இயங்குகிறது என்பதை உருவேற்றினால் உலகில் அமைதி நிலவும்.

இந்திய மக்கள் தாங்கள் வாழ்கின்ற வாழ்க்கை முறை, ஒழுக்க நெறி, இவற்றையே உலகிற்கு செய்தியாக வழங்கினர்.

## இந்தியாவின் ஜனநாயக சக்தி

தலைசிறந்த தமிழ்க் காவியமான சிலப்பதிகாரம் “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்”. என்று உலக மக்களின் வாழ்க்கை நெறிமுறை, பொறுப்புணர்வு பற்றி எடுத்துரைக்கிறது. இந்த வகையில் நமது நாடு உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயக சக்தியாக விளங்குகிறது. வேறு எந்த நாட்டிலும் இல்லாத அபூர்வ அனுபவ சக்தி நம்மிடம் இருக்கிறது. உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய அளப்பரிய மனித சக்தி நம்மிடம் உள்ளது. மக்களால் மக்களுக்காக மக்களாலேயே ஆளப்படுகின்ற அரசியலமைப்பைக் கொண்டது நமது நாடு. காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை பல்வேறு இன, மொழி, மத கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் வாழ்ந்தாலும், எல்லோரையும் தேச ஒற்றமை என்ற பாசக் கயிற்றால் கட்டி வாழ வைத்துக் கொண்டிருக்கிறது நமது ஜனநாயகம். உலக நாடுகளுடன் நட்பையும், பரஸ்பர அனுகூலத்துக்கான கூட்டுறவையும் அயல் நாட்டுக் கொள்கையாகக் கொண்டது நமது நாடு.

## பார் புகழும் பாரதம்

"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு" என்றும்

"பாரதநாடு பழம்பெரும் நாடு
நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்"

என்றும், பாரத நாட்டின் மேன்மையையும், தொன்மையையும், சுட்டிக் காட்டி நம்மை நிமரச் செய்தவர் பாரதி. மேலும் 'சமஸ்கிருத இலக்கியத்தின் வரலாறு' என்னும் புத்தகத்தின் ஆசிரியர் பேராசிரியர் மேக் டானல் (Macdonell) ".... ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாய் மத நம்பிக்கைகள் சடங்குகள், சமூக பழக்க வழக்கங்கள். இலக்கியம், வரலாறு, மொழி ஆகியவற்றில் தடையேயில்லாத வளர்ச்சியினைப் பெற்ற இந்திய நாகரிகம் தவிர உலகில் வேறு இல்லை". என்று கூறுகிறார்.

மேற்கண்ட வெளி நாட்டவரின் கருத்திணை நோக்குகையில்

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்,
மண்புக்கு மாய்வது மண்." .....குறள் (996)

என்ற குறள் நினைவுக்கு வருகிறது.

பண்பாட்டால் உயர்ந்த சமுதாயமும், நாடும் உலகின் பிற நாடுகளுக்கும் சமுதாயத்திற்கும் முன்னோடியாக விளங்குவதுடன் - வழிகாட்டி நடத்தும் தலைமைக்குத் தகுதியும் பெற்றதாக அமைவதில் வியப்பேதும் இல்லை.

தொன்மையான பாரதநாடு, தனது உயர்ந்த நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், வாழ்வியல் நெறிகள், சமுதாய அமைப்பு, அரசியல், பொருளாதாரம், மருத்துவம், கலை, அறிவியல், கணிதம், ஆன்மீகம் போன்ற துறைகளில் சிறந்த வளர்ச்சியும் ஏற்றமும் பெற்றிருப்பதால் - உலக சமுதாயத்தையே தன் தலைமையின் கீழ் நடத்திச் செல்லும் பெருமை பெற்று விளங்குகிறது.

## உலகம் கண்டுணர்ந்த இந்தியப் பண்பாடு, நாகரீகம், கலாச்சாரம்

சுவாமி விவேகானந்தர், ''என் தாய்நாடு மிருக மனிதனை இறைமனிதனாக மாற்றும் தன் பிரகாசமான லட்சியத்தை நிறைவேற்றும் பொருட்டுக் கம்பீர நடைபோட்டுச் செல்கிறது'' என்றார். இந்தியப் பண்பாடு அன்பு மதத்தை அடிப்படையாகக் கொண்டது. தியாகத்தால் மட்டுமே நமது வாழ்க்கை அமரத்துவம் பெறும்.

இந்தியாவின் கடந்த காலத்தைப் பற்றிய முதல் தகவல் சிந்து மாநிலத்திலிருந்த மொகஞ்சாதரோ மற்றும் மேற்கு பஞ்சாபில் இருக்கும் ஹாரப்பா ஆகிய இடங்களில் நடந்த

அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்தது. சிந்து சமவெளி நாகரிகம் இந்தியாவின் தொன்மையான நாகரிகத்தை உலகுக்குக் காட்டியது.

சர் ஜான் மார்ஷல் (Sir John Marshall) இவ்வாறு கூறுகிறார். " மொஹஞ்சாதாரோ ஹாரப்பா நாகரீகங்கள் மிகப் பழமையானவை என்பதும் இந்திய மண்ணில் பலநூறு ஆண்டுகளாய் வேருண்றியவை என்பதும் தெளிவாய்ப் புலனாகின்றன".

மற்றநாடுகளில் பிற நாட்டினர் சென்று குடியேறினால் அவர்கள் பிற நாட்டினர் என்ற தன்மையுடன் வாழ்வர். ஆனால் இந்தியாவில் குடியேறிய ஈரானியர், கிரேக்கர், இஸ்லாமியர், துருக்கியர், கிறிஸ்துவர், யூதர்கள் எல்லாருமே இந்திய இனத்துடன் இரண்டறக் கலந்து விட்டார்கள்.

இதையே டோட்வெல் (Dodwell) என்பவர், "இந்தியா பிறரை ஏற்றுக் கொள்ளும் குணத்தில் கடலைப் போன்றுள்ளது" என்கிறார்.

## உலகம் கண்டுணர்ந்த இந்திய மதங்கள்

நம் இந்திய மக்களின் வாழ்வையும், உலக மக்களின் வாழ்வையும் பண்படுத்துவதற்காக சமைக்கப்பட்ட பல்வேறு சமயங்களான இந்து மதம், புத்தமதம், சமண மதம், சீக்கிய மதம், தோன்றிய இடம் நமது பாரதம்.

இந்திய மதத்தினைக் குறிக்கும் தொன்மையான சொல் 'ஆர்யதர்மம்' என்பதாகும். தர்மம் என்ற சொல் மதத்தினை விட்டு மாறுபட்டது. மனிதனுடைய கடமைகளை மற்றும் வழிமுறைகளைக் குறிக்கின்ற ஒரு சொல்லாகும். இந்தியாவில் தோன்றிய அனைத்து நம்பிக்கைகளையும் குறிக்கிற சொல்லே 'ஆர்ய தர்மம்' எனப்படுவது. முக்திக்கு வழியாகத் தான் உருவாக்கிய பாதையை ஆர்யவழி என்று தான் கௌதம புத்தர் அழைக்கிறார். அவர் இவ்வழியைத் தான் உலகிற்கு கொண்டு சென்றார். "இந்து மதம் என்பது அகிம்சை வழியில் சத்தியத்தை தேடுவது" என்றார் மகாத்மா காந்தி. எல்லா மதங்களும் இறையுணர்வையும், அறநெறியோடு கூடிய வாழ்க்கை முறையையும் உலக மக்களுக்கு மார்க்கமாக எடுத்துக் சென்றது இங்கிருந்து தான்.

## உலகம் கண்டுணர்ந்த இந்திய தத்துவமுறைகள்

இந்திய தத்துவமுறைகள், புத்தரின் காலத்திற்கு முன்னரே, கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்திற்கு முன்பாக, இந்திய தத்துவத்தில் ஆறு வழிமுறைகள் உருவாயின. ஒன்றிலிருந்து மற்றது மாறுபட்டுத் தோன்றினாலும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டிருந்தன. அவை

1. நியாயம் 2. வைசேடிசம் 3. சாங்கியம்

4. யோகம் 5. மீமாம்சம் 6. வேதாந்தம்

என்பனவாகும்.

### 1. நியாயம்

'நியாயம்' என்கிற முறை வாதபூர்வமாய் ஒவ்வொன்றையும் பகுத்து உணர்ந்து அறிவது. சரியான முறையில் பகுத்தறிவதே நியாயம் எனப்பட்டது. இந்த முறை இன்று வரை கலாசாலைகளில் கற்றுத் தரப்படுகிறது. சில அடிப்படையான விஷயங்களைக் கற்றுத் தந்தும், படிப்படியாக விளக்கங்களைத் தந்தும், வாழ்க்கையும் இயற்கையும் ஒரு ஒழுங்கில் இயங்குகின்றன என்று நம்பியது.

### 2. வைசேடிகம்

இதே போன்று 'வைசேடிகம்' முறைக்கும் 'நியாயம்' என்கிற முறைக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன. அணு சார்ந்த அண்டத்தின் கோட்பாடுகளை உருவாக்கி இந்த உலகிற்கு வழங்கிற்று. நியாயம், வைசேடிகம் ஆகிய முறைகளுக்கும் புத்த மத தத்துவங்களுக்கும் இடையே நிறைய ஒற்றுமைகள் உள்ளன.

### 3. சாங்கியம்

மேலும் கபிலரால் உருவாக்கப்பட்ட சாங்கிய முறையை உலக தத்துவத்தில் சிறந்ததாகக் கருதப்படுகிறது. ரிச்சர்ட் கார்பே (Richard Garbe) என்பவர் " உலக சரித்திரத்தில் முதன் முறையாக மனித மனத்தின் பரிபூரண சுதந்திரமும், தனது திறமைகளில் முழு நம்பிக்கையும் வெளியிடப்பட்டது. 'சாங்கிய' முறையில் தான்" என்று கூறுகிறார். இவ்வுலகம் கடவுளால் உருவாக்கப்படவில்லையென்றும் தொடர்ந்த பரிணாம வளர்ச்சியினாலே தோன்றிற்று எனவும் நம்பிற்று. ப்ரகிருதி, புருஷம் ஆகிய இரண்டையும் இணைத்து த்வைதம் என்ற நுட்பமான கோட்பாடு உருவாகியது.

### 4. யோகம்

மேலும் இந்த உலகிற்கு அற்புதமான யோக முறையை இந்தியா வழங்கியுள்ளது. பதஞ்சலி முனிவரின் 'யோக முறை' மனம் உடல் இரண்டையும் சீராக்கும் பயிற்சியைக் கொடுத்ததோடு, ஆன்மீக எழுச்சிக்கான பயிற்சியாகவும் ஆயிற்று. இது தவிர இந்த உலகிற்கு பாணிணி அருளிய சமஸ்கிருத இலக்கணத்திற்கு பதஞ்சலி முனிவர் சிறப்பான விளக்கவுரை எழுதினார். அது 'மகா பாஷ்யம்' என்று உலகில் பிரபலமடைந்தது.

### 5. மீமாம்சம்

'மீமாம்சம்' என்பது தத்துவத்தின் அடுத்த முறை. இது சடங்குகள் நிறைந்த பல தெய்வ வணக்கமுறைகளைக் கொண்டது. தர்மம் என்று இது வரையறுத்ததையே இந்து மதம் மேற்கொண்டது.

### 6. வேதாந்தம்

மேலும் உபநிஷதங்களிலிருந்து தோன்றிய 'வேதாந்தம்' பலவிதமாய் விரிந்து வளர்ந்து பல வடிவங்களைப் பெற்று எல்லாம் ஒன்றே என்கிற தத்தவத்தைக் கூறிற்று. இந்து மதத்தில் இன்றைக்கு முக்கிய அங்கம் வகிப்பது அத்வைத தத்துவம்

## உபநிஷதங்கள் உணர்த்தும் உலகத் தத்துவம்

கி.மு. 8 ம் நூற்றாண்டினையொட்டி உருவானவையாகக் கருதப்படுகிற உபநிடதங்கள் இந்திய - ஆரிய சிந்தனைகளின் வளர்ச்சியினைப் பற்றித் தெளிவான கருத்தினை உலகுக்கு அளிக்கின்றன. வாழ்க்கையின் உண்மையைத் தேடும் முயற்சியாகவே உபநிஷதங்கள் உருவாகியிருக்கின்றன. 'எல்லா உடல்களிலும் ஒரே ஆத்மாவைக் காண்கிறவன், எந்த உயிரையும் வெறுக்க முடியாது'. என்பது உபநிஷக்கருத்து. சமுதாயப் பார்வையை விடத் தனிப்பட்டவர்களின் மேம்பாடும், முழுமையுமே வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

## பண்டைய இந்தியாவின் வாழ்க்கைமுறை மூலம் உலகுக்கு தெரிவிக்கும் செய்தி

உலகம் இந்திய தத்துவத்தை ஆராய்ச்சி செய்த அளவுக்கு இந்திய மக்களின் அக்காலத்திய பொருளாதார நிலை பற்றிய ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கவில்லை. கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'அர்த்த சாஸ்திரம்' அக்காலத்திய அரசியல், சமுதாயம் பொருளாதாரம் மற்றும் படைக்கலங்களைப் பற்றிய பல விஷயங்களை உலகிற்கு எடுத்துக் சொல்கிறது.

### 1. அர்த்த சாஸ்திரம்

உலகிற்கு கிடைத்த அரிய பொக்கிஷம் இது. சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் அரசின் இயல்புகள் அனைத்தையும் மிக நுட்பமாக எடுத்துச் சொல்கிறது. அரசின் கடமை, அமைச்சர்கள் பணி மற்றம் உறுப்பினர்கள் பொறுப்பு, உறுப்பினர்கள் கூட்டம், அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் பணிகள், இராஜதந்திர முறைகள், போர்க்கால, அமைதிக்கால நெறிமுறைகள் முதலியன மிக நுட்பமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை முதலியன பற்றியும் அவற்றின் கட்டுபாடுகள் பற்றியும் சாணக்யர் விபரமாகச் சொல்கிறார். இந்த வகைப்படைகளைக் கொண்ட 'சதுரங்கம்' என்னும் விளையாட்டு

இந்தியாவில் முதன்முதலில் தோன்றிற்று. இன்றும் உலக அரங்கில் இவ்விளையாட்டில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

மேலும் வணிகம், தொழில்முறை, சட்டம், நீதிமன்றம், நகர நிர்வாகம், சமுதாய பழக்கவழக்கங்கள், திருமணம், விவாகரத்து, பெண்ணுரிமை, வரிவசூல், அரசு வருமானம், கடைத்தெரு, தோட்டக்கலை, உற்பத்தியாளர்கள், விவசாயம், நீர் வழிகள், கப்பல் போக்குவரத்து, மக்கட்தொகைக் கணக்கெடுப்பு, மீன் வளத்துறை, கடைகள், வீடுகள், அயல்நாடு செல்ல வழங்கும் அனுமதிச் சீட்டுகள், சிறை முதலியவை பற்றியெல்லாம் சாணக்கியர் குறிப்பிடுகிறார். சீனப்பட்டு பற்றிய குறிப்புகளெல்லாம் 4 ஆம் நூற்றாண்டிலேயே சீனாவுடன் வணிகத் தொடர்பு இருந்ததற்கு ஆதாரமாக விளங்குகின்றன.

மேலும் அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. "மக்களின் மகிழ்ச்சியே மன்னனின் மகிழ்ச்சி; அவர்களுக்கு எவை நன்மை தருமோ, அவற்றை மன்னன் விரும்ப வேண்டும்".

இவற்றை வைத்துப் பார்க்கும்போது பண்டைய இந்திய வாழ்க்கை நெறிமுறைகள் நிர்வாகம், ஜனநாயக முறையிலான அரசமைப்பு ஆகியவை உலக மக்களை வியக்க வைப்பதோடு மட்டுமல்லாமல் பின்பற்றவும் வழி வகுக்கிறது.

## 2. இரு பெருங்காப்பியங்கள்

வால்மீகி முனிவர் எழுதிய 'இராமாயணம்' உலகிற்கு ஒரு செய்தியாகக் கூறுவது 'ஒரு சொல்', 'ஒரு வில்', 'ஒரு இல்'. இராமபிரானின் ஒரு சொல் தூய்மையானதாகவும், நெறிபிறழாததாகவும் இருக்கும். அதே போன்று இராமனின் ஆற்றலுக்கு ஈடு இணையான ஆற்றல் இல்லை என்பதற்காக ஒரு வில் குறிப்பிடப்படுகிறது. மேலும் ஒரு இல் பிறர்மனை நோக்காத பேராண்மையாகிய கற்பு நெறியை உலகுக்கு வாழ்க்கை நெறியாக அளிக்கிறது.

வேதவியாசர் இயற்றிய 'மகாபாரதம்' எல்லோராலும் விரும்பப்படுகிறது. மகாபாரதம் உலகின் மிகச் சிறந்த காப்பியங்களில் ஒன்று. அது ஒரு பிரம்மாண்டமான படைப்பு. தொன்மையான இந்தியாவின் அரசியல், சமூக அமைப்பு பற்றியும், பாரம்பரிய புராணங்கள் பற்றியும் விளக்குகிறது. இதன் ரஷ்ய மொழிபெயர்ப்பு ஒன்றினையும் ரஷ்யர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

மகாபாரதத்தில் கிருஷ்ணரின் கதையும், பகவத் கீதையும் இடம் பெறுகின்றன. எனவே 'கடமையைச் செய், பலனை எதிர்பாராதே' என்பது கீதையில் வலியுறுத்தப்படுகிறது. எல்லா உயரிய விஷயங்களும் அடங்கிய காப்பியம் மகாபாரதம். துடிப்பான வாழ்க்கை நிரம்பிய காவியம், "உன் மனதிற்கு ஒப்புதல் இல்லாதவற்றை பிறருக்குச் செய்யாதே". உலகிற்கு மகாபாரதம் அளிக்கும் மிகப்பெரிய செய்தி இது. வாழ்வின் வெற்றிக்குத் தேவையான சத்தியம், துறவுநிலை, பெருந்தன்மை, அகிம்சை, தீவிர ஒழுக்கம் இவற்றைப் பாரதம் வலியுத்துகிறது.

## 3. உலகப் பொதுமறையாம் திருக்குறள்

'வள்ளுவம் தன்னை உலகினுக்கே தந்த

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்றார் பாரதி.

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளில் அவர் அறம், பொருள், இன்பம் என்று வாழ்வியல் நெறிகளை 133 குறட்பாக்களாக உலகத்திற்கு கொடுத்தார்.

உக்கிரப் பெருவழுதியார் இவ்வாறு கூறுகிறார்

'நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான் மறைந்து வள்ளுவனாய் தந்துரைத்த - நூன் முறையை
வந்திக்கச் சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி'

இதைப் பார்க்கும் போது திருக்குறள் என்றும் மறையா ஒரு காலப் பெட்டகம் என்பதை நம்மால் உணர முடிகிறது.

## 4. இந்தியாவின் தொன்மையான நாடக்கலை உலகுக்குத் தரும் செய்தி

கிரேக்கத் தாக்கத்தின் விளைவாகத்தான் இந்திய நாடகக்கலை உருவாயிற்று என முதலில் ஐரோப்பியர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். மாவீரர் அலெக்ஸாண்டரின் படையெடுப்புக்கு பிறகு தான் இந்திய நாடகக்கலை வெளியே பரவியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய அறிஞர்களால் இந்திய நாடகக்கலைக்குச் சுயமான தோற்றமும், வளர்ச்சியும் இருக்கிறது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்திய நாடகக் கலையின் தொடக்கத்தை ரிக்வேதத்தில் காணலாம். இராமாயணம், மகாபாரதம் ஆகிய காவியங்களில் நாடகங்களைப் பற்றி குறிப்பு தென்படுகிறது.

சர் வில்லியம் ஜோன்ஸ் (Sir william Jones) என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு 1789 - ல் வெளியான காளிதாசனின் 'சாகுந்தலம்' என்ற நாடகமே ஐரோப்பியருக்கு கிடைத்த முதல் இந்திய நாடகம். இது அங்கே ஒரு பரபரப்பையே ஏற்படுத்தியதன் விளைவாக ஜெர்மானிய, பிரெஞ்சு மற்றும் டென்மார்க் நாட்டு மொழியிலும், இத்தாலிய மொழியிலும் இதன் மொழியாக்கங்கள் வெளிவந்தன.

காளிதாசன் சமஸ்கிருத இலக்கியத்தின் ஒரு மகத்தான கவிஞனாக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறான். காளிதாசன் காலத்தால் அழியாத பல நாடகங்களையும் நீண்ட கவிதைகளையும் எழுதியிருக்கிறான்.

காதலியைப்பிரிந்து சென்ற காதலன், கார்கால மேகத்தை, காதலிக்கு தூது அனுப்புகிறதை 'மேகதூதம்' என்னும் காவியத்தில் எழுதியிருக்கிறான் காளிதாசன். மனித உணர்வுகளை மிகவும் நுட்பமாக வெளிப்படுத்துவதில் காளிதாசன் கைதேர்ந்துள்ளதை அறியமுடிகிறது.

## 5. மருத்துவம் தரும் செய்தி

கி.பி. முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளிலேயே உலகிற்குப் பயனுள்ள பல மருத்துவப் புத்தகங்கள் இந்தியாவிலிருந்து தோன்றின. தன்வந்திரியே மருத்தவத்தின் 'ஆதிபிதா' வாக கருதப்பட்டார். சரகர் எழுதிய மருத்துவமும், சுஷ்தேர் எழுதிய அறுவைச் சிகிச்சைப் புத்தகமும் முக்கியமானவையாகும். அக்காலத்திலேயே பல்வேறு நோய்கள் பற்றிய குறிப்பும் அதைக் குணப்படுத்தும் முறைகளும் வகைப்படுத்தப்பட்டிருந்தன. இறந்த உடல்களை ஆராய்ந்து பார்த்து அறுவைச் சிகிச்சை செய்யும் முறையும் இருந்திருக்கிறது. பல்வேறு அறுவை மருத்துவத்திற்கான கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை உலகிற்கு மிகவும் பயனுள்ள குறிப்புகளாக அமைந்துள்ளன.

## 6. கணிதம்

கணிதத் துறையில் இந்தியா அடைந்திருந்த வளர்ச்சி வரலாறு படைக்கத் தகுந்ததாய் இருந்திருக்கிறது. கணிதத் துறையில் இந்தியா பெற்றிருந்த பிரமிக்கத் தகுந்த மேன்மையை உலகம் புரிந்து கொண்டு விட்டது. இன்றைய எண் கணிதத்திற்கும், 'அல்ஜீப்ரா' விற்கும் அடித்தளத்தை பலநூற்றாண்டு காலத்திற்கு முன்னரே இந்தியா அமைத்துவிட்டது என்பதை உலகம் ஏற்றுக் கொண்டு விட்டது. பூஜ்யம் உட்பட பத்து எண்களை இந்தியா உலகுக்கு அளித்தது. அந்த எண்களின் பயனை உலகுக்கு எடுத்துக்காட்டியது. காலம், எண் ஆகியவைப் பற்றி இந்தியர்கள் அறிந்திருந்தனர். அர்த்த சாஸ்திரத்தில் பொருட்கள் எடைபோடுதல் பற்றிய விரிவான குறிப்புகள் காணப்படுகின்றன. கி.மு. 4ம் நூற்றாண்டிலேயே அதன் நுண்மையை எட்டியிருந்தார்கள். வடிவியல் (Geometry), எண்கணிதம், இயற்கணிதம், ஆகியவை கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே இந்தியாவில் இருந்திருக்கின்றன.

முதன் முதலில் இயற்கணிதம் பற்றிய புத்தகம் கி.பி. 476ல் ஆர்யப்பட்டரால் எழுதப்பட்டது. இந்தியக் கணிதத்துறையின் ஒரு மகத்தான மனிதர் ஸ்ரீநிவாச ராமானுஜம், கணிதத் துறையில் பல அரிய கண்டுபிடிப்புகளை கொண்டு வந்தார்.

## 7. கல்வி

இதிகாச காலத்தில் நகரங்களிலிருந்து விலகி, ஆரியர்கள் கல்விக் கூடங்களை அமைத்திருந்தார்கள். அவைகளெல்லாம் உலகிற்கு சிறந்த நாகரிகத்தையும், அறிவையும் போதிக்க கூடிய கலாசாலைகளாக விளங்கின. மாணவர்கள் அங்கே தங்கிக் கல்வி கற்பதில் தீவிர கவனம் செலுத்தி கற்று வந்தார்கள்

காசி ஒரு உயர்தரக் கல்வி தரும் இடமாக விளங்கியது. புத்தர் காலத்திலேயே அது செல்வாக்குப் பெற்றிருந்தது. காசிக்கு அருகிலிருந்த காட்டிலே தான் முதல் போதனையைத் துவக்கினார் புத்தர். தற்போது 'பெஷாவர்' என்று விளங்கும் இடத்துக்கருகே 'தக்ஷசீலப்பல்கலைக்கழகம்' பெயர் பெற்று விளங்கியது. விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகளுக்கு இந்தியா உலகெங்கும் உள்ள மாணவர்களை ஈர்த்தது. தக்ஷசீலம் புத்தர்காலத்திற்கும் முந்தைய பல்கலைக்கழகம், நாலந்தா பல்கலைக்கழகம் கி.பி. 4 ம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இது கல்வித் துறையில் நிகழ்த்தப்பட்ட அரிய சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## நவீன இந்தியா உலகுக்கு தரும் செய்தி

மேதகு அப்துல் கலாம் கூறுவது போல், எந்த நாகரீக வளர்ச்சியும், கலாச்சாரமும் நமக்கு அறிவின் ஆற்றலைக் கொண்டு, தொழில் நுட்ப வளர்ச்சியைக் கொடுக்காமல் இருந்தால் அதன் மூலமாகப் புதிய பொருளாதார வளர்ச்சியைக் காண முடியாது. ஆனால் இந்தியாவில் நல்ல நாகரீக வளர்ச்சியும் , கலாச்சாரமும் இருந்துள்ளன. சுதந்திர இந்தியாவில் குறிப்பாக தொழில் நுட்பத் துறையில் - விண்வெளி பாதுகாப்பு, அணுசக்தி, தகவல்தொடர்பு, வேளாண்மை போன்ற தொழில் நுட்பங்களில் வளர்ந்துள்ளோம், தன்னிறைவு அடைந்துள்ளோம். இந்த இணைப்பின் சக்தி மகத்தானது. இதுவே நவீன இந்தியாவை அறிவுக்களஞ்சியமாகவும், பொருளாதார சக்தியாகவும் உலகுக்கு எடுத்துக்காட்டக் கூடியது. வளர்ந்து வரும் நாடாக இருக்கின்ற நாம் வல்லராசாக மாறக்கூடிய நாள் வெகுதூரத்தில் இல்லை.

## நிறைவுரை

உலகம் இன்று விரைவாக வளர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது. மற்ற கலாச்சாரங்களை வரவேற்று ஏற்றுக் கொள்வது கடந்த காலத்தில் இந்தியாவின் பாணியாக இருந்தது. இப்போதைய உடனடித் தேவை, 'ஒரே உலகம்' என்கிற இலக்கு நோக்கிச் சென்று, மனித இனத்தின் 'சர்வ தேசியக் கலாச்சாரம்' உருவாவதைப் பார்த்தாக வேண்டும். விஞ்ஞான பூர்வ மனித இனநலக் கோட்பாடு (Scientific Humanism) ஒன்று உருவாகத் தொடங்கிவிட்டது.

மனிதகுலப் பண்பாடு தூய்மையாக அமைய வேண்டும் என்றால் அது தனிமனித பண்பாட்டில் தொடங்கி, படிப்படியாக உலக சமுதாயம் வரை விரிவாகி மனிதகுலப் பண்பாட்டுத் திருத்தமும் பெற வேண்டும்.

❑❑❑❑❑

# 7. தொண்டும், தியாகமும்

**P. வீரசித்தி விநாயகன்**
துணைப் பேராசிரியர் -
மனித வளமாண்புத் துறை
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே" - தாயுமானவர்

'கடமையைச் செய்' 'பலனை எதிர்பார்க்காதே' என்பது கீதை மொழி. நாம் ஆற்றும் அன்றாடம் பணிகளை பிறருக்கு செய்ய வேண்டிய கடமைகளை மன ஒரு முகத்துடன் செய்யும் போது பற்று இன்றி மனத்தை நெறிபடுத்த முடியும் என்பது 'கீதாசாரமாகும்.' இதை நிஷ்காமிய கர்மம் என்று அழைப்பார்கள்.

இறைவனின் தன்மையை விளங்கும் விதமாகக் கீதையில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

" எல்லாப் பொருளிலும் என்னைக் காண்பவன்
எவனோ அவனைவிட்டு நான் நீங்குவதில்லை
என்னை விட்டு அவன் நீங்குவதுமில்லை"

இறைவனை எல்லாப் பொருளிலும், எங்கும் உள்ளான் என்ற உண்மையை உணர்ந்தவர்கள் உலகில் உள்ள மக்களைத் துன்பத்திலிருந்து விடுவிக்க அறநெறிக் கருத்துக்களை போதிப்பதன் மூலம் தொண்டு செய்யும் பண்பை வளர்த்தனர்

"கடன் என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு" (குறள்)

உலகுக்கும் மக்களுக்கும் நன்மைதருபவை எவையோ, அவையாவும் நாம் உலகுக்குக் செய்தாக வேண்டிய கடமைகள் என்பது வள்ளுவர் வாக்கு

தொண்டுள்ளம் கொண்ட மனிதன் எப்படிப்பட்ட குணநலன் பெற்றிருப்பான் என்பதை நாமக்கல் கவிஞர் தனது கவியில்

" தொண்டு செய்யக் கற்றவன்
துயரம் போக்கும் உற்றவன்
சண்டை போடும் மக்களைச்
சரசமாக்கி வைக்கவே" - நாமக்கல் கவிஞர்

என்று கூறியுள்ளார்.

''எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல் பணம், புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன்தான் சிறப்பாகப் பணியாற்றுகிறான். இத்தகைய மனநிலையில் ஒருவர் பணியாற்ற வல்லவனாகும்போது அவன் ஒரு புத்த பகவானாகவே ஆகிவிடுவான். உலகத்தையே மாற்றி அமைக்கக் கூடிய வகையில் வேலை செய்யும் சக்தி அத்தகையவனிடமிருந்து வெளிப்படுகிறது''. என்கிறார் விவேகானந்தர்.

இன்றைய பொருளாதார நிலை மக்களை ஏழ்மை நிலையிலேயே வைத்துள்ளது. ஏழ்மையில் வாடும் மக்களுக்கு உணவு, உடை, செல்வம் வழங்குவதை விட ஏழ்மைக்கான காரணத்தை அறிந்து அதை வேரோடு அழிப்பதே உண்மையான தொண்டாகும். அனைவருக்கும் வேலை கிடைப்பதின் அடிப்படையில் திட்டம் வகுப்பதே இதற்கு நிரந்தரத் தீர்வாகும்.

தொண்டு என்றால் மற்றவர்கள் துன்பம் அடையும் போது அல்லது உதவி தேவைப்டும்போது அத்துன்பத்தினை நீக்கத் தங்களால் இயன்ற உதவி செய்வது. இந்தப்பண்பு தான் சேவை மனப்பான்மையைக் குறிக்கும். தொண்டுக்குத் தியாகமே உரைகல். தொண்டு செய்யும்பொழுது பாராட்டை எதிர்பார்ப்பது சேவைக்கு இழுக்காகும்.

## பிறருக்கு ஏன் தொண்டு செய்ய வேண்டும்?

பிறருடைய தொண்டில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பிறந்தது முதல் சுமார் 20 வயது வரை இன்னொருவரது உழைப்பே நமது உணவாகிறது. நாம் எல்லோரும் ஏதோ ஒரு பள்ளியிலோ, கல்லூரியிலோ படித்திருக்கலாம். இந்த நிறுவனங்கள் எல்லாமே சமுதாயத்திலுள்ள பல நல்ல மனிதர்கள் உதவியாலும், மற்றும் பொதுமக்கள் தரும் வரிப்பணத்தாலும் செயல்படுகின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவே, சமுதாயத்தில் உள்ள பலரின் உழைப்பால், நாம் வாழ்வதால், சமுதாயத்திற்கு நமது உழைப்பைத் தருவதே நமது தலையாய கடமை. இதனையே "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்கும் " உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது" என்ற பைபிளின் வாக்கும் நமக்கு உணர்த்துகின்றன.

வயதான முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோர் சொந்தமாக உழைத்து வாழ முடியாததால் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சமுதாயத்திற்கு உண்டு. இந்தச் சமுதாயக் கடமையை நிறைவேற்ற வசதி வாய்ப்பு உள்ள ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற உதவியைச் செய்ய முன் வர வேண்டும்.

தொண்டு செய்வதற்கு முதலில் மனம் விரிவுபட்டு உண்மை நிலையை உணர வேண்டும். எல்லாம் இறைநிலையின் மலர்ச்சியின் தோற்றங்களே என்ற உணர்வு தான் அன்பும், கருணையுமாக மலரும். அதுவே ஒருவரைத் தனக்கென மட்டுமல்லாது பிறர்க்காகவும் வாழும் நிலைக்கு உயர்த்தும்.

## அன்னை தெரசாவின் அருள் தொண்டு:

அன்னை தெரசா 1910ம் ஆண்டு ஆகஸ்டு 27ம் நாள் யுகோஸ்லேவிய நாட்டில் பிறந்தார். இவரது இயற்பெயர் அக்னெஸ். பிரெஞ்சு நாட்டில் தெரசா மார்ட்டின் என்ற இளம்பெண் துறவு பூண்டு, இறையுணர்வுடன் தன்னைத் தொண்டு பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். தன்னலங்கருதாத கடும் உழைப்பின் காரணமாக நோய்வாய்ப்பட்டு தெரசா மார்ட்டின் தனது 24 வயதில் இறந்தார். தெரசா மார்ட்டினின் தியாகத் தொண்டால் பரவசமடைந்து கவரப்பட்டு அக்னெஸ் தனது பெயரைத் தெரசா என மாற்றிக் கொண்டார்.

கல்கத்தாவில் உள்ள சிறு கிராமங்களில் தனது தொண்டைத் தொடங்கினார். மிகவும் வயதாகிக் கடும் நோயுற்று சாவின் விளிம்பில் ஆதரவற்றிருந்தவர்களுக்கு உரிய உதவி செய்தார். இந்தப் பணிக்காகப் பாட்னாவில் முறையான செவிலியர் பயிற்சி பெற்றார். அத்துடன் மொழிப் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்த அன்னை தெரசா வங்காளி மொழியைக் கற்றுத் தேர்ந்தார்.

## அன்னை தெரசாவின் சேவைகளில் சில:

- ✦ இவர் ஏழைகளுக்காகவும், நோயுற்றவர்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.
- ✦ அவர்களுக்காக ஒரு மிஷனரிஸ் ஆப் சாரிட்டியை 1950ம் ஆண்டு ஏற்படுத்தினார்.
- ✦ கல்கத்தாவில் இறப்போர் நல சங்கத்தை உருவாக்கி ஆதரவற்றவர்கள் இறந்த பிறகு அவர்களை அடக்கம் செய்வதற்கு உதவினார்.
- ✦ அனாதை குழந்தைகளுக்காக நிர்மல சிசுபவன் என்ற அமைப்பை 1955 ஆம் ஆண்டு உருவாக்கி அவர்களை அரவணைத்தார்.
- ✦ இவரது முக்கியமான சேவைகளில் ஒன்றான தொழு நோயாளிகளின் துன்பத்தைப் போக்க தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

✧ இவருடைய சேவைக்காக இவருக்கு இந்தியாவின் உயர்ந்த விருதாகிய ‘‘பாரத ரத்னா‘‘ 1980–ம் ஆண்டு வழங்கப்பட்டது. அன்பு ஒன்றையே தனது ஆயுதமாகக் கொண்டு உலகமக்களை அரவணைத்ததால் அமைதிக்கான நோபல் பரிசு 1979ல் வழங்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிக உயர்ந்த ஆன்மா அன்னை தெரசா அவர்கள்.

## யார் தொண்டன்?

சேவை செய்யும் நல்லவன்
செம்மை கண்ட வல்லவன்
தேவையுள்ள யாரையும்
தேடிச் சென்று சேருவான்

பணிவு மிக்க தொண்டனே
பரம ஞானம் கண்டவன்
தணிவு மிக்க சொல்லினால்
தரணி எங்கும் வெல்லுவான் ....நாமக்கல் கவிஞர்

‘‘உடம்பார் அழியின் உயிரார் அழிவார்’’ என்றார் திருமூலர். உடல் ஆற்றலின் மூலமே சமுதாயத்திற்கு நாம்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்த முடியும். அதற்கு ஏற்றாற்போல் நாம் நமது உடலைப் பேணி வளர்க்க வேண்டும். நல்ல உடல் நலனும், உயர்ந்த சிந்தனை ஆற்றலும் தொண்டு செய்வதற்கு மிகவும் அவசியமாகும்.

ஏழ்மை, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சமுதாயத்தில் ஏற்படும் குற்றங்கள் இவற்றிற்கான காரணங்களை அறிவுபூர்வமாக ஆராய்ந்து ஒரு தீர்வை கண்டுபிடித்து அவை நீங்கச் செயலாற்றுவதே சமுதாயத்திற்கு ஆற்றும் உண்மையான தொண்டாகும்.

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்” - பாரதி

## தியாகம்:

மனதில் தூய்மை, வாக்கில் உண்மை, சிந்தனையில் தெளிவு பெற்ற மகான்கள் வாழ்க்கையை முறையாக வாழ்ந்து இன்பமாக வாழ வழிகாட்டிச் சென்ற மகான்களின் தியாகம் தான் நாம் இன்று காணும் திருக்குறள், பகவத்கீதை, குரான், பைபிள், புத்தரின் வைர சூத்திரம், சித்தர்களின் ஞானப் பாடல்கள். யார் ஒருவர் இந்த உலக மக்களின் நலன் கருதித் தனது எண்ணம், சொல், செயலை உலக நன்மைக்காக பயன்படுத்தி தனது வாழ்க்கையை வாழ்கின்றார்களோ அதுவே தியாகம் ஆகும். மகான்கள் செய்த தியாகத்தின் மூலமே இறையுணர்வும், அறநெறியும், மனிதனை மனிதன் மதிக்கும் உயர்ந்த பண்பாடும், தோன்றின. அவ்வாறு தியாகச்சீலராக வாழ்ந்தவர்களில் மிகச்சிலர்,

தியாகத்தின் முழுவடிவமாக வாழ்ந்தவர் வள்ளலார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியவர். சீவகாருண்யத்தை பின்பற்றியவர்.

தனிமனித அமைதியே உலக அமைதி என்று தன்னை முழுமையாக சமுதாயத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டு அதற்கான பயிற்சி முறைகளையும் உருவாக்கியவர் வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

அகிம்சையை தனது ஆயுதமாகக் கொண்டு சுதந்திரத்திற்காக பாடுபட்டவர் மகாத்மா காந்தி. அரையாடை அணிந்து வயல்களில் பாடுபட்ட ஏழை விவாசயிகளைக் கண்டு தானும் வாழ்நாள் முழுவதும் அரையாடை அணிந்து வாழ்ந்தவர் ஆவார்.

கருப்பின மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்தவர் மார்டின் லுாதர்கிங்.

தன் இன மக்களுக்காக தன் வாழ்நாளை 26 ஆண்டுகள் தென்னாப்பிரிக்க சிறையில் கழித்தவர் நெல்சன் மண்டேலா.

சுதந்திர போராட்ட காலத்தில் தமிழகத்தில் தில்லையாடி கிராமத்தில் வாழ்ந்த வள்ளியம்மை தனது குடும்ப வறுமையின் காரணமாக தென்னாப்பிரிக்கா சென்று குடியேறிய போது மகாத்மா காந்தியுடன் இணைந்து இன வேறுபாட்டை எதிர்த்தும், சுதந்திரத்திற்காகவும் ஆங்கிலேயரிடம் அடிபட்டு சிறைவாசம் கண்டவர். சிறைவாசத்தால் உருக்குலைந்த போதும் மகாத்மா காந்தியே வியக்குமளவு நெஞ்சுரத்துடன் போராடியவர்.

கர்மவீரர் காமராஜர் போன்றவர்கள் அரசியலில் தன்னலம் கருதாது, மக்கள் நலன் ஒன்றையே தங்கள் வாழ்நாள் கொள்கையாகக் கொண்டு உன்னத வாழ்க்கை வாழந்தார்கள்.

ஒரு சாதாரண மனிதனாகப் பிறந்து தேசத்தின் முதல் குடிமகனாக உயரும் வரை தேச நலன், தேச முன்னேற்றம் என்று வாழ்ந்தவர் மேதகு அப்துல் கலாம் அவர்கள். மேலும் இளைஞர்கள் தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆணிவேர் என்று அவர்களை உயர்ந்த கனவு காணச் செய்தவர்.

இத்தகைய தியாகச் சீலர்களால் தான் உலகம் இன்றவும் இயங்கிக்கொண்டிருக்கிறது.

## நிறைவுரை:

தொண்டால் வாழ்ந்தவர்களும், தியாகத்தால் பண்பட்டவர்களும் இந்த உலகம் உள்ளளவும் நிலைபெற்றிருப்பார்கள். அவர்களது வாழ்க்கை இளைஞர்களுக்கு ஒரு பாடமாக மட்டுமல்லாது வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்று எடுத்துக்காட்டக் கூடியதாகும். பிறர் துன்பம் போக்கும் செயலே மனிதனை தெய்வநிலைக்கு உயர்த்தக் கூடியாதகும்.

‘‘ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு”. என்கிறது வள்ளுவம்.

❑ ❑ ❑ ❑ ❑

# 8. வேற்றுமையில் ஒற்றுமை

**M. குப்புசாமி**
துணைப் பேராசிரியர் -
மனிதவள மாண்புத் துறை
ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

இந்தியத் திருநாடு புகழ்மிக்க புராதன கலாச்சாரப் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழும் அழகிய நாடு. இந்திய நாட்டின் வயதைக் குறிப்பிடும் வரலாற்றியலார் சுமார் 34,000 ஆண்டுகள் பழமையான நாடு என்று குறிப்பிடுகின்றனர். இயற்கை அன்னை தாய்மை உள்ளத்துடன், அவளுடைய முழுமையான திறமையுடன் இந்தியத் திருநாட்டை வரைந்துள்ளாள். “பாரத மாதா என்பது இந்திய நாட்டு மண் மட்டுமல்ல, மலையும், நதியும், கடலும், வயலும் இன்னும் எல்லாமும் தான். இந்திய மக்கள்தான் பாரத மாதா. நானும் நீங்களும்தான் பாரதமாதா” என்று முன்னாள் பாரதப்பிரதமர் ஜவஹர்லால்நேரு அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆசியக் கண்டத்தின் துணைக் கண்டமாகக் கருதப்படும் இந்திய நாட்டின் நாகரிகம் தான் மனித வரலாற்றின் தொன்மையான நாகரிகமாக உள்ளது.

ஆல்பெர்ட் ஐன்ஸ்டின் குறிப்பிடும்போது “ We owe a lot to the Indians, Who taught us how to count, wihtout which no worth while scientific discovery could have been made” என்பார்.

## இந்திய சமுதாயத்தின் பண்பு நலன்கள்

பண்டைய இந்திய சமுதாயத்தில் குரு - சிஷ்ய பாரம்பரியமாக வாழ்வியல் நெறிகள் பின்பற்றபட்டுவந்தன.

வாழ்வியல் நோக்கமாக நான்கு புருஷார்த்தங்கள் பின்பற்றப்பட்டன. அவை 1) தர்மம் (Dharma- Morality, ritghteousness, duties of individual) ; 2) அர்த்தா (Artha - Pursuit of wealth and well being); 3) காமம் (Kama - Pursuit of Bodily desires) மற்றும் 4) மோக்ஷ (Moksha - Salvation) இவற்றை முறையே அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்று முன்னோர்கள் வகுத்துக் கொடுத்தனர். மேற்குறித்தவற்றை தொடர்புபடுத்தி நான்கு வர்ணாசிரம தர்மங்களாக பிரம்மச்சரியம், கிரகஸ்த்தம், வனப்பிரஸ்த்தம், சன்னியாசம் என்று வகுத்து வாழ்வியல் நெறிகளாக்கினர் முன்னோர்கள்.

இந்தியத் தத்துவத்தின் முக்கிய அம்சங்களான "கர்மா" எனப்படும் வினை - விளைவு ஆகிய செயல்விளைவு நீதியும் 'கடமை' யும் மக்களைச் சரியான பாதையில் நடத்திச் செல்வதில் வழித்துணைகளாக அமைகின்றன.

## இன்றைய காலகட்டத்தில் இந்தியா

இன்றைய காலகட்டத்தில் ஒன்றுபட்ட வலிமையான சமுதாயமாக மாற்ற வேண்டிய முன்னேற்றப் பாதையில் இந்திய சமுதாயம் பயணம் செய்து கொண்டிருக்கிறது. சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சையின் அடிப்படையில் இன்றைய இந்திய சமுதாயம் உருவாகியுள்ளது. இன்றைய கால கட்டத்தில் புருஷார்த்தங்கள் ஏட்டளவில் மட்டுமே உள்ளது. நவீன இந்திய சமுதாயத்தில், சடங்குகளும் சம்பிரதாயங்களும் எளிமையாகவே பின்பற்றப்படுகின்றன.

அனைத்து மதங்களின் சடங்கு சம்பிரதாய கொண்டாட்டங்களுக்கும் அரசு விடுமுறை அளிக்கப்படுகின்றன. ஹோலி, தீபாவளி, தசரா, ரம்ஜான், பக்ரீத், ஈதுல் -நபி, புனித வெள்ளி, கிறிஸ்துமஸ், குருநானக் ஜெயந்தி, மகாவீர் ஜெயந்தி, புத்த பூர்ணிமா என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. பல்வேறு பண்டிகைகள் மக்கள் மனதில் அன்பை வளர்த்து சாதி, மத இன வேற்றுமைகளை கடந்த மகிழ்ச்சி கொண்டாட்டங்களாக இந்தியர்களின் இதயங்களை இணைக்கிறது.

தற்காலத்தில், அருள்துறையான ஆன்மீகத்திற்கு தரும் முக்கியத்துவம் போலவே பலமான, பாதுகாப்பான, நவீன விஞ்ஞான முன்னேற்றங்களுடனும், பொருளாதாரம் மற்றும் தொழிற்சாலைகள் வளரச்சியுடனும் முன்னேற்றம் பெற்ற நாடாக இந்தியா உருவெடுத்துக் கொண்டுள்ளது. உலக அரங்கில் இந்தியா பல்வேறு துறைகளில் அங்கீகாரம் பெற்றுள்ளது.

## வேற்றுமையும் ஒற்றுமையும்

இந்தியத் துணை கண்டம் 32,87,263 ச.கி.மீ பரப்பளவுடைய பரந்த நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. உலகம் ஒரு குடும்பம் என்ற கண்ணோட்டத்துடன் நோக்கும் பொழுது, நமது கலாச்சாரப் பண்பாடு பெருமை வாய்ந்த பாரம்பரியமாக உள்ளது. உலகின் பல்வேறு கலாச்சார பண்பாடுகளின் தாயகமாகவும் உள்ளது. இந்திய மண்ணில் உலகின் மிகப்பெருமை வாய்ந்த 'சிந்து சமவெளி நாகரிகம்' தோன்றி இருந்தது.

பல்வேறு மதங்களும், மதக் கொள்கைகளும் தோன்றி வளரச் சாதகமான சூழ்நிலை இந்திய மண்ணில் உருவாகி இருந்தது. தனது எல்லைகளுக்கு அப்பால் இருந்துவந்த புறச்சமயங்கள் எனப்படும் அன்னிய மதங்களுக்கும் இடம் அளித்துள்ளது இந்தியநாடு. பல நூற்றாண்டுகளாக நடைபெற்ற இத்தகைய தாக்கங்கள் மூலம் மக்கள் மதம் மாறினாலும்,

மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அடிப்படை மனப்பான்மை முற்றிலுமாய் மாறிப் போய்விடவில்லை. இதனால் தனித்தன்மை வாய்ந்த கலாச்சாரப்பண்பாடு இந்தியாவில் உருவாக்கம் பெற்றுள்ளது. அதுவே இந்தியக் கலாச்சாரம் என்று அறிய முடிகிறது.

இந்திய மக்களிடையே தோற்றத்திலும், மனப்பான்மைகளிலும் நிறைய வேற்றுமைகளை மிக எளிதில் உணரமுடிகிறது. உணவு, உடை, மொழி, உருவ அமைப்பு, இயல்பு ஆகிய எல்லாவற்றிலும் வட மேற்கில் உள்ள படான்களுக்கும், தெற்கு முனையிலுள்ள தமிழர்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளைவிட வேற்றுமைகளே அதிகம். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மத்திய ஆசியாவின் பாதிப்பு உள்ளது. காஷ்மீரப் பள்ளத்தாக்கு மக்களிடையே உள்ள பல பழக்கவழக்கங்கள் இமயமலையின் கிராமிய நடனங்கள் - ரஷ்யாவின் 'கொஸாகி' நடனங்கள் மாதிரி உள்ளன. இருப்பினும் பட்டாணியரிடமும் சரி தமிழர்களிடமும் சரி 'இந்தியர்' என்னும் ஒரு முத்திரை இருக்கிறது. ஏனெனில் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தப்பகுதிகள் இந்திய நாட்டின் அங்கங்களாகவே இருந்திருக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பகுதியில் இயங்கிய பிரபலமான **'தக்ஷசீலப் பல்கலைக் கழகம்'** இந்தியா முழுவதையும், ஆசியாவின் பல்வேறு நாட்டவரையும் ஈர்த்திருக்கிறது.

பட்டானியர்கள், இராஜபுத்திரர்கள், மராட்டியர்கள், குஜராத்திகள், சிந்தியர்கள், சீக்கியர்கள், பஞ்சாபிகள், காஷ்மீரிகள், அஸ்ஸாமிகள், ஒரியர்கள், கன்னடியர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், தமிழர்கள் என்று பலதரப்பட்ட மொழிகள் பேசும் மக்களும், அவரவர்களுக்கே உரிய சிறப்புக் குணாதிசயங்களைப் பல நூற்றாண்டுகளாகப் பேணிக் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். அனைவருக்கும் பொதுவான ஓர் இந்தியப் பாரம்பரியம், கலாச்சாரம், ஒழுக்க நெறிகள் மனப்பான்மைகள் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

## ஒற்றுமையின் நோக்கம்

ஒற்றுமையின் உருவாக்கம் என்பதை இருகோணங்களில் ஆராயலாம். அவை 1) பாரம்பரியமான ஒற்றுமை உணர்வு மற்றும் 2) அச்சுறுத்தலால் உண்டான ஒற்றுமை உணர்வு ஆகியன ஆகும்.

பாரம்பரிய ஒற்றுமை உணர்வானது, பொதுவான கலாச்சார பண்புகளைப் பின்பற்றும் குழுக்களிடம் (Communities) தோன்றி நிலவும் உணர்வாகும். இவ்வுணர்வு வேறுபட்ட இனத்தைச் சார்ந்தவர்களிடையே தோன்றும் சந்தேக உணர்வு, சகிப்புத் தன்மை, இனம் மற்றும் தங்கள் குழுவினரின் பாதுகாப்பு ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் தோன்றுகிறது. இந்த நிலைமை தேச ஒற்றுமை உணர்வைப் பாதிக்க கூடியது ஆகும். இத்தகு நிலைமையை மாற்றி தேச உணர்வையூட்டும் வகையில் கல்விமுறையில் பாடத் திட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

அச்சுறுத்தலால் உண்டான ஒற்றுமை உணர்வு, இந்தியா சுதந்திரம் அடைந்தபின் (கி.பி 1947), பாக்கிஸ்தான் - இந்தியா என்ற பிரிவினைக்குப்பின் உருவானதாகும். வகுப்பு வாதிகளும், பிரிவினைவாதிகளும், அடிப்படை மதவாதிகளும் இந்த உணர்வை ஊக்கப்படுத்துபவர்களாக உள்ளனர்.

மதம், மொழி, உடை, கலாச்சாரம், உணவுப்பழக்கங்கள், வாழும் பகுதி போன்ற வகையில் வேறுபாடுகள் இருப்பினும் அரசியல் அமைப்பால் ஒற்றுமை காண்கிறோம். ஒற்றுமை என்பது மிகப்பெரிய நோக்கத்தை உடையது. அதாவது 'தேசிய உணர்வை' அடையவைப்பதற்கான அடிப்படையாகும்.

## ஒற்றுமை குறித்து சமூகவியலார் பார்வை

பலதரப்பட்ட மதங்களைச் சார்ந்தவர்களும் ஒன்றாகச் சேர்ந்தே பலநூற்றாண்டுகளாக வாழ்ந்து கொண்டுள்ளனர். சமூகவியலார் பார்வையில் இந்திய கிராமப்பகுதிகளில் வாழும் இஸ்லாமியர்கள் அந்தந்த கிராம மக்களுடன் இரண்டற கலந்து சமுதாய - பொருளாதார அடிப்படையில் வாழ்கின்றனர் என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றனர்.

இந்த கருத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாக குஜராத்தில் உள்ள 'மூல்துவாரகா' வில் அமைந்துள்ள வழிபாட்டுத் தலமாகும். இங்கு உள்ள ஐந்து சமாதிகள் குஜராத்தில் உள்ள இந்துக்களின் முக்கியமான நான்கு வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாக உள்ளது. இந்த சமாதிகளை இஸ்லாமியர்கள் 'ஐந்து பிர்கள்' அதாவது ஐந்து துறவிகள் என்று மதிப்பளித்து பச்சை நிற ஷால்வைகளை சமாதிகளின் மேல் போர்த்துகின்றனர். இந்துக்கள் இதே சமாதிகளை 'ஐந்து போர் வீரர்கள்' என்று மதித்து மஞ்சள் நிறச் சால்வைகளைக் போர்த்துகின்றனர்.

இஸ்லாமியர்களின் வழிபடும் தலங்களுக்கு இந்துக்களும் சென்று வழிபடும் பண்பு உள்ளதைப் பாரதம் முழுவதும் காணலாம். டெல்லியிலுள்ள சையது சாய்பாபா வழிபாட்டுத் தலம், உத்திரப்பிரதேசத்தில் பாரபங்கி என்னுமிடத்திலுள்ள தேவ ஷரீப் வழிபாட்டுத் தலம், ராஜஸ்தானில் உள்ள அஜ்மீர் ஷரீப், கேரளத்தில் சபரிமலை ஐயப்ப பக்தர்கள் வழிபட்டுச் செல்லும் பாபா தர்கா, தமிழகத்திலுள்ள நாகூர் தர்கா போன்ற இடங்கள் குறிப்பிடத்தக்கவை.

கலைநயம் மிக்க கட்டிடக் கலை, அழகு வெளிப்பாடுகளாக அமைந்துள்ள ஆக்ராவின் தாஜ்மஹால், ஜீம்மா மசூதி, டெல்லியில் செங்கோட்டை, ஹைதராபாத்தின் சார்மினார். லக்னோவின் படா இமாம்பரா (Bada Imambara) போன்றவை, சாதி, மத, இன வேறுபாடுகளைக் கடந்து ஏராளமான பார்வையாளர்களை ஈர்த்துக் கொண்டிருக்கின்றன. ஆந்திராவிலுள்ள புட்டப்பரத்தியில் சத்ய சாய்பாபா, மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள ஷீரடி சாய்பாபா, புதுச்சேரியிலுள்ள அரவிந்தர்- அன்னை ஆஸ்ரமம், ஆழியாரில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் அமைத்துள்ள அறிவுத் திருக்கோயில் போன்ற இடங்கள் இந்திய மக்கள் மட்டுமின்றி வெளி

நாட்டினரும் தங்களின் சாதி, மத, இன, மொழி, நாடு உணர்வுகள் என்ற எல்லைகளைத் தாண்டிய ஈர்ப்பு நிலையங்களாக இருந்து கொண்டு மக்களின் இதயங்களில் "இந்தியர்" என்ற உணர்வை ஊட்டுபவைகளாக அமைந்துள்ளன. மேலும் தென்னிந்திய மக்கள் 'காசி' யாத்திரை செல்வதும் வட இந்தியமக்கள் 'இராமேஸ்வரம்' வருவதும் ஆன்மீக ரீதியான 'மோக்ஷம்' அளிக்கும் தலங்கள் என்ற நம்பிக்கையினூடே பின்னிப்பினைந்துள்ள ஒற்றுமையுணர்வின் வெளிப்பாடே என்பது உண்மையிலும் உண்மை.

## இந்திய ஒற்றுமை உணர்வின் மீது அன்னியர்கள் தாக்கம்

இந்தியர்களின் ஒற்றுமை உணர்வின் மீது அன்னியர்களின் படையெடுப்பால் அதிகமான பாதிப்புகள் உண்டானதற்கான வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக மொகலாயர்கள் ஆட்சியிலும், பிரிட்டிஷ்காரர்களுடைய ஆட்சியிலும் இதன் தாக்கம் அதிகமாகவே இருந்தன. இஸ்லாம் மதம் இந்துக்களின் பாரம்பரிய கலாச்சார பண்பாட்டின் மீது ஏற்படுத்திய தாக்கங்களை மூன்று வகைகளின் ஆராயலாம்.

அவை : 1) மொலாயர்களின் ஆட்சிக்காலம்

2) ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1930 வரை

3) கி.பி. 1930க்கும் கி.பி. 1947க்கும் இடைபட்ட காலம் ஆகியன ஆகும்.

முதல் கட்டத்தில் முகலாய அரசர்கள் இந்துக்களின் கோயில்களை இடித்துத் தள்ளினர். கஜினி முகமதுவின் படையெடுப்புகள் கோயில்களை இடித்ததுடன் செல்வங்களை சூரையாடிச் செல்வது முக்கிய நோக்கமாக இருந்தது. அத்துடன் இந்துக்களை கட்டாய மதமாற்றம் செய்வித்தனர். இந்தக் காலகட்டம் கருத்து வேறுபாடுகளும், எதிர்ப்புகளும் பதற்றமும் நிறைந்ததாய் இருந்தது. குறிப்பாக ஔரங்கசீப் ஆட்சியின்போது இது உச்சகட்டத்தை அடைந்தது. இக்காலகட்டத்தில் 'சூபியிசம்' இந்துக்களை ஈர்த்தது உண்மை. அக்பரின் தீன் - இலாஹி பல மதங்களின் கலவையாக இருந்ததுடன் தேச ஒருமைப்பாட்டை ஊக்கப்படுத்துவதாக இருந்தது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் மேற்கத்திய கலாச்சாரத்தை பிரிட்டிஷ் அரசு இந்தியாவிற்குக் கொண்டு வந்தது. கல்வித்துறை, வங்கிகள், அரசு நிர்வாகம், அலோபதி மருத்துவ முறைகள், போக்குவரத்து, தகவல் பரிமாற்றம், இராணுவத்தில் மாற்றங்கள் போன்ற பல்வேறு மாற்றங்களை உருவாக்கக் காரணமாய் அமைந்தன. இதில் மேலைநாட்டு விஞ்ஞானம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு ஆகிய துறைகள் மக்களைப் பொருள்சார்ந்த வாழ்க்கை முறைக்கு மாற்றி அமைத்தது. தொழில் துறையில் முதலீடுகளின் வளர்ச்சியானது இந்தியாவைத் தொழில் வளம் பெற்ற நாடாக மாற்றியமைத்தது.

மூன்றாம் கட்ட நிலையில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக்கட்ட காலத்தில் இந்து மற்றும் இஸ்லாம் மக்களுக்கு இடையே பிரிவனைவாதம் உண்டாகி, தனிப்பட்ட இஸ்லாமிய நாடாக இந்தியாவிலிருந்து 'பாகிஸ்தான்' பிரிந்தது. பிரித்தாளும் கொள்கையைப் பிரிட்டிஷார் பின்பற்றினர். இந்தியாவின் ஒற்றுமை உணர்வை உடைக்கவே இந்த யுக்தியைக் கையாண்டனர். இறுதியில் ஒற்றுமை உணர்வுடைய இந்தியர்களின் காலடியில் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேயர்கள் ஒப்புவித்தனர்.

சுதந்திர இந்தியாவிலிருந்து நட்புக்கு நேசகரம் நீட்டிய நமக்கு பீரங்கிக் குண்டுகளும், துப்பாக்கித் தோட்டாக்களும் பரிசளிக்கப்பட்டன. பனிபடர்ந்த 'கார்கில்' மலைச் சிகரங்கள் பகைமையின் புகைபடர்ந்து கருநிறமாயின. இந்திய மண்ணின் பாதுகாப்புக் குறித்து கேள்விக்குறி எழுந்தது. உயிரைவிடத் தாய்நாட்டை மேலாக நேசிக்கும் படைவீரர்களின் தியாகத்தால் பாரதத்தின் ஒற்றுமை பாதுகாக்கப்பட்டது.

## ஒற்றுமையின் அவசியம்

இறையுணர்வும், அறநெறியும் மனிதர்கள் தங்களுக்குள் பிளவுபடாமல் ஒருவருக்கு ஒருவர் துன்பம் தராமல், ஒத்தும் உதவியும் வாழ்வதற்காகவே உருவாக்கப்பட்டவை. உண்மையை ( தெய்வத்தை) உணர்ந்தவர்கள் கூறிய சத்தியத்தை, பின்னாட்களில் தெய்வத்தை உணராதவர்கள் விளக்கிக் கூறியபோது கருத்து வேறுபாடுகள் தோன்றலாயிற்று. தெய்வ உணர்வில் - உணர்ந்து கூறியவர்கள் பெயராலேயே மதங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. அந்தந்த மதங்களைப் பின்பற்றுபவர்கள் தனிமைப்பட்டு பிரிவுகள் ஆக நிற்கின்றனர். இந்த நிலைமை மக்களின் அறியாமையே ஆகும். தெய்வம் ஒன்றே ! மனித குலமும் ஒன்றே ! இத்தகு உயர்ந்த அறிவுநிலையில்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று திருமூலரும்

"யாதும் ஊரே ! யாவரும் கேளிர்!" என்று கணியன் பூங்குன்றனாரும் பாடினார்கள்.

இராமகிருஷ்ணரின் பக்தி, புத்தரின் நிர்வாண சூத்திரம், அசோக சக்ரவர்த்தியின் மனமாற்றம், மகாவீரரின் வாழ்க்கைப் பற்றிய போதனைகள், விவேகானந்தரின் வாழ்வியல் தத்துவங்கள், அன்னை தெரசாவின் ஆசீர்வாதமும் உற்சாகமூட்டும் புன்னகையும், வள்ளுவரின் அறநெறி விழுமியங்களும், பாரதியின் புதிய சித்தாந்தங்களும் இந்த இந்தியர்களின் ஒற்றுமையை புதிய பரிணாமங்களுக்குக் கொண்டு செல்பவை.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்மின் நமக்கெது வேண்டும்?"

என்று ஒற்றமையே வாழ்வு ; வேற்றுமை உண்டானால் அனைவருக்கும் வீழ்ச்சியே என்று ஞானத் தெளிவை ஊட்டுகிறார் பாரதிப் பெருமகனார்.

## காந்தியக் கொள்கைகளும் தேசிய ஒற்றுமையும்

மகாத்மா காந்தியடிகள் சுதந்திரப் போராட்டத்தில் அஹிம்சை வழியை பின்பற்றி வெற்றி கண்டவர். தேச ஒற்றுமைக்காக தன் வாழ்நாளை அர்பணித்தவர். தன் வாழ்க்கையில் சத்தியத்தை கடைத்து வாழ்ந்தவர். தேச ஒற்றுமைக்கு அவர் கடைபிடித்த கொள்கைகள் பின்வருமாறு;

### 1. சத்தியம்

கடவுள் நம்பிகையுடையவரான காந்தி, சத்தியமே கடவுள் என்பதை உணர்ந்து தன் வாழ்நாள் முழுவதும் சத்தியத்தை கடைபிடித்து வாழ்ந்து வந்தார்.

### 2. அகிம்சை

அகிம்சை என்பது அன்பின் வெளிப்பாடு ஆகும். சத்தியமும், அகிம்சையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. அகிம்சை என்பது பிறரைத் துன்பப்படுத்தாதது மட்டுமின்றி, பிறர் இம்சை செய்தாலும் பொறுத்து மன்னித்தலுமே ஆகும். அகிம்சை வழியைப் பின்பற்றி ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி கண்டவர்.

### 3. அஞ்சாமை

அச்சம் என்பது ஒரு வித மனநோய். அச்சமின்மை என்பதன் அர்த்தம் பயத்திலிருந்து விடுதலை பெறுதல். பரம்பொருளைப் பரிபூரணமாக உணர்ந்த ஒருவரால்தான் முழு நிறைவான பயமின்மையை எட்ட முடியும். தன்னம்பிகை மூலம் தேவையற்ற பயத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது. ஆன்மபலம் ஒன்றே உள்ளத்தின் அஞ்சாமையை நீக்கும். தானும் சிறப்படைந்து பிறரையும் சிறப்படைச் செய்ய முடியும் என்கிறார் மகாத்மா காந்தி.

### 4. உடலுழைப்பு

உழைத்து உண்ணுதலை ஓர் அடிப்படை வாழ்க்கை நெறியாகக் காந்தியடிகள் கடைபிடித்து வாழ்ந்தார். ஒவ்வொருவரும் தங்களது வாழ்க்கை சூழலுக்கேற்ப உடலுழைப்பை செய்ய வேண்டும். பிறரைப் பணிக்காமல் தன்னுடைய பணியைத் தானே செய்வது சிறந்தது. அதன் காரணமாக மானிடச் சமத்துவம் ஏற்படும் என்கிறார் மகாத்மா காந்தி. உழைத்து உண்பது மனிதனின் கடமையாகும்.

### 5. பொருள் சேர்க்காமை

காந்தியடிகள் எளிமையான வாழ்வியல் முறையை வாழ்ந்து காட்டியுள்ளார். ஒவ்வொருவரும் தமக்குத் தேவையானதை மட்டும் வைத்திருந்தால் யாரும் வறுமையினால் வாடமாட்டார்கள். மனித வாழ்வு பிறருக்காகத் தொண்டாற்றுவதற்கே ஆகும். சொத்துக் குவிப்பால் இன்றைய சமுதாயம் ஏற்றத்தாழ்விலும் சுரண்டலிலும் துன்பப்படுகின்றது என்பார் காந்தியடிகள்.

### 6. சமய சமத்துவம்

இந்திய நாட்டில் சமுதாய ஒற்றுமைக்காக உருவாக்கிய உறுதி மொழி சமய சமத்துவம். ஒற்றுமையோடு எல்லோரும் இணைந்து வாழச் சமய சமத்துவ நோக்கு தேவைப்படுகின்றது. சகல சமயங்களும் கடவுளின் அருளால் வெளிப்பட்ட சத்தியங்கள் தான். இந்தச் சமநோக்கு இருந்தால், பிற சமயங்களின் நல்ல அம்சங்கள் அனைத்தையும் நம் சமயத்தில் வைத்துக் கொள்ளத் தயங்கமாட்டோம். தயங்காதது மட்டும் அன்றி இப்படிச் செய்வதை நம் கடமையாகவே கொள்வோம் என்கிறார் மகாத்மா காந்தி.

## சுதேசிய கொள்கை

தற்காலத்தில் கடைபிக்க வேண்டிய நியதிகளுடன் சுதேசியக் கோட்பாடு தலையாய ஒன்று ஆகும். தனக்கு வேண்டிய பொருட்களைத் தானே உற்பத்தி செய்து கொள்ளல், அருகில் உள்ளவர்களுக்கு உதவுதல், பொருள் உற்பத்தியில் ஈடுபடல் ஆகியன அடங்கிய தன்னிறைவுப் பொருளாதாரம் இதுவாகும். சுதேசியப் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்து பயன்படுத்துவதால் தேச ஒற்றுமை பெருகும்.

ஒரு தனிமனிதன் காந்தியின் கொள்கைகளையெல்லாம் தம் வாழ்நாளில் பின்பற்றினால் தானும் அமைதியாக வாழ்ந்து பிறரையும் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழவைக்க முடியும்.

## நிறைவுரை

நாம் நம்மில் ( மனித இனத்தில்) தோலின் நிறத்தால் வேறுபடலாம். பேசும் மொழியால் வேறுபடலாம். வாழும் சூழ்நிலையால் வேறுபடலாம். கலாச்சார பண்பாட்டுகள் போன்ற பல்வேறு காரணங்களால் வேறுபடலாம் ; ஆனால் பரிணாமத்தில் உலக மக்கள் அனைவருமே ஆதியில் ஒரு தாய் - தந்தையின் பிள்ளைகளே என்பதே உண்மை. நமது கரங்களும் இதயமும் இணைந்து செயல்பட்டால்- இன்றைய விஞ்ஞானயுகத்தில் வாழும் மனிதனை அழிவிலிருந்து விடுவிக்க முடியும்.

❑❑❑❑❑

# 9. இந்தியாவும் ஆன்மீகமும்

**Dr. K. பெருமாள்**
மேனாள் இயற்பியல் துறைத் தலைவர்,
இராமகிருஷ்ணா மிஷன் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, கோவை

மனித சமுதாயத்தில் ஆன்மீகம் முக்கிய பங்கினை வகிக்கிறது என்று கூறுவதைவிட ஆன்மீகம் என்பது தெரிந்தோ தெரியாமலோ மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதே உண்மையாகும். ஆன்மாவைப் பற்றிய அறிவின் தெளிவே ஆன்மீகமாகும். சிறுவயது முதலே ஒவ்வொருவருக்கும் தன்னைப் பற்றி, தனது மூலத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எழுகிறது. அதன் தாக்கமே குழந்தைகள் கூட அம்மா ! நான் ஏன் பிறந்தேன்? பிறப்பதற்கு முன்பு எங்கே இருந்தேன் ? என்று கேட்கின்றன. இக்கேள்வியின் பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடே இந்து சமயம், புத்த சமயம், சீக்கிய சமயம், பார்சி சமயம், யூத சமயம், தாவோ சமயம், கன்பூசியம், கிறிஸ்துவ சமயம், இஸ்லாமிய சமயம் என்பனவாகும். நவீன காலத்தில் புதிய வளர்ச்சியும், புதிய அறிவியல் தொழில்நுட்பமும், ஆராய்ச்சியும் விரிவுபட்டு வருவதால் ஆன்மீகம் குறித்த விழிப்புணர்வும் இந்தியாவிலும், உலகிலும் அதிகரித்து வருகிறது. அதில் இந்தியாவின் ஆன்மீகத்தில் பங்கு குறித்துக் காண்போம்.

## ஆன்மீகத்தின் வளர்ச்சி

முதன் முதலில் மனிதன் உணவுதான் தெய்வம் என்று நினைத்துக் கொண்டிருந்தான். பிறகு உணவு நிலத்திலிருந்து தான் விளைகின்றது என்றறிந்தபோது நிலத்தைத் தெய்வமாக மதித்து வணங்கினான். பிறகு நீர் இன்றி உணவுமில்லை, வாழ்வுமில்லையென்று கண்டபோது நீரைத் தெய்வமாக வணங்கினான். பின்னர் நெருப்பின் மதிப்பினை உணர்ந்து, நெருப்பையும் வணங்கத் தொடங்கினான். சூரியனின் வெளிச்சமும், வெப்பமும் உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கும் உண்மையினை உணர்ந்த போது சூரியனையும் மதிக்கத் தொடங்கினான், சூரியனை வணங்கத் தொடங்கினான். மேலும் பல்லாயிரம் தலைமுறைகள் சென்ற பின்னர் காற்றின் மதிப்பை உணர்ந்தான். பின்பு காற்றின் மூலத்துகளாக விளங்கும் விண்ணை உணர, பல இலட்சம் தலைமுறைகள் சென்று விட்டன.

தேவைகள் நிறைவு பெற்றபின் தன்னைப் பற்றியும், இந்த உலகமும், பிரபஞ்சமும், உடலும், தோன்றுவதற்குக் காரணமான மூல முதலான தத்துவத்தையும் அறிவதற்கான வேட்கை எழுந்தது.

சிந்திக்கச் சிந்திக்க அறிவு நுண்மை அடைந்தது. தெய்வநிலை உணரும் அளவுக்கு அறிவு உயர்ந்து, தோற்றங்கள் அனைத்தும் விண்ணின் கூட்டுத்தான் என்ற தெளிவு வந்தபோது விண்ணைவிடப் பிரபஞ்சமெனும் பேரியக்க மண்டலத்தில் வேறு என்ன உள்ளது என்ற சிந்தனை எழுந்தது. அதன் முடிவில் எல்லையற்ற இறைவெளி அவனது அறிவுக்கு எட்டியது. வெளியிலிருந்து விண் தோன்றி இருக்குமா? அல்லது விண்ணிலிருந்து வெளி தோன்றியிருக்குமா? என்ற சிந்தனையில் வெளியில் இருந்து தான் விண் தோன்றியிருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தான். விண் என்ற நுண்துகளே உடலில் ஆன்மாவாக இருக்கிறது என்பதையும் உணர்ந்து கொண்டான்.

அறிவு இந்த நிலைக்கு வருவதற்குள் நிலவுலகில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. முடிவாகக் கண்ட தெளிவு இறைவெளி எனும் சுத்தவெளிதான் தெய்வம். அது அரூபமானது. எங்கும் நிறைந்தது. அதிலிருந்து தான் விண் முதல் அனைத்தும் தோன்றி, இறைவெளியிலேயே மிதந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. உலகில் வாழும் எல்லோரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள்தான் என்ற கருத்து பரவியது.

## இந்தியாவில் ஆன்மீகம்

பல்வேறுபட்ட கடவுள் வழிபாட்டு முறைகள் இந்திய நாட்டில் இருந்தன. பரந்த நிலப்பரப்பு, பல்வேறு வகையான இன மக்களின் பல்வேறு காலக்கட்டங்களில் தொடங்கிய கடவுள் வழிபாட்டு முறைகள், தற்போது தோன்றிய முறைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு சிறப்பு இந்திய நாட்டில் இயல்பாகவே இருந்தது. அதன் காரணமாக இந்தியா அல்லது பிற நாட்டுக் கடவுள் வழிபாட்டு முறைகளையும் மற்றும் ஆன்மீகக் கொள்கைகளையும் இந்திய நாடு எளிதில் ஏற்றுக் கொண்டது. அதன் காரணமாக இது பல்வேறு சமய, ஆன்மீக நம்பிக்கைளின் குடும்பம் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்கிறது.

இந்திய ஆன்மீகத் தத்துவம் பல்வேறு வகையான கோட்பாடுகளை உடையதாயிருந்தாலும், அனைத்தும் **இறையுணர்வையும் அறநெறி வாழ்வையும்** சார்ந்தே இருப்பதால், வேற்றுமையிலும் ஒற்றமை காணும் சிறப்பு உடையது.

ஆன்ம நேயமே அதனுடைய முக்கிய உயிர்த்துடிப்பாக உள்ளது. அன்பு, கருணை என்ற ஆன்மநேய வெளிப்பாட்டால் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல், தியாகம் என்ற மூன்று உயர்பண்புகளே இந்தியத் தத்துவச் சிறப்பின் அடித்தளமாக அமைந்துள்ளது.

இந்திய ஆன்மீகத் தத்துவச் சிந்தனைகள் அனுபவ பூர்வமானது. வாழ்க்கையில் எதிர் கொள்கின்ற உண்மைகளை ஒட்டியே தத்துவமும், வாழ்க்கை நெறிகளும் அமையப் பெற்றுள்ளன. எனவே இது ஒரு வாழ்க்கை முறையாகும்.

ஆத்மா என்பது அழியாதது ; ஒருவர் செய்யும் நல்வினைத் தீவினைக்கேற்ப இன்பமோ, துன்பமோ உண்டு என்ற தெளிவு மக்களின் உள்ளத்தில் மரண பயத்தைப் போக்கி, நீதியான

வழியில் செயலாற்ற வேண்டும் என்ற கடமையுணர்வை நிலைபெறச் செய்துள்ளது. ஆத்மசோதனை மூலம் தூய்மை பெறலாம் என்ற அழுத்தமான கருத்தைக் கொடுத்து மனிதரை உயர்த்தும் சிறப்பு ஆன்மிகத்தில் உள்ளது. இறையுணர்வே மக்களின் உள்ளத்தில் இயல்பாக நிறைந்து செயல்படுகிறது. இந்திய ஆன்மீகத் தத்துவம் வினை- விளைவு என்ற கர்மா கோட்பாட்டை உறுதியாக நம்புகிறது.

இறைநிலையை உணரவும், அடையவும், வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் துறக்க வேண்டுமென்பதையோ, குடும்பத்தைத் துறக்க வேண்டுமென்பதையோ இந்திய ஆன்மீகத் தத்துவம் வலியுறுத்தவில்லை. தேவையையொட்டியே உலகப் பொருட்களோடு உறவு அமைய வேண்டும். அத்தகைய உறவு, அளவு - முறையையும் இயற்கை நியதிகளையும் ஒட்டியதாக இருக்க வேண்டும். அதுவே துறவுமாகும் என்று துறவுநிலையை தெளிவுபடுத்துகிறது.

ஆன்மாவை அறியும் ஆர்வம் எழுந்து விட்டால் அது தன்னை அறிந்து முடிக்கும் வரையில் அமைதி பெறாது. எனவே, இந்த ஆர்வ எழுச்சி பெற்ற அனைவரும் அதை அறிந்து கொள்ள முற்படுகின்றனர். புத்தகங்கள் மூலமாகவோ, வெறும் விளக்கங்கள் மூலமாகவோ அறிந்து கொள்ள முடியாது. முறையான அகநோக்குப் பயிற்சி தேவை.

## தர்சனங்கள்

ஆன்மாவை அறிந்து அதற்கு மூலமான தெய்வநிலையை அறிவதை வடமொழியில் தர்சனங்கள் என்பர். இவை ஒன்றுக்கொன்று சில கருத்துக்களில் வேற்றுமை கொண்டிருந்தாலும், பல கருத்துக்களில் ஒற்றுமை உடையனவாக இருக்கின்றன.

1. கபிலர் அளித்த சாங்கியம்
2. ஜைமினி என்பவர் வழங்கிய பூர்வமீமாம்சை
3. வியாசரின் உத்ர மீமாம்சை - வேதாந்தம
4. பதஞ்சலி முனிவர் அளித்த யோக சூத்திரங்கள்
5. கௌதமர் அளித்த நியாயம்
6. கணாதர் அளித்த வைசேடிகம்

இந்த ஆறு தரிசனங்கள் மட்டுமின்றி இந்தியாவில் சமணம், புத்தம், உலகாயத்தம் என்ற பிரிவுகளும் தோன்றின.

## யோகம்

ஆன்ம நிலையை அறிந்து கொள்வதற்குத் துணை செய்வது யோகம் ஆகும். யோகம் என்ற சொல்லுக்கு சேர்தல் என்ற பொருள் உண்டு. அதாவது சிற்றறிவு (சீவாத்மா) பேரறிவுடன் (பரமாத்மா) இணைதல் யோகம்.

## அட்டாங்க யோகம்

அட்டாங்க யோக முறையைத் தொகுத்து அளித்தவர் பதஞ்சலி முனிவர் ஆவார். இதனால் இவர் 'யோகத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். அட்டாங்க யோகம் 'ராஜயோகம்' என்றும் அழைக்கப்படுகிறது. அட்டாங்கயோகம் என்பது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு அங்கங்களைக்கொண்டது. இதில் இயமம், நியமம் இரண்டும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியதிகள். ஆசனம் என்பது உடலினை உறுதி செய்யும் யோகப் பயிற்சிகள்.

பிரணயாமம் மற்றும் பிரத்தியாகாரா சுவாசத்தைக் கட்டுப்படுத்தி மனத்தைக் கட்டுபடுத்த உதவும் பயிற்சியாகும். அடுத்த நிலையில் வெளியே அலையும் மனத்தை ஒருநிலைப்படுத்த தாரணைப் பயிற்சியும், அடுத்த நிலையில் தியானம், சமாதி நிலைகள் ஆன்மாவின் உள்ளார்ந்த உறைவிடங்களுக்கு சாதகனை அழைத்துச் செல்கிறது. இறுதி நிலையான சமாதியானது (சமம்+ ஆதி) ஆதி நிலைக்கு சமம் என்ற உச்சநிலையின் ஆன்மாவின் தேடல் முடிவு பெறும் நிலையாகும். இதுவே அந்தராத்ம சாதனை என்று அழைக்கப்படுகிறது.

## வேதங்கள் கூறும் முக்கிய செய்திகள் - மகா வாக்கியங்கள்

அறிவிற்கு மூலமான உயிரையும், உயிருக்கு மூலமான தெய்வ நிலையும் உணர்ந்து, தன்னை அம்மெய்ப்பொருளோடு இணைத்து விட்டு, புலன் கடந்த அந்நிலையில் உள்ளுணர்வு விளக்கும் தெய்வீக ஒழுங்கமைப்பு எழுதபட்டதால் வேதம் தெய்வத்தால் ஓதப்பட்டது என்று கூறப்படுகிறது. இதுவே முதல் நூலாகும். எல்லா நூல்களுக்கும் இதுவே அடிப்படையாகும். இந்திய நாட்டில் முனிவர்கள் வேதங்களைப் புனிதமாகக் கருதினர். வேதங்களைத் தங்களது நினைவிலேயே பத்திரமாக வைத்துப் பாதுகாத்ததோடு, செவி வழியாகவே பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்பட்டு வந்தன. நூல்களைப் படிக்காமல் செவிவழியாக கேட்டு அறிந்து கொண்டதால் வேதங்களை ஸ்ருதி என்று அழைத்தனர்.

1. தத்துவமஸி (அதுவே நீயாக இருக்கிறாய்)
2. அகம் ப்ரம்மாஸ்மி (நான் பிரம்மம்)
3. அயம் ஆத்மா ப்ரம்மம் (உள்ளே இருக்கும் ஆத்மாவும் பிரம்மமே)
4. ப்ரக்ஞானம் பிரம்மம் (உயர்ந்த அறிவும் பிரம்மமே)

இந்நான்கும் மகா வாக்கியங்கள் எனப்படுகின்றன.

மனிதன் இயற்கை அழகை இரசிக்கத் தொடங்கினான். இயற்கையின் இரகசியத்தை அறிய வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. இந்தப் பிரபஞ்சத்தை ஒழுங்காக இயக்கிக் கொண்டிருப்பது யார்? எந்த ஆற்றல் என்ற கேள்வி எழுந்தது. அதை அறியக்கூடிய அறிவு நானாக இருக்கிறதே, அந்த நான் யார்? என்ற அடுத்த கேள்வியும் எழுந்தது. இவ்விரண்டு

கேள்விகளையும் ஒரே நேரத்தில் எழுப்பி, அதற்கு பல மகான்களால் தரப்பட்ட விடை தான் தத்துவ ஞானம்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் ஆகிய பஞ்சபூதங்களை பற்றியும், அவற்றால் உண்டான பஞ்ச உணர்வுகளைப்பற்றியும் மனத்தைப் பற்றியும் அறிந்திருந்தனர். மகான் அரவிந்தர், இன்றைய விஞ்ஞானிகளுக்குத் தெரியாத அரிய விஞ்ஞான அறிவை, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே இந்திய ஞானிகளும் முனிவர்களும் அறிந்திருந்தனர் என்கிறார். இந்திய தத்துவ மரபினர், கிருமிகளால் பரவும் நோய்கள், மூலிகை மருந்துகள், இளமையோடு இருக்க வழி. பூவியியல் பூலோக அமைப்பு, விமானம் கண்டுபிடிப்பதற்கு முன்னே ஆகாயத்தில் பறத்தல் போன்றவற்றை அறிந்திருந்தனர். காற்றைத் தூய்மைபடுத்துவதையும், செயற்கை மழையை உண்டாக்கவதையும் அறிந்திருந்தனர்.

## ஆலய வழிபாடு

இறைவன் எங்கும் நிறைந்தவன், புனிதமானவன், எல்லாம் வல்லவன், பேரருளாளன் அவனே அனைத்தும். தனது வாழ்க்கைச் சுமையைத் தாங்க அருள்புரிபவன். அவனை அன்பு வழியிலேயே வணங்க வேண்டும். தாமரை இலைத் தண்ணீர் போல இதயத்தை இறைவன்பால் வைத்துக் கொண்டு வேலையைச் செய்து கொண்டிருக்க வேண்டும்.

உலகமெங்கும் தொன்று தொட்டுச் சிலை வணக்கம் என்ற ஓர் உளப் பயிற்சி முறை பின்பற்றப்பட்டு வருகிறது. பக்தி முறையில் சிலைகளைத் தெய்வங்களாகவே மதித்துப் போற்றி வணங்கி வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். அறிவியல் வளர்ச்சி பெறாதவர்களுக்கும், அறிவியல் குறைபாடு உடையவர்களுக்கும் உளப்பயிற்சியாக ஆலய வழிபாடும், மனத்தை வளப்படுத்துவதற்காக மந்திர - தந்திரங்களும் அமைக்கப்பட்டன.

பஞ்ச பூதங்களையும், தோற்றப் பொருட்களையும் ஆராய்ந்த வேதாந்திகள், முடிவாக அனைத்திற்கும் மூலமாக இருப்பது பிரம்மம் என்ற இறைநிலையே என்று உணர்ந்தனர். அனால் சித்தம் என்ற மனத்தைப் பற்றி ஆராய்ந்து, மனத்தின் மூலமான உயிரை உணர்ந்து, உயிரின் மூலமான இறைநிலையை உணர்ந்தவர்கள் சித்தாந்திகள் அல்லது சித்தர்கள் என்று அழைக்கப்பெற்றனர்.

## ஆறு சமயங்கள் :

பரிணாம வரிசையைக் கொண்டு, சமயம் ஆறு பிரிவுகளாகத் தோன்றியது. அவை 1) சைவம், 2) சாக்தம் 3) வைணவம் 4) சௌரம் 5) காணாபத்தியம் 6) கௌமாரம் என்பனவாகும்.

இயற்கையின் நிலைகளும் ஆற்றல்களும் மறை பொருட்களாக இருப்பதால் அவற்றைப் பொதுவாக மக்கள் உணர்ந்து கொள்ள வழியில்லை. எனவே, அம்மறை பொருட்களின்

குறிப்பை உணர்த்தும் வடிவங்களை வணக்கத்திற்குரிய தெய்வநிலைத் தேர்வுகளாக்கிக் கொடுத்தனர்.

**i) சைவ சமயம் :**

எல்லாவற்றிற்கும் மூலம் சுத்த வெளி என்று உணர்ந்தார்கள். அதுவே சிவம். சிவம் என்ற பூரணப் பொருளையே இறையாகக் கொண்டார்கள். அந்த இறைக்கு உருவமோ, கண், காது, மூக்கோ இல்லை. அந்த இறைக்கு மௌனமாக வடித்துக் கொண்ட சிலைதான் இன்று நாம் காணும் 'சிவலிங்கம்'. பூரணப் பொருளான, ஆதியும் அநாதியுமான சிவ நிலையை வணங்கும் தெய்வமாகத் தேர்ந்து வழிபட்டோர் தங்கள் வாழ்க்கைநெறியைச் 'சைவ சமயம்' என்றார்கள்.

**ii) சாக்த சமயம் :**

கடவுள் மௌனமாக இருக்கிறார் என்றால் நம்மை எப்படிக் காப்பாற்றுவார்? எப்படிப் பேசுவார்? என்ற எண்ணம் ஒரு புதிராக இருந்தது. நேரிடையாகப் பரம்பொருளை விளக்குவதைவிட, பரம் பொருளிலிருந்து தோன்றியிருக்கும் இயக்க நிலையான விண் என்ற சக்தியையே நாம் வணங்கும் பொருளாக எடுத்துக் கொள்ளலாம் என்றனர்.

சிவத்தை ஆளுமை நிலையில் வைத்து ஆணாகவும், சக்தியை பெட்டு (விரும்பி) என்ற அடக்க நிலையில் வைத்துப் பெண்ணாகவும் கற்பித்துக் கொண்டு சக்தி வழிபாடுகளை பெண் உருவத்தில் வழிபட்டனர். சாக்த சமயம் 'துவைதம்' என்றும் பேசப்படுகிறது.

**iii) வைணவ சமயம் :**

விண் என்ற சக்தி சுழன்று கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும் இருக்கின்ற நிலைகளைக் கண்டார்கள். சுழற்சி, சத்தம் என்ற இரண்டு அம்சங்களுக்கும் 'சக்கரம்' 'சங்கு' என உருவம் கொடுத்தபோது, ஒரு கையிலே சக்கரத்தையும், இன்னொரு கையிலே சங்கையும் கொடுத்து, மெய்ப்பொருளுக்கு 'மகாவிஷ்ணு' என்ற உருவம் அமைத்து வழிபட்டோர் தங்கள் வாழ்க்கை நெறியை 'வைணவ சமயம்' என்று சொன்னார்கள்.

தன்முனைப்பின்றித் தன்னைத் தோற்றுவித்த தெய்வத்திற்கே தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். தன் அறிவின் முன்னேற்றத்திற்கு எப்போதும் தெய்வநிலை அறிந்த ஆசானைத் துணை கொண்டு வாழ வேண்டும் என்ற சீரிய முறைகளை இது போதிக்கின்றது. வைண சமயம் 'விசிட்டாத்வைதம்' என்றும் வழங்கப்படுகிறது.

**iv) சௌர சமயம் :**

சூரியனின் வெளிச்சம், வெப்பம் ஆகியவற்றில்தான் உயிர்கள் தோன்றுகின்றன. சூரியன் இல்லாவிட்டால் உணவும் இல்லை. உயிரும் இல்லை. சூரியனின் ஆற்றலே உயிர்களின்

தோற்றம், வளர்ச்சி, அழிவு ஆகியவற்றிற்குக் காரணம் எனத் தேர்ந்து, சூரியனைக் கடவுளாக ஏற்றுக் கொண்டவர்கள் தங்கள் வாழ்க்கை நெறியைச் 'சௌர சமயம்' என்று சொன்னார்கள்.

**v) காண பத்தியம் :**

சிவம் சக்தியாகி, அதிலிருந்து அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்து தன்மாத்திரைகளை விண் கூட்டமாகிய பஞ்சபூதங்களில் உணர்ந்தார்கள். இயற்கைக்கு ஐந்து கரங்கள் என்பதற்குக் குறிப்பாக யானைமுகன் என்ற தோற்றத்தைக் கொடுத்து, அதை தெய்வமாக மதித்து ஒரு சமயத்தை நிறுவி வழிபட்டவர்கள், தங்கள் வாழ்க்கை நெறியைக் 'காணபத்தியம்' என்று சொன்னார்கள்.

vi) **கௌமார சமயம் :**

கடைசியாக மனத்தின் உயர்வை அறியும் முயற்சியில் அகம் நோக்கித் தவம் செய்த சித்தர்கள் மனத்தின் அடித்தளமே அறிவாக, இறைநிலையாகிய சிவமாக உணர்ந்தனர்.சிவம், சக்தி கூட்டால் இந்தப் பிரபஞ்சத்தில் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்ற ஆறு நிகழ்ச்சிகள்தான் என்று உணர்ந்தனர். இவை பேரியக்க மண்டலச் சிறப்புகளாகவும், உயிர்களுக்கு இன்ப துன்ப உணர்வுகளாகவும் உள்ளன. எனவே, இத்தகைய ஆறு நிகழ்ச்சிகளைத் தான் தெய்வமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அளவிலே விளங்கிக் கொண்டனர். ஆறு நிகழ்ச்சிகளை ஆறு முகங்களாகக் கொண்டு 'குமரக்கடவுள்' என்ற ஒரு தோற்றத்தைக் கொடுத்து, ஒரு சமயத்தை நிறுவி வழிபட்டபோது, தங்கள் வாழ்க்கை நெறியை 'கௌமார சமயம்' என்று சொன்னார்கள்.

இந்த ஆறு சமயங்களும் இயற்கையின் பரிணாம நிலைகளில் ஒன்றையோ, முழுமையோ விளங்கிக் கொண்டு இறைநிலைத் தேர்வுகளைப் பெற்றுள்ளன. காலத்தால் இவை ஒன்றோடு ஒன்று இணைந்து கலந்துவிட்டன.

எனவே, எல்லாச் சமயங்களும் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டும் விளக்கங்களேயாகும். எல்லாச் சமயங்களும் இறை உணர்வு, அறநெறி என்ற இரண்டு கருத்துக்களைத் தான் போதிக்கின்றன.

## உலகப்பொது அருள் நெறி சமயம்

இந்த உலகத்திலே எத்தனையோ மதங்கள், சமயங்கள் தோன்றி விட்டன. இந்தக் காலத்திற்கு ஏற்ற ஒரு மதம்/சமயம் அவசியம் வேண்டும். அது இதுவரையில் தோன்றிய எல்லா மதங்களின் உட்கருத்தையெல்லாம் இணைத்துக் கொண்டு எந்த மதத்திற்கும் முரண்பாடு இல்லாமல் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டுமானால் அது கர்மயோகம்தான். கர்மயோகமே உலகப் பொது அருள்நெறி சமயம் ஆகும். சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் கடமையைப் புரிந்துகொண்டு நலம் செய்ய வேண்டியது. இதுவே அறவாழ்வு, கடமை, அறம், கர்மயோகம் எனப்படுகிறது.

❑❑❑❑❑

# 10(A) தவம்-ஒன்பது மைய தவம்

**யோகப்பயிற்சிகள்** புத்தகம் முதல் பதிப்பு - 2018 - ல் பக்கம் 92 முதல் 98 வரை விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

# 10(B) யோகாசனங்கள் பகுதி - II

**யோகப்பயிற்சிகள்** புத்தகம் முதல் பதிப்பு - 2018 - ல் பக்கம் 114 முதல் 120 வரை விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

# பாடத்திட்டம்

| Programame code: | All UG Courses | Programme Title : | Human Excellence | |
|---|---|---|---|---|
| Course code: | 19HEC505 | Course Title ` | Batch : | 2019-22 |
| Hrs/Week: | 2 | Human Excellence - National values & SKY Yoga Practice - v | Semester | V |
| | | | Credits: | I |

**Course Objectives:**

- மக்களின் அடிப்படை உரிமைகள் கடமைகளை உணர்த்தல்.
- வேற்றுமையில் ஒற்றுமை கண்டு தேசிய ஒற்றுமையையும் அமைதியையும் நிலைநாட்டல்.
- தேசநலனுக்கு தொண்டினை மேம்படுத்தி மதங்களிடையே சகிப்புத்தன்மையை வளர்த்தல்.

| | | |
|---|---|---|
| K1 | CO1 | தேச ஒற்றுமை மற்றும் அமைதிக்கு அடிப்படை உரிமைகள் கடமைகளை நினைவு கூர்த்தல் |
| K2 | CO2 | இந்திய தத்துவ முறைகள் மற்றும் இந்திய பெரியோர்களின் சிறப்புகளை உணர்தல் |
| K3 | CO3 | உடல் மற்றும் மனவளத்தை மேம்படுத்தி தொண்டும் தியாகமும் மூலம் தேசநலன் காத்தல் |
| K4 | CO4 | ஆன்மீக வளர்ச்சியால் மதங்களிடையே சகிப்புத்தன்மையை வளர்த்து தேச ஒற்றுமையை நிலைநாட்டல் |

**Syllabus**

| | |
|---|---|
| அலகு - I | செம்மாந்த குடியுரிமை - அடிப்படை உரிமைகளும் கடமைகளும் - நேருவின் இந்திய முன்னோக்கு பார்வை - வளர்ந்து வரும் இந்தியா - உலகளவில் இந்திய இளைஞர்களின் பங்கு. |
| அலகு - II | வெளிநாட்டவர் பார்வையில் இந்தியா - இந்திய வேத இலக்கியங்களின் மேன்மை - இந்தியப் பெரியோர்களின் சிறப்புகள் - இந்திய கலாச்சாரத்தின் மேன்மை - இதிகாசங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள். |
| அலகு - III | இந்தியாவும் அமைதியும் - போருக்கான காரணிகள் - உலக அமைதி திட்டங்கள் - இந்தியா உலகத்திற்கு வழங்கும் செய்தி - உலகம் கண்டுணர்ந்த இந்திய தத்துவ முறைகள். |
| அலகு - IV | தொண்டும் தியாகமும் - அன்னை தெரசாவின் தொண்டு - வேற்றுமையில் ஒற்றுமை - ஒற்றுமையின் அவசியம் - காந்திய கொள்கைகளும் தேசிய ஒற்றுமையும் - இந்தியாவும் ஆன்மீகமும் - ஆன்மீகத்தின் வளர்ச்சி - ஆறு சமயங்கள். |

| | |
|---|---|
| அலகு - V | தவம் V - ஒன்பது மைய தவம் - யோகாசனம் பகுதி - II (1.மண்டூகாசனம் 2.மச்சாசனம் 3.நவாசனம் 4.பவன முக்தாசனம் 5.உத்தான பாதாசனம் 6.புஜங்காசனம் 7.தனுராசனம் 8.நவுக்காசனம் 9.சலபாசனம் 10.மக்கராசனம்) - மீள்பார்வை (காயகல்பப் பயிற்சி - கைப்பயிற்சி - கால்பயிற்சி - நுரையீரல் தசைநார் மூச்சுப்பயிற்சி - கண்பயிற்சி - கபாலபதி பயிற்சி) |

* Italicized texts are for self study.

Power point Presentations, Group discussions, Seminar ,Quiz, Assignment, Experience Discussion, Brain storming, Activity, Case study, Video playing.

**Books for study:**


1. Kuppusamy. M. et al., (2015). National values. Forth Edition. Pollachi : NGM College. (Tamil version). pp.72.
2. WCSC - Vision for wisdom (compilation). (2018). Yoga practices.First edition. Pollachi: NGM College. (Tamil version). pp: 124.


**Reference Books:**


1. Rajkumar.N. Et al., (2003). Ethics and culture. Pollachi: NGM College. (Tamil version). pp: 111.
2. Jawakarlal Nehru. (1998). Discovery of India. Sixth edition. New Delhi: Indra Prasad. pp: 582
3. Lakshmanan.K. (2008). Indian Philosophy.Nineth edition. Chennai: Asian publications. pp: 437.
4. WCSC - Vision for wisdom (compilation).(2018).Yogasanans, 16th Edition. Erode: Vethathiri publication (Tamil version). pp: 64
5. M.K. Gandhi. (2016) An Autobiography, (English Version) 8th Edition, New Delhi, Rupa Publications India Pvt. Ltd., pp: 519
6. R. Nandagopal & Ajith sankar R.N., Indian Ethos and Values in Management, New Delhi, Tata McGraw Hill Education Private Ltd., 2011.
7. An Autobiography or The story of my experience with truth, M.K. Gandhi, New Delhi, Rupa publications, 2011.
8. A. L. Natarajan, Life history of Mahaveer, Chennai, Amrudha publications, 2006.
9. Vethathiri maharishi, (2011) Karma yoga, 6th edition. Erode, Vethathiri publications, pp: 114.

மதிப்பெண்கள் : 50

ஐந்தாம் பருவம் காலம் : 2 மணி நேரம்

மாதிரி வினாதாள்

## மனித வள மாண்பு - தேசிய விழுமியங்கள் மற்றும் sky யோகப் பயிற்சிகள் - V

### பிரிவு-அ

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொற்களில் /தொடர்களில் விடை அளிக்கவும்.**

(10 x 1 = 10)=10 மதிப்பெண்கள்

1) உலகிலேயே மிகப்பெரிய ரயில்வே அமைப்பு உள்நாடு......................... K1

அ) இந்தியா ஆ) சீனா இ) அமெரிக்கா ஈ) இங்கிலாந்து

2) தேசமே எனது சொத்து, வாய்மையே எனது உயிர் மூச்சு என வாழ்ந்தவர்................. K1

3) .......................... குணமுடைய மனிதர்களால் போர் உண்டாகிறது. K1

அ) ரஜோ ஆ) சத்துவ இ) வஞ்ச ஈ) ஏதுமில்லை

4) ஏதோ ஒரு பொருள் மீது, செயல்மீது, நினைவின் மீது மனதை நிறுத்தி வைக்கப் பழகுவது .......................... K1

அ) தியானம் ஆ) பிராத்தியாகாரா இ) தாரணா ஈ) சமாதி

5) மனித குலம் போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். இல்லையேல் போர் மனித குலத்தை முடித்துவிடும் எனக்கூறியவர் யார்? K1

அ) நேரு ஆ) காந்தியடிகள் இ) காமராஜர் ஈ) கென்னடி

6) அடிப்படை கடமைகளில் எவையேனும் ஒன்றை எழுதுக. K2

7) அன்புதான் கடவுள், உலகத் துயரங்கள் அனைத்தும் அன்பினால் போகும் எனக்கூறியவர் யார்? K2

8) இருபெரும் இதிகாசங்களில் ஏதேனும் ஒன்றை எழுதுக. K2

9) ஒன்பது மைய தவத்தில் ஐந்தாவது மையத்தில் தொடர்புடைய நாளமில்லாச் சுரப்பியின் பெயரை எழுதுக. K2

10) 2000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா முழுவதும் மற்றும் ஆசியாவின் பல்வேறு நாட்டவரையும் ஈர்த்த பல்கழைக்கழகம் எது? K2

## பிரிவு - ஆ

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

**( 5 X 8 = 40 மதிப்பெண்கள்)**

11) இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள், கடமைகள் குறித்து எழுதுக. K3

12) இந்தியா எதிர்நோக்கும் சவால்களை எழுதுக. K4

13) அன்னை தெரசாவின் அருள் தொண்டை எழுதுக. K3

14) இந்தியாவின் பல்துறை முன்னேற்றத்தை விவரி K4

15) இந்திய கலாச்சாரத்தின் மேன்மைகளை விவரி. K3

16) வேதாத்திரி மகரிஷியவர்களின் உலக அமைதி திட்டத்த விவரி. K4

17) தியாகத்தின் மேன்மையை விளக்கி கட்டுரையை விளக்குக. K3

18) ஒன்பது மைய தவத்தின் சிறப்புகளை விவரி. K4

*******